ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATION

MAY — 1955

சென்னை மாநில எய்டட் பள்ளி மானேஜர்கள்
சங்கத்தின் புதிய தலைவர்
திரு. பி. வீரராகவன்

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

வருட சந்தா ரூ. 3.] **[தனிப் பிரதி 4 அணா.**

மலர் 16 மே 1955 இதழ் 5

முன்னாள் முதலமைச்சர் முழங்குகிறார்!

கடுங் கோபம் பிறந்துவிட்டது அன்பர் ஆச்சாரியாருக்கு!

சென்னை மாநிலத்தின் அம் முன்னாள் முதலமைச்சருக்கு மட்டும்தானா—இந்நாள் கல்வி யமைச்சர் உயர்திரு சுப்ரமண்யனாருக்கும் கோபம் கொழுந்துவிட்டெரிகிறது.

அமைச்சர்களுடைய நெஞ்சிலே மட்டுமல்ல தமிழ் மக்கள் அத்தனை பேருடைய உள்ளங்களிலேயும் வேதனையும் வெறுப்பும் தாண்டவமாடத்தான் செய்கின்றன.

தமிழ் பேசும் நல்லுலகத்து மக்கள் மட்டு மல்ல, ஆந்திரர்கள், கன்னடியர்கள், மலையாளிகள் முதலிய தென்னாட்டு மக்கள் அனைவருமே அடங்காத கோபம் கொண்டவர்களாகத்தான் காணப்படுகின்றனர்.

வங்காளிகளுக்குக்கூட வெறுப்புத்தான். பஞ்சாபியர்களுடைய நிலைமையும் அப்படியே. மராட்டிய இனத்தவர் மனதிலேயும் கோபப் புயல்தான் மூண்டெழுகிறது.

ஹிந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் தவிர ஏனைய இந்திய இனத்தவர் அத்தனைபேர் நெஞ்சிலேயும் ஆத்திரமும் அருவருப்பும் கிளர்ந்தெழத்தான் செய்கின்றன.

1965 முதல் ஐ. ஏ. எஸ். முதலிய அகில இந்திய 'சர்விஸ்' களுக்கான எல்லாப் பரீட்சைகளும் — வாய் மொழிப் பரீட்சைகள் உட்பட — இந்தியில்தான் நடத்தப்படும் என்று 6–4–55 அன்று இந்திய அரசாங்கம் அறிவிக்கிறது.

அந்த அறிவிப்பைக் கேட்டதும்தான் அனைவர் உள்ளங்களிலே யும் கோபம் பிறக்கிறது; வெறுப்பும் உண்டாகிறது.

இதை ஒரு நாளும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று வீர முழக்கமிடுகிறார் கல்வி யமைச்சர் சுப்ரமண்யனார்.

கல்வியமைச்சர், காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவர். இந்திய அரசாங்கத்தை நடத்திச் செல்பவர்களும் காங்கிரஸ் கட்சி யைச் சேர்ந்தவர்களே. என்றாலும் கனம் சுப்ரமண்யம் தெள்ளத் தெளிவாகக் கூறுகிறார், சென்னை அரசாங்கம் இந்த முடிவை ஒரு போதும் ஏற்க முடியாது என்று.

கல்வியமைச்சராவது பிரச்சினையை அழகு தமிழால் எழில்பட விளக்குவதோடு நின்றுவிட்டார். ஆனால் முன்னாள் முதல்வர் ஆச்சாரியாரோ கோபம் கொப்பளிக்கும் நிலையினராக மாறிவிட்டார்.

"கல்கி" "மித்திரன்" முதலிய பல ஏடுகளில் கடுங்கோபத் தோடு கட்டுரைகள் தீட்டியிருக்கிறார் அன்பர் இராசகோபாலாச்சாரி யார்.

"பெரிய உத்தியோகங்களுக்கு, அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த ஸ்தானங்களுக்கு, அன்னிய பாஷையில், தமிழருக்கு அன்னியமான ஒரு பாஷையில்தான் எல்லாப் பரீட்சைகளையும் நடத்துவோம், அதில் தேறியவர்களைத்தான் ஸ்தானங்களுக்கு எடுப்போம் என்று சொன்னால் யாருக்குத்தான் கோபம் வராது? எனக்குமே கோபந்தான்."

என்று அவர் எழுதியிருக்கிறார்.

ஏன் இவ்வளவு கோபம் பிறக்கிறது ஆச்சாரியாருக்கு? அதற் கான காரணத்தையும் அவரே தெளிவாக இயம்பியிருக்கிறார்.

இதோ முன்னாள் முதல்வர் அன்பர் ஆச்சாரியாரே பேசுகிறார், கேளுங்கள் :—

" தமிழ்க் குழந்தைகள் இந்தியையும் படிப்பார்கள். தேறுவார்கள். எந்தப் பாஷையுமே படித்துத் தேறுவார்கள். ஆங்கிலத்தையே படித்து எல்லாப் பெரிய உத்தியோகங்களிலும் தங்களையே தேர்ந்தெடுக்கும் அளவுக்குப் போட்டியில் தமிழர்கள் தேறியிருக்கவில்லையா ? தமிழ்க் குழந்தைகள் இந்தியைப் படித்துவிடுவார்கள், சந்தேகமில்லை. சந்தேகம் எதுபற்றியென்றால் இன்னும் பால் குடிக்கும் பருவம் தீராத இந்தி பாஷையாகிய குழந்தையைப் பற்றித்தான். இந்தி பாஷையானது தற்போது பலவீனமான நிலையில் இருக்கிறது. ஹிந்தி ஆங்கிலத்துக்குச் சமம் இல்லை என்பதில் வியப்பில்லை. தமிழுக்கும் சமம் இல்லை. வங்காளி பாஷைக்கும் சமமில்லை. மராட்டி பாஷைக்கும் சமம் இல்லை. இந்த நிலைமையில் செய்யவேண்டியது என்ன ? தமிழ்க் குழந்தைகளை மிரட்டுவது அல்ல. இந்தி பாஷையை மிரட்டி அதைக் கொஞ்சம் மேலே தூக்கவேண்டும். எல்லா விஷயங்களிலும் இந்தி பாஷை மூலமே பரீட்சை செய்யும் அந்தஸ்துக்கு இன்னும் இந்தி வரவில்லை."

ஆமாம் நண்பர்களே ! இந்தி மொழிக்கு அந்த அந்தஸ்து இன்னமும் ஏற்படவில்லை,

என்றைக்காவது ஏற்படுமா என்றால் அதுவும் சந்தேகத்திற்குரிய ஒரு பிரச்சினைதான்.

பரீட்சைகளுக்குரிய மொழியாக விளங்குவதற்குத் தேவையான தகுதி இந்தி மொழிக்கு இல்லை.

ஆமாம். ஆனால் உண்மை அந்த அளவோடு நின்றுவிடவில்லை. பரீட்சைகளுக்கு மட்டுமல்ல, பொதுவாகவே, ஹிந்தி, இன்னமும் குழந்தைப் பருவத்திலேயே உள்ள ஒரு மொழி. வளர்ச்சியும் விறுவிறுப்பும் அடையாத பாலபருவம் அதனுடையது.

இந்தி மொழியின் வளர்ச்சியின்மையும் இலக்கிய வறுமையும் எவ்வளவு பயங்கரமானவை என்பதையும் ஆச்சாரியார் விளக்காமல் இல்லை. அவர் கூறுகிறார் :—

" தில்லி மக்கள் சபையில் ஏதாவது ஒரு விஷயத்தை எடுத்துப் பேசினால், ஆங்கிலத்தில் பேசும்போது, பிரதம மந்திரி ஜவகர்லால் நேரு முதல் ஓரளவு படித்த அங்கத்தினர் வரை சுருக்கமாகப் பேசி முடிக்கிறார்கள். விஷயத்தை ஐயமறச் சொல்லிவிடுகிறார்கள். ஆனால், ஹிந்தி பாஷையை உபயோகிக்

கும்போது திரும்பத் திரும்ப ஒரு முறை சொன்னதைப் பன்முறை கூறி, விஷயங்களை விளக்கித் துப்புரவாய்ச் சொல்லக் கஷ்டம் படுகிறார்கள். மொழியின் வறுமையும், வளர்ச்சிக் குறைவும், திட்டமான பொருளில் சொற்களைப் பிரயோகிக்கும் வழக்கம் இன்னும் இந்தியில் ஏற்படாமல் இருப்பதுமே இந்தக் கஷ்டத்துக்குக் காரணம். ஆனபடியினால் தமிழ் மக்களைப் பள்ளிக்கூடம் போகச் சொல்லுவதைப் பார்க்கிலும் இந்தி மொழியைப் பள்ளிக்கூடம் போகச் சொல்லுவது முதற் கடமை. பரீட்சையில் தேற வேண்டியது தமிழ்க் குழந்தைகள் அல்ல. இந்தி பாஷையானது முதலில் தேறியாக வேண்டும்.''

இதைவிட விளக்கமாக, நிலைமையை, யார்தானாகட்டும், எப்படிச் சொல்ல முடியும்?

தெள்ளத் தெளிவாக விளக்கிவிட்டார் பிரச்சினையை.

மற்றவர்களைப் பரீட்சை செய்யும் தகுதியோ திறமையோ இன்னமும் இந்தி மொழிக்கு ஏற்படவில்லை; அந்த மொழியே முதலில் பள்ளிக்கூடம் சென்று படித்தறிந்து பிறகு பரீட்சைக்கும் போய்த் தேர்ச்சி பெற்றாக வேண்டும் என்று தெரிவிக்கிறார்.

எந்தப் பொருளில் எந்தச் சொல்லைப் பயன்படுத்துவது என்கிற வழக்கமே இந்தியில் இன்னமும் ஏற்படவில்லை என்கிறார்.

சாதாரண உறுப்பினர்கள் மட்டுமல்ல பண்டித நேரு போன்றவர்களால்கூட, இந்தியில், எந்தப் பிரச்சினையையும் எளிதில் விளக்க முடியவில்லை — அத்தனைப் பலவீனமான நிலையில், கிடந்து தத்தளிக்கிறது இந்தி என்று இயம்புகிறார்.

இப்படிப்பட்ட பரிதாப நிலையில் உள்ள ஒரு மொழியில் பரீட்சைகள் அத்தனையையும் நடத்துவது என்றால், அதனால் குழப்பமும் திறமைக் குறைவும் தவிர வேறென்ன விளையும் என்றும் கேட்காமல் கேட்கிறார்.

உண்மைதானே அவர் கேட்பது? இந்திமொழிக்கு ஏது அத்தனைப் பெரிய அந்தஸ்து?

1965-ம் ஆண்டு முதல் அகில இந்திய உத்தியோகங்களுக்கான பரீட்சைகள் அத்தனையையும் இந்தியிலேயே நடத்தப் போகிறோம் என்று இந்திய அரசாங்கத்தார் எளிதில் கூறிவிட்டார்களே தவிர உண்மையில் அது நடக்காத காரியம்.

பொருளாதாரம், விஞ்ஞானம், உயர் கணிதம், அரசியல், சட்டம் முதலிய பல்வேறு துறைகளில் இந்தி இன்னமும் முதல் படியைக் கூட அடையவில்லை.

இந்தத் துறைகளில் எல்லாம் தமிழ் மொழியில் ஏற்பட்டிருக்கிற அளவு வளர்ச்சிகூட இந்தி மொழியில் ஏற்படவில்லை.

இந்த நிலையில் இந்தியால் அத்தனைப் பெரிய பொறுப்பை எப்படி ஏற்று நடத்தமுடியும்?

இரண்டடி உயரமுள்ள குள்ளனால் இருபதடி உயரமுள்ள சுவரை எப்படி எகிறிக் குதிக்கமுடியும்?

நடக்காத செயல் இது என்பதுமட்டு மல்ல, தீமை பயக்கும் திட்டமும் ஆகும்.

இப்போது உள்ள நிலையில், அனைத்திந்திய சர்விஸ்களுக்கான பரீட்சைகளை இந்தி மொழி ஒன்றில் மட்டுமே நடத்துவதானால், அதனால் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட அந்த ஒரு கூட்டத்திற்கு மட்டும்தான் நன்மை. ஏனைய மொழிகள் பேசும் மக்களுக்கெல்லாம் தீமையே.

தென்னாட்டு மக்களில், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத் தவிர மற்றவர்களுக்கெல்லாம் இந்தி மொழியே தெரியாது.

இந்தியைக் கற்றறிந்து அதிலே பட்டங்களும் பெற்றதாகச் சொல்லிக் கொள்ளும் ஒரு சில தென்னிந்தியர்களும் உண்மையில் அந்த மொழியில் போதுமான தேர்ச்சி பெற்றதாகச் சொல்ல முடியாது.

ஏதோ நாங்களும் இந்தி படித்திருக்கிறோம் என்று சொல்லிக் கொள்வதற்குத்தான் அவர்களுடைய பயிற்சி பயன்படுமே தவிர, ஐ. ஏ. எஸ். முதலிய பரீட்சைகள் இந்தி மொழியிலேயே நடத்தப்படுமானால் அவற்றிலே தேர்ச்சி பெற அது உதவாது.

இந் நிலையில் இந்தியிலேயே எல்லாப் பரீட்சைகளும் என்று சொன்னால், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் தவிர, ஏனைய இனத்தவர்கள் எப்படித் தேறமுடியும்?

தேறவில்லை யென்றால் அவர்களுக்கெல்லாம் மத்திய சர்விஸ்களில் எப்படி இடம் கிடைக்கும்?

இடம் கிடைக்காது என்றால், அனைத்திந்திய உத்யோகங்கள் அத்தனையிலும் இந்தி மொழியினர் மட்டுமே செங்கோல் ஓச்சவும், ஏனைய மொழியினரெல்லாம் ஒதுக்கித் தள்ளப்பட்டதுமான நிலை தானே உருவாகும்?

இப்படியெல்லாம் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கம் ஒரே ஒரு மொழியினரிடம் சென்று குவியுமானால் ஏனைய மொழியினரெல்லாம்

அந்த ஆதிக்கத்தை வெறுக்கவும் பகைக்கவும் எதிர்க்கவும் மறுக்கவும்தானே முன்வருவர் ?

இதனால் இந்தியாவின் ஒற்றுமை குலைந்து, பல்வேறு மொழியினர் பல்வேறு திசைகளில் செல்வதான விபரீதம்தானே உருவாகும் ?

இப்படிப்பட்ட பயங்கர விளைவுகளை யெல்லாம் ஏன் உருவாக்க வேண்டும் இன்றைய மத்திய அரசு ?

ஆகவேதான் அன்பர் ஆச்சாரியாரும் சரி, அமைச்சர் சுப்பரமண்யனும் சரி, வேண்டாம் இந்த விபரீதச் செயல் என்று "சிவப்பு விளக்கு" காட்டுகின்றனர்.

அழுத்தந் திருத்தமாகவே கூறுகிறோம்: மத்திய அரசாங்கப் பரீட்சைகளை யெல்லாம் இந்தி மொழியிலேயே நடத்துவது என்கிற திட்டத்தை மத்திய அரசு உடனே கைவிட்டுவிட வேண்டும்.

கைவிட்டால்தான், இந்திய ஒற்றுமை நிலைக்கும்; இந்தி மொழியாளர்களுக்கும் ஏனைய மொழியாளர்களுக்குமிடையே அன்பு தவழும்; மத்திய அரசாங்கத்தில் ஒரே ஒரு கூட்டத்திற்கு ஆதிக்கம் என்கிற நிலைமை இல்லாது ஒழியும்.

மத்திய அரசாங்கப் பரீட்சைகள் அனைத்தையும் இந்தி மொழியிலேயே **இப்போது** நடத்த வேண்டாம் என்று இன்றைய அமைச்சர் சுப்ரமண்யனும் முன்னாள் அமைச்சர் ஆச்சாரியாரும் இயம்புகின்றனர்.

ஆனால் நாம் இன்னமும் ஒரு படி மேலே போய், மேலும் சற்றுத் தெளிவாகவே கூற விரும்புகிறோம். இப்போது பட்டுமல்ல எப்போதுமே இந்தி மொழியில் அப் பரீட்சைகளை நடத்தவேண்டாம்.

பரீட்சைகளை நடத்த வேண்டாம் என்பது மட்டுமல்ல, மத்திய அரசாங்க மொழியாகக்கூட இந்தி இருக்க வேண்டாம்.

தமிழர், தெலுங்கர், மலையாளியர், கன்னடியர், குஜராத்தியர், மராட்டியர், வங்காளியர், பஞ்சாபியர் என்று பற்பல மொழி பேசும் பல்வேறு மக்கள் இந்தியாவில் உள்ளனர்.

இவர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும், மத்திய அரசாங்கத்தை நடத்திச் செல்லவும், மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கங்களோடு உறவு கொள்ளவும், பல்வேறு மாகாண அரசாங்கங்கள் ஒன்றோடொன்று உறவு கொள்ளவும் இப்போது ஆங்கிலம் பயன் பட்டு வருகிறது.

இந்தத் துறைகள் அனைத்திலும் இனியும் ஆங்கிலத்தையே தொடர்ந்து பயன்படுத்திவரலாம்.

மத்தியப் பாராளுமன்றத்தில் இப்போது ஆங்கிலம் பயன் படுத்தப்படுகிறது. இனியும் அதுவே பயன் படுத்தப்படலாம்.

இந்தத் துறைகளிலெல்லாம் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு எதற் காக இந்தியை நுழைக்கவேண்டும் என்பது நமக்குப் புரியவில்லை.

ஆங்கிலம் அன்னிய மொழி அல்லவா—ஓர் அன்னிய மொழி யிலே நம்முடைய மத்திய அரசாங்கத்தை நடத்திவருவதா—இது நமக்கு அவமானமல்லவா என்று சிலர் கேட்கக்கூடும்.

ஆங்கிலம் அன்னிய மொழி யென்றால் இந்தி மட்டும் என்ன மொழி? இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் தவிர ஏனைய எல்லா இந்தியர்களுக்கும் இந்தி மொழியும் அன்னிய மொழிதானே?

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னால் நாம் அனைவரும் ஆங்கிலத்தை ஓரளவு வெறுக்கவேண்டி யிருந்தது என்றால் அதிலே பொருளுண்டு.

அன்றைய நிலையிலே ஆங்கிலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தால் நம் மீது வலுக் கட்டாயமாகச் சுமத்தப்பட்டது.

நம்முடைய நாட்டின்மீது பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் பிடி அழுத்தமாக விழுந்திருப்பதின் ஓர் அடையாளச் சின்னமாக விளங் கியது ஆங்கிலம் அன்று.

ஆகவே நாம் அதனை அன்று ஓரளவு வெறுக்க வேண்டி யிருந்தது முறைதான்.

ஆனால் இன்றைய நிலை அது அல்ல. இந்தியா விடுதலை பெற் றுவிட்டது இப்போது. ஆங்கிலத்தை நம்மீது வலுக்கட்டாயமாகச் சுமத்துபவர்கள் எவரும் இல்லை. இனியும் நாம் ஆங்கிலத்தின்மீது பகைமை பாராட்டுவது பொருளற்ற செயல்.

இதனை நன்றாக உணர்ந்த காரணத்தால் தான் அண்மையில் நடைபெற்ற எயிடட் மானேஜர்களின் மாநில மாநாட்டில், மீண்டும் 4-வது வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஆங்கிலம் வேறு. ஆங்கில ஏகாதிபத்தியம் வேறு.

ஆங்கில ஏகாதிபத்யம் தொடர்ந்து இருப்பதையோ, மீண்டும் ஏற்படுவதையோ நாம் ஒருநாளும் விரும்ப முடியாது.

ஆனல் ஆங்கில மொழி மத்திய அரசாங்க மொழியாகத் தொடர்ந்து இருப்பதிலே தவறு துளியும் கிடையாது.

தவறு இல்லை என்பது மட்டுமல்ல; நன்மைகள் ஏராளம்.

ஆங்கிலம் ஏற்கெனவே அந்நிலையில் இருந்து பண்பட்டுப் பக்குவமான நிலையை அடைந்திருக்கிறது. இந்தி மொழிக்கோ இனித்தான் அந்நிலை ஏற்பட வேண்டும்.

ஆங்கிலம் உலகப் பொது மொழியாக இருந்துவருகிறது. பிற நாடுகளோடு தொடர்புகொள்ள அதன் துணை கட்டாயம் தேவை. ஐக்கிய நாடுகள் சபை போன்ற உலக மன்றங்களின் நிகழ்ச்சிகளெல் லாம் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே நடத்தப்படுகின்றன. ஆங்கி லத்தின் துணை இருந்தால் நாம் உலகத்தின் எந்தப் பகுதிக்கும் எளி தில் சென்றுவந்து விடலாம். இந்தி மொழிக்கு இந்தத் தகுதி இன்றும் இல்லை. இனியும் ஏற்பட வழி இல்லை.

உலக அறிவுச் செல்வம் ஆங்கிலத்தில் குவிந்துள்ள அளவு வேறு எந்த மொழியிலும் இல்லை. விஞ்ஞானம், பொருளாதாரம், அரசியல், உயர் கணிதம், மருத்துவம், பொறியியல் முதலிய இக் காலக்கலைகள் பல மிகஉயரிய நிலையைஅடைந்திருப்பது ஆங்கிலத்தில் தான். ஆங்கிலத்தைப் பயில்வதன் மூலமாக நம் தாய் மொழியில் இல்லாத இந்த அரிய கலைகளின் உயரிய வளர்ச்சியை நாம் காணவும், அதில் பங்கு பெறவும் முடியும். ஆனல் இந்தி மொழியிலோ இத் தகைய புத்தறிவுச் செல்வம் எதுவும் இல்லை. நம் தமிழ்மொழி அளவில் பாதி அளவுக்குக்கூட, இத்துறையில் இந்தி வளர்ச்சி யடையவில்லை.

இந்தி, இந்தியாவின் பொதுமொழியாக இருந்தால், இந்தி மொழியாளர்களுக்கு,தமிழ் முதலிய மொழியாளர்களுக்கு இல்லாத ஒரு தனி ஆதிக்கம் ஏற்பட்டுவிடும். இந்தி மொழியாளர்கள் தங்கள் தாய்மொழி ஒன்றை மட்டுமே கற்றல் போதும். ஏனைய மொழி யினரோ, தங்கள் தாய்மொழி, இந்தி, இரண்டையும் கற்றாக வேண் டும். அப்படியே கற்றாலும், இந்தி மொழியினருக்கு அம்மொழி யில் இயற்கையாகவே ஏற்படக்கூடிய புலமை, தமிழ் முதலிய மொழியினருக்கு இந்தி மொழியில் ஏற்பட முடியாது. ஆங்கிலமே தொடர்ந்து இந்தியாவின் பொது மொழியாக இருந்துவிட்டால் இந்த இடர்ப்பாடுகளும் பாரபட்சமான நிலைமையும் ஏற்படமாட்டா. இந்தியாவில் உள்ள அனைவருக்குமே ஆங்கிலம் வேற்றுமொழி. ஆகவே அந்நிலையில் இந்தியர் அனைவருமே தங்கள் தாய்மொழி, ஆங்கில மொழி, ஆகிய இரண்டு மொழிகளைக் கற்றாக வேண்டும். ஒரு சிலர் ஒரு மொழியை மட்டுமே கற்பது, பிறரெல்லாம் இரு மொழிகளைக் கற்பது, என்கிற பேதநிலை இருக்காது.

இந்தக் கருத்துக்களையெல்லாம் முன்னால் நிறுத்திப் பார்க்கும் போது இனியும் தொடர்ந்து ஆங்கிலத்தைப் பொதுமொழியாகக் கொள்வதே முறை என்கிற உண்மை தெற்றென விளங்கும்.

ஆங்கிலம் இனியும் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று நாம் கூறுவது, இந்தியாவின் பொது மொழியாக மட்டும் அதாவது மத்திய அரசாங்க மொழியாக மட்டும் இருப்பதற்குத்தான்.

இப்போது அது மாகாண அரசாங்கத்தின் மொழியாகவும் இருந்துவருகிறது. இனி இது கூடாது.

கல்லூரிகளில் போதனை மொழியாகவும் நீதி மன்றங்களில் வழக்கு மொழியாகவும் இப்போது அது இருக்கிறது. இனி இதுவும் கூடாது.

மாகாண சட்டசபைகளின் நிகழ்ச்சிகள் ஆங்கிலத்திலேயே இப்போது நடைபெறுகின்றன. இனிமேல் இப்படி இருத்தல் ஆகாது.

மாகாண அரசாங்கத்தின் ஆட்சி மொழியாகவும், கல்லூரிகளின் பயிற்சி மொழியாகவும், சட்டமன்றங்களின் வழக்கு மொழியாகவும், நீதி மன்றங்களின் நிகழ்ச்சி மொழியாகவும் அந்தந்த மாகாணத்தில் அந்தந்த மாகாணத்துத் தாய் மொழியே விளங்கவேண்டும்.

எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டில், இத்துறைகள் அனைத்திலும் தமிழே ஒளிவீசித் திகழவேண்டும். அப்படியே தெலுங்கு நாட்டில் தெலுங்கு. மராட்டிய நாட்டில் மராட்டி. இந்திப் பிரதேசத்தில் இந்தி.

ஆனால் மத்திய அரசாங்கம், மத்திய மேல்சபை—கீழ்சபை, சுப்ரீம் கோர்ட், மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கங்கட்கும் தொடர்பு, மாகாண அரசாங்கங்கள் ஒன்றிற்கு ஒன்று தொடர்பு—இத்துறைகளிலெல்லாம் ஆங்கிலம் இருக்கவேண்டும்.

மாகாணம், மாகாணத்திற்கு உட்பட்ட விவகாரங்கள்—இவற்றிற்கு மாகாணத்து மொழி.

மாகாணத்திற்கு அப்பாற்பட்ட விவகாரங்கள், மத்திய விவகாரங்கள்—இவற்றிற்கு ஆங்கிலம்.

தமிழ் தெலுங்கு முதலிய மாகாண மொழிகளுக்கு உள்ள உரிமைகளைவிட அதிகப்படியாக ஒரு துளி உரிமையும் இந்தி மொழிக்குக் கிடையாது. அதுவும் ஓர் மாகாண மொழியே—தேசிய மொழி அல்ல.

இந்தவிதமாக இந்திய அரசாங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டு, இதற்கு ஏற்ற வகையில், இந்திய அரசியல் திட்டத்தையும் திருத்திவிட்டால், பின்னர், இந்தியாவில், மொழிவழிப் பகைமையோ சிக்கலோ, பூசலோ பிணக்கோ ஏற்படமாட்டா.

ஆனால் இப்படிச் செய்ய வேண்டுமே இந்திய அரசு! செய்யுமா!

எதிர்காலம்தான் விடை கூறவேண்டும்.

திரைப்படக் கலையா?
கருத்துக் கொலையா?

கிழிந்துபோன சட்டை, ஓட்டுத் தையல் வேட்டி, பொத்தல் பொத்தலான கோட்டு, வாடிச் சுருங்கிய முகம், தள்ளாடித் தடியூன்றும் நிலை—இப்படிப்பட்ட சோக சித்திரங்களாக ஆரம்ப ஆசிரியர்களிற் பலர் ஒரு காலத்தில் இருந்து வந்தனர்.

ஆனால் இந்தக் காலத்திலோ நிலைமை முற்றிலும் மாறிவிட்டது.

களை வீசும் முகம், ஒளிபொருந்திய கண்கள், ஒழுங்காக வாரிவிடப்பட்ட தலை, பால்போல் வெள்ளிய வேட்டி, உற்சாகத்தை அள்ளி வழங்கும் உள்ளம்—இவர்தான் ஆரம்ப ஆசிரியர் என்று சொல்லத்தக்க வகையில் மாறுதல் ஏற்பட்டுவிட்டது.

ஆசிரியர்களுடைய ஊதியம்தான் இன்னமும் உயரவில்லையே தவிர அவர்களைப் பரிதாபத்திற்குரிய பகவானின் படைப்புகளாகக் கருதிவந்த காலம் மாறிவிட்டது.

அவர்களுடைய அரும்பணியைக் கண்டு, அந்தப் பணியால் விளையும் அரிய நன்மைகளைக் கண்டு, அந்த நன்மைகளெல்லாம் நாட்டை முன்னேற்றத்திற்குத் தள்ளும் முதல் தரமான வெற்றிகள் என்பதைக் கண்டு, தமிழர் சமுதாயம் மகிழ்ச்சிப் பவனிவரும் நேரம் இது.

ஆசிரியர்களின் தொண்டு உயர்ந்ததும் உன்னதமானதும் ஒப்பற்றதும் உறுதி நிறைந்ததுமாகும் என்பதை அறிவுடையவர் அனைவரும் அறிந்து, உணர்வுடையவர் அனைவரும் உணர்ந்து, வாயுடையவர் அனைவரும் பாராட்டிவரும் வேளை இது.

அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் போட்டி போட்டுக்கொண்டு ஆசிரியர் உலகத்திற்குப் புகழ் மாலைகளைக் குவித்துவருகிற சகாப்தம் இது.

மிக விரைவிலே அவர்களுடைய ஊதியம் உயரப்போகிறது என்பதற்கான அறிகுறிகள் தெள்ளத் தெளிவாகத் தோன்றிவிட்ட நற்காலம் இக்காலம்.

ஊதியம் உயராவிட்டாலும்கூட, உயர்த்த இயலவில்லை என்று ஆட்சிப் பீடத்தவர்கள் கைகளைப் பிசைந்தவண்ணம் கனிவுமிக்க குரலில் கூறிய போதிலும்கூட, உயர்த்தாமலிருப்பது குற்றம் என்பதை, ஆட்சித் தலைவர்கள் உட்பட அனைவரும் அறிந்திருக்கிற காலம்.

உளுத்துப்போன பழைய வழக்கங்களை ஒழித்துக் கட்டுவதிலேயும், பொய்மைப் புராணங்களை ஒதுக்கித் தள்ளுவதிலேயும், புரட்சிக் கருத்துக்களை மக்களுடைய உள்ளமெனும் கழனியில் தூவுவதிலேயும் ஆசிரியர்கள் முன்னணியில் இருக்கின்றனர் இந்நாளில்.

சீர்திருத்தச் சிற்பிகளாய், சமுதாயத்தின் வழிகாட்டிகளாய், மக்கள் மன்றத்தின் புரட்சிப் பொறிகளாய், புதுவாழ்வின் தூதுவர்களாய், எதிர்காலத்தின் நிலையைத் தீட்டிடும் இக்கால ஓவியர்களாய் ஒளிவீசித் திகழ்கிறார்கள் ஆசிரிய நண்பர்கள் இந்நாளில்.

தான் உண்டு, தன் பெண்டு பிள்ளை குடும்பம் உண்டு, தன் வாய்ப்பாட்டுப் புத்தகமும் அரிச்சுவடிச் சிற்றேடும் உண்டு என்று அந்த அளவோடு அடங்கி ஒடுங்கி, சுருங்கிச் சோர்ந்து கிடந்தனர் ஆசிரியர்கள் ஒரு காலத்தில்,

ஆனால், இப்போது?

இப்போதா? ஆட்சிப் பீடம்கூட சற்றே அஞ்சுகிறது அவர்களைப் பார்த்து. அந்த அளவுக்கு நிலைமை மாறிவிட்டது. ஊதியம் உயரவில்லை என்ற காரணத்திற்காகவே,இந்த ஜனநாயக சகாப்தத்தில் கூட, அறிவாற்றல் மிக்க அந்த ஆசிரியப் பெருமக்களை எவரேனும் குறைத்து மதிப்பிட்டால், அது அப்படி மதிப்பிடுபவர்களின் அறியாமையையே விளக்குவதாகும்.

ஆனால் அப்படித்தான் குறைத்து மதிப்பிடுகின்றனர் சில திரைப்பட உலகினர்.

அண்மையில் வெளிவந்துள்ள சில தமிழ்—தெலுங்கு திரைப்படங்களில் ஆரம்ப ஆசிரியர்களைக் கேலிச் சித்திரங்களாகத் தீட்டிக் காட்டியிருக்கின்றனர்.

தட்டித் தடுமாறும் பேச்சும், பழங்கால வைதிகப் பூச்சும், கிழிந்து தொங்கும் தலைப்பாகையும், அழுக்கு ஏறிய வேட்டிசட்டையும் படைத்த கதை உறுப்பினர்களை உருவாக்கி, அவர்களைத் திரைப்படங்களிலே நடமாடவிட்டு, இந்த அருவருக்கத் தக்க நிலையினருக்

ருத்தான் ஆசிரியர் என்ற பட்டம் என்று கொட்டமடிக்கின்றன சில திரைப்பட உற்பத்தி நிலையங்கள்.

திரைப்படக் கதாசிரியர் மீதா, வசனகர்த்தாவின் மீதா, டைரக்டர் என்னும் திருஉருவத்தின்மீதா, தயாரிப்பாளர் என்னும் "எல்லாம் வல்லவர்" மீதா, குற்றம் யார் மீது? நமக்குத் தெரியாது.

சில பேசும் படங்களைப் பார்க்கிறோம்—அவற்றிலே ஆசிரியர்களைப் பரிதாப நிலையினராகத் தீட்டியிருப்பதையும் காண்கிறோம்—இது முறையல்ல என்பதைத்தான் எடுத்து விளக்க விழைகிறோம்.

குற்றத்தை இழைத்தவர் யார் என்பதல்ல முக்கியம். குற்றம் யாராலோ இழைக்கப்பட்டிருக்கிறது. இனி அது இழைக்கப்படக் கூடாது. இதுதான் முக்கியம்.

ஆரம்ப ஆசிரியர்கள் நிலை எவ்வளவோ மாறிவிட்டது. ஆனால் திரைப்படத்தார் கண்களுக்கு மட்டும் இன்னும் தெரியக் காணோம்.

எந்தக் காலத்திலோ இருந்த ஒரு சில ஆசிரியர்களை மனதில் வைத்துக்கொண்டு இன்னமும் படங்களிலே அவர்களை அது போலவே சித்தரித்துக் கொண்டிருக்கின்றனர் சில படத் தயாரிப்பாளர்கள்.

இவர்களுடைய சிந்தனை இவ்வளவு பிற்போக்காயிருக்கிறதே என்பதை எண்ணும்போது நமக்குப் பரிதாபம்தான் பிறக்கிறது இவர்கள் மீது.

ஆனால் அனைவருமே பரிதாப உணர்ச்சியைக் கொள்வதோடு நின்றுவிட மாட்டார்கள். பலருக்கு ஆத்திரமே பிறக்கக்கூடும். இந்நாளில் ஆசிரியப் பணி புரிபவர்களில் மிகப் பலர், துடிப்புள்ள இளைஞர்கள். அதிதீவிரக் கருத்துக்களைத் தம் உள்ளங்களிலே ஏற்றுக்கொண்டுள்ள சிந்தனைச் சிற்பிகள். நெஞ்சு உரமும் நேர்மைத் திறமும் படைத்த வீர உருவங்கள். அத்தகைய இளங்காளைகளின் உள்ளத்திலே ஆத்திரத்தை மூட்டுவதாக உள்ளன அவர்களைக் கேலி செய்யும் போக்கில் உள்ள திரைப் படங்கள்.

ஆர்வமும், ஆற்றலும், கொள்கையில் உறுதியும் படைத்த இளைஞர்களின் உள்ளத்தைப் புண்படுத்துவது சிறிதும் முறையல்ல. அதனால் ஆபத்து அதிகம்.

இளைஞர் தம் உள்ளத்தில் கோபத்தை மூட்டாதீர்—ஆசிரியர் உலகத்தைக் கேலிசெய்ய முயலாதீர் என்று திரைப்படத் தயாரிப்பாளர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

வேண்டாம் இந்தக் கொடுமை—வேண்டாம்.

இதயத்தை அதிரவைத்த இருபத்து ஒன்பது!

இருபத்து ஒன்பது — அந்த எண், உலக வரலாற்றிலே அசைக்க முடியாத ஓர் இடத்தைப் பெற்றுவிட்டது.

அமெரிக்காவின் உள்ளத்திலே அச்சம், இங்கிலாந்தின் நெஞ்சிலே நடுக்கம், பிரஞ்சு நாட்டின் அமைச்சர் அவையிலே வேதனை, போர்த்துகல் நாட்டின் சட்டசபையிலே சலசலப்பு, ஸ்பானிய அரசாங்கத்தின் மந்திராலோசனை மண்டபத்தில் துயரம் — இத்தனையையும் உண்டாக்கிவிட்டது ஓர் இருபத்து ஒன்பது. ஆனால் அதே நேரத்தில் ஆசியாக் கண்டத்திலேயும் ஆப்பிரிக்காக் கண்டத்திலேயும் வாழ்ந்திடும் மக்கள் உள்ளத்திலே புதியதோர் எழுச்சியையும் உணர்ச்சியையும் உண்டாக்கியிருக்கிறது அந்த இருபத்தொன்பது.

பாண்டூங் — இந்தோனீஷ்ய நாட்டில் உள்ள ஓர் அழகிய நகரம். அங்கேதான், ஏப்ரல் 18-ம் நாள் முதல் 24-ம் நாள் வரை, ஆசிய ஆப்ரிக்க நாடுகள், 29-ன் முதலமைச்சர்கள் கூடினர்.

ஏழு நாட்கள்தான் நடைபெற்றது மாநாடு. ஆனால், எழுநூறு ஆண்டுகளுக்குப் பிறகும் மறக்க முடியாத ஒரு புதிய பொன்னேடாக மாறிவிட்டது உலக வரலாற்றில்.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மா, இந்தோனீஷ்யா ஆகிய ஐந்து நாடுகள்தான் இந்த மாநாட்டை முன்நின்று நடத்தியவை.

இந்த ஐந்து நாடுகள் தவிர, ஆப்கனிஸ்தான், கம்போடியா, மக்கட் சீனா, எகிப்து, எதியோப்பியா, கோல்ட் கோஸ்ட், பாரசீகம், ஈராக், ஜப்பான், ஜோர்தான், லாவோஸ், லெபனான், லைபீரியா, லிபியா, நேபாளம், பிலிப்பைன்ஸ், சாதி அரேபியா, சூடான், சிரியா, சையாம், துருக்கி, வடக்கு வியத்நாம், தெற்கு வியத்நாம், ஏமன் ஆகிய இருபத்து நான்கு நாடுகளும் மாநாட்டில் கலந்து கொண்டன.

உலக மக்கள் தொகையிலே ஏறத்தாழ பாதிப்பேர் இந்த 29 நாடுகளிலே வாழ்கின்றனர்.

ஆகவே இந்த மாநாட்டைப் பாதி உலக மாநாடு என்றே கூறிவிடலாம். பாதி உலகம் ஒரு மாநாட்டை நடத்துகிறது என்றாலே போதும் அந்த மாநாட்டின் பெருமையை விளக்க. ஆனால் இந்த மாநாட்டின் சிறப்பு அதுமட்டுமல்ல. ஐரோப்பிய

வல்லரசுகளின் தொடர்பும் ஆதிக்கமும் இல்லாமல், ஆசிய ஆப்ரிக்க நாடுகள் மட்டுமே தனியாகக்கூடி, ஐரோப்பிய வல்லரசுகள்கூட அஞ்சவேண்டிய நிலையில், மகத்தானதோர் மாநாட்டை நடத்தியது இதுதான் முதல் முறை.

சென்ற முந்நூறு ஆண்டுகளாகவே உலக வரலாறு என்ருல் அது ஐரோப்பிய வல்லரசுகளால்தான் நிர்ணயிக்கப்பட்டு வந்தது.

"பிரிட்டனும் அமெரிக்காவும் கூடி இன்னின்ன முடிவுகள் செய்தன"; "ஸ்பெயினும் பிரான்சும் இணைந்து இன்னின்ன தீர்மானங்களை வகுத்தன;" "போர்த்துகீசிய ஏகாதிபத்யமும் டச்சு ஏகாதிபத்யமும் இன்னின்ன திட்டங்கள் தீட்டின" என்கிற இந்த வகையிலேதான் இருந்து வந்தன உலக அரசியல் நிகழ்ச்சிகள் இதுவரை.

அண்மைக் காலம் வரையிலே இந்தியாவும், பாகிஸ்தானும், பர்மாவும் இலங்கையும் பிரிட்டனுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தன. இந்தோனீஷ்யா, ஹாலந்துக்குத் தலைவணங்கிக் கிடந்தது. சீன நாட்டின் ஆதிக்கம், அமெரிக்க டாலரிடம், கைகட்டிக் காலில் வீழ்ந்து வணக்கம் தெரிவித்துக் கொண்டிருந்தது. எகிப்து நாட்டுப் பொருளாதாரமும், ஈரான் நாட்டு எண்ணெய்ச் செல்வமும், பிரிட்டிஷ் நாட்டுச் சுரண்டல் இயந்திரத்தோடு பிணைக்கப்பட்டுக் கிடந்தன.

சென்ற பத்தாண்டுகளில்தான் இந் நாடுகள் தத்தம் கை கால்களைப் பிணித்திருந்த விலங்குகளை ஒடித்தெறிந்தன. விடுதலை பெற்றதும் இவை வீறு கொண்டெழுந்து வீரமுழக்கம் செய்யலாயின.

இதற்கு முன்னரெல்லாம், இந்த நாடுகள் உட்பட எல்லா நாடுகளின் அரசியல் பொருளாதாரத் தலைவிதியை மேற்கத்திய வல்லரசுகள் தமக்குள்ளாகவே முடிவு செய்துவந்தன. இந்த ஆசிய ஆப்ரிக்க நாடுகளைப் பற்றிய பிரச்சினைகளிலேகூட இந்த நாடுகளைக் கலந்து ஆலோசிப்பதில்லை மேற்கத்திய நாடுகள்.

இந்த நிலையை முதன் முதலாக மாற்றி, உலக வரலாற்றில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கியிருக்கிறது பாண்டுங்.

பாண்டுங்கிலே ஆசிய ஆப்ரிக்க மாநாடுகள் கூடின.

அவை என்ன பேசுமோ, ஏது நேருமோ, எத்தகு மாறுதல்கள் விளையுமோ என்று, மேற்கத்திய வல்லரசுகள் அச்சத்தோடும் ஆர்வத்தோடும் கூர்ந்து கவனிக்கலாயின.

இப்படி ஒரு நிகழ்ச்சி இதற்கு முன்னர் உலக வரலாற்றிலே ஏது?

மேற்கத்திய வல்லரசுகள் கூடிப் பேசும். கிழக்கத்திய நாடுகளெல்லாம் என்னவோ ஏதோ என்று அச்சத்தோடு கவனிக்

கும். இதுதான் நிலை, இந் நாள் வரை.

இப்போதுதான் நிலைமை மாறியிருக்கிறது. அடிமைப்பட்டவர்கள் நிமிர்ந்து நிற்கின்றனர். ஆதிக்க நாடுகள் அச்சத்தோடு பார்க்கின்றன.

மேற்கு நாடுகளாயிருந்தாலென்ன? கிழக்கு நாடுகளாயிருந்தாலென்ன? வெள்ளைத் தோலினர் வாழும் பிரதேசமானாலென்ன? கருப்புத் தோலினர் உலவும் வட்டாரமானாலென்ன? எல்லா நாடுகளும் ஒத்த நிலையினரே என்கிற உண்மையை, மேல் நாடுகள், பல ஆண்டுகட்கு முன்னரே ஒப்புக் கொண்டன வாயளவில். ஆனால் நடைமுறையில், செயல் துறையில், அனுபவ பூர்வமாக, அந்த உண்மையை அவை ஒப்புக் கொள்ள நேர்ந்தது பாண்டுங்குக்குப் பிறகுதான்.

பாண்டுங் மாநாட்டிலே, காலனிமுறை ஒழியவேண்டும் என்கிற தீர்மானத்தை எல்லா நாடுகளும் ஒத்த மனத்தோடு ஒப்புக்கொண்டிருக்கின்றன.

வல்லரசுகளின் உதவியை ஒப்புக் கொள்ளலாம், ஆனால் அந்த உதவியின் பின்னால் ஆபத்தான நோக்கம் ஏதேனும் பதுங்கியிருக்குமானால் அது பற்றியும் விழிப்பாயிருக்க வேண்டும் என்று மற்றோர் தீர்மானம் கூறுகிறது.

ஆசிய ஆப்ரிக்க நாடுகள் ஒன்றிற்கு ஒன்று பொருளாதாரத் துறையிலே முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று வேறோர் தீர்மானம் கூறுகிறது.

சிற்சில வேற்றுமைகள் காணப்பட்டன மாநாட்டில் கூடியவர்க்கிடையே என்றாலும் இப்படி ஒரு மாநாடு கூடியதே பெரியதோர் வெற்றி.

கூடிய மாநாட்டிலே எல்லாத் தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேறியது, அதனிலும் பெரிய வெற்றி.

பாண்டுங்—அது, உலக வரலாற்றிலே ஒரு புதிய அத்தியாயம் மட்டுமல்ல, ஒரு திருப்புமுனை.

கருத்துக் கதிர்

அலைகள் ஓராயிரம் தாக்கட்டும். என்றாலும் கற்பாறை சிறிதும் கரைவதில்லை. அதுபோலவே துயரங்கள் பல நூறு உன்னைத் துளைக்கட்டும். என்றாலும் உன் உறுதியிலிருந்து நீ சிறிதும் பிறழாதே.

—மார்க்க அரேலியர்.

தலைவர் அறிக்கை

அன்புமிக்க ஆசிரிய மானேஜர்களே! மானேஜர்களே! 27-3-55-ல் கூடிய சென்னை மாநில எயிடட் பள்ளி மானேஜர்கள் மாநாட்டில் ஜில்லாவாரியாக இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்திருக்கின்றோம். ஆயினும் மாகாண சங்கத்தைப் பலம் பொருந்திய ஓர் அமைப்பாகச் செய்யவேண்டியது பிரதிநிதிகள் பொறுப்புமட்டுமல்ல, ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள எயிடட்பள்ளி மானேஜர்களின் பொறுப்பும் கடமையுமாகும்.

சென்னை, வட ஆற்காடு போன்ற ஜில்லாக்களைத் தவிர மற்ற ஜில்லாக்களில், தாலூகா வாரியாகவும் ஜில்லாவாரியாகவும் சங்கங்கள் அமைக்கப்படாமல் இருப்பதாகத் தெரியவருகிறது. ஆதலின் ஆங்காங்குள்ள எயிடட் பள்ளி மானேஜர்கள் தாலூகா வாரியாகவோ அல்லது ரேஞ்சு வாரியாகவோ மானேஜர்கள் சங்கத்தை அமைத்து, பிறகு அவைகளை ஜில்லாவாரியாக ஒன்றுபடுத்தி, தலைவர் செயலாளர் போன்ற நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம். முதலில் ரேஞ்சு அல்லது தாலூகாவாரியாக மானேஜர்கள் ஒன்றுகூடி தலைவர் செயலாளர் ஆகியோரைத் தேர்ந்தெடுத்து மாகாண சங்கத்துக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட சங்க நிர்வாகிகளின் பெயர்கள் "ஆரம்பக் கல்வி"யில் அவ்வப்போது பிரசுரிக்கப் படும்.

அடுத்த மாநாடு 1956-ல் வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள வேலூரில் நடத்தவேண்டும் என்று வேலூர்த் தோழர்களால் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கின்றது.

1955 ஜூலை 31-க்குள் சங்க நிர்வாகிகளின் தேர்வு முடிவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் குறைந்தது ஆறு அங்கத்தினர்களாவது மாகாண சங்கத்திற்குத் தேர்ந்தெடுக்க வேண்டிய முறையில் மாகாண சங்கத்தின் சட்ட திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டு, வேலூர் மாநாட்டில் இன்னும் பல பிரதிநிதிகளை மாகாண சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

இப்படிக்கு,

பி. வீரராகவன்,

தலைவர்,:

சென்னை மாநில எயிடட் ஆசிரிய மானேஜர்கள் மானேஜர்கள் சங்கம்.

6 - AUG 1956
MADRAS



வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. A. R. சேஷாசலம்
வரவேற்புரை வாசிக்கிறார்.



மாநாட்டின் உதவிக் காரியதரிசி
திரு. N. A. நடேச முதலியார் மாநாட்டில் பேசுகிறார்.

சென்னை மாகில ஆசிரிய மானேஜர்கள்,
மானேஜர்கள் சங்கத்தின் முன்னாள்
காரியதரிசியும் பொருளாளருமான

திரு. K. இராமாநுஜம் பிள்ளை



சென்னை மாகில ஆசிரிய மானேஜர்கள்
மானேஜர்கள் சங்கத்தின் தற்கால
காரியதரிசியும் பொருளாளருமான

திரு. A. R. சேஷாசலம்

CONNEMARA PUBLIC LIBRARY
6 - AUG 1956
MADRAS

வேதனை வாழ்வு

பா. சாமிநாதன், தலைமை, ஊராண்மைக் கழகத் துவக்கப் பள்ளி,
மேல் வழித் துணை யாங்குப்பம், மேல்பட்டி வழி,
குடியாத்தம் வ. ஆ.

"எழுத்தறிவித்தவன் இறைவன்" — "மாதா—பிதா—குரு." இப்படி எழுதிக் கொண்டே போனால் ஏடு கொள்ளாது, விரியும். வானளாவ வாழ்த்துகிறார்கள் ஆதிகால முதல் தற்காலம் வரை. வாழ்த்துகிறோம் வரவேற்கிறோம். நன்றிக்குரியவர்களாய் இருக்கிறோம்.

"தேவைக்கு மிகுதி கொண்டிருப்பவன் திருடன்" யாரோ, எங்கோ சொல்லிக் கேட்டதாக ஞாபகம். ஒருவன் உணவுகூட (சோறு) தனக்கு, தன் வயிற்றுக்குப் போதியதை, தன் வளர்ச்சி குன்றா வகையில் உண்ணுவதில் தவறில்லை. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சென்றனர் ஆன்றோர். தன்னைக் கெடுத்துக் கொள்வதோடல்லாமல் அடுத்தவனின் உணவைத் திருடுகிறான். எப்படி? வீதியிலே கூவுகிறான் "ஒரு கவளம் சோறு தாயி" என்று அன்னக் காவடி. அவனுக்குப் போடுவதைவிட்டு (இந்த நிலை ஒழிய வேண்டும்) புளியேப்பம்—பசியேப்பம். இவனுக்கு சோடா—அவனுக்கு ஒரு பிடி சோறு. அவனுடையதை இவன் ....

ஆசிரியர்கள் தேவையைக் கண்டவருமில்லை. தேவையோடு இருந்தவருமல்ல. "தேவையற்றவர்கள் தெய்வப் பிறவிகள்" என்றெல்லாம் கூறுகின்றனர். பேச்சு, தொண்டு, கௌரவம் வயிற்றை நிரப்பாது. யாருக்காவது, யாராவது, எவ்வளவாவது கொடுக்கட்டும் யாரும் கவலைப்படப் போவதில்லை. ஆனால் அரசாங்கம் தகுதியை மறந்து, மாணவர் நிலையிலுள்ள பச்சிளம் பாலர்களுக்கு ஒரு விகித சம்பளம். அதாவது (S. S. L. C.) பத்தாவது தேறி வெளிவந்த மாணவர்களுக்கு ரூ. 40 சம்பளம் பஞ்சப்படி ரூ. 21 ஆக ரூ. 61/– பொருமையல்ல வரவேற்கிறோம். இன்னும் அதிகம் கொடுக்கட்டும் தேவையறிந்து. ஒரு தனி மனிதன் திங்களொன்றுக்கு ரூபாய் ஆயிரமாயிரம் வாங்கும்போது ரூ. 61/– மிகமிகக் குறைவிலும் குறைவு. ஆனால்... அதே பத்தாவது (S. S. L. C.) படித்து இரண்டாண்டுகாலம் ஊரைவிட்டு ஊர் ஓடி விடுதிகளில் ரூ. 16–ல் பசியும் பட்டினியும், இரவு பகல் என்று பாராமல் ஆசிரியர் பயிற்சி பெற்று அரசாங்க நற்

சாட்சி பத்திரம் பெற்று அது மட்டுமா முதல் உதவி பயிற்சி, நூல் நூற்றல், விவசாயம் முதலிய தனிப்பட்ட பயிற்சிகள் பெற்று 'ஆசிரியர்' என்று வெளி வந்த ஆசிரியருக்கு சம்பளம் 37. பஞ்சப்படி 19. மாணவனுக்கு40-21. ஆசிரியனுக்கு 37-19 வித்தியாசம் ரூ. 5/– ஏன்? இரண்டாண்டு அவன் படித்தது குற்றமா? ஆசிரியன் என்ற தகுதியை அவன் அடைந்தது குற்றமா? தன் வாழ்நாளையே ஆசிரியன் என்று பதிவு (முத்திரை) செய்து கொண்டானே அது குற்றமா? எது குற்றம்? அப்பப்பா...... வெட்கம்!

பொதுவாக ஆசிரியர் என்று பயிற்சியும் அரசாங்க அனுமதியும் பெற்று (நன்கொடை) வெளிவந்தாரே அவருக்கே ஒரு பள்ளியை நிர்வகிக்கும் சக்தி குறைபடுகிறது. அனுபவம் பெற்ற ஆசிரியர் ஒத்தாசை நாடுகிறார். குறையல்ல. உண்மை. உண்மையை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் நாங்கள். அதனுற்ருன் ஆசு+இரியர். குற்றம்+அற்றவர் என்று பெயர் பெற்ருேம். இந்த நிலையில் இவர்களுக்கு ஒரு மாத (30 நாள்) பயிற்சி பாவம். இதனுல் இரண்டாண்டு பயிற்சி காலத்தார் படிப்பு வியர்த்தமாகிறது. இரண்டாண்டு எங்கே? 30 நாள் ஒரு திங்கள் எங்கே. ஓர் ஆண்டு பயிற்சி அளித்தார்களே 1947–ல் அது ஏன் கைவிடப்பட்டது?

இது சாதாரண அறிவுள்ள ஒவ்வொருவனும் கேலிக்கூத்து என்று எள்ளி நகையாடும் அளவுக்குப் போகிறது. இது தன்னையே அவமதித்ததாகும். நேராகப் பள்ளியை விட்டு மாணவனுக வெளிவரும் ஒருவனுக்கும், மாணவன் என்பது மாறி ஆசிரியன் என்று அரசாங்க நற்சாட்சிப் பத்திரம் பெற்று வந்த இருபேருக்கும் மாணவன் 61. ஆசிரியன் 56. "குருவுக்கு மிஞ்சின சிஷ்யன்" என்பது........ விசித்திரமா, வேடிக்கையா? இரண்டாண்டு பயிற்சி வியர்த்தமல்லவா? அந்தத் தகுதியை அது இழந்தல்லவா விட்டது. ஏன் அந்தப் பயிற்சிக் காலம்? இது தற்காலிகமானதாயினும், பயிற்சி பெற்றவன் தகுதி, பயிற்சி, அனுபவம், வயது அனைத்தும் காற்றில் விடவேண்டியதுதானு?

போகட்டும். பள்ளிகள் பல நிர்வாகங்களின் கீழ் இருப்பதை எதிர்க்கவில்லை. இருக்கட்டும். ஒரே பள்ளியில், ஒரே ஆசிரியரின் கீழ், ஒரே அரசாங்கத்தால் அத்தாட்சி பத்திரம் பெற்றவர்கள் வெவ்வேறு நிர்வாகங்களில் வேலை செய்ய ஏற்படுகிறது. சம்பளத்தில், சம்பள உயர்வில், பஞ்சப்படியில், பிராவிடன் பண்டில், உபகார சம்பளத்தில் வித்தியாசம், வித்தியாசம். எல்லாம் வித்தியாச மயம்! நிர்வாகம் வேறுபடினும், பயிற்சி (படிப்பு) ஒன்றுதான். வித்தியாசம் நீக்கப்பட வேண்டும்.

ஏட்டிலே எழுதியும், வாயிலே புகழ்ந்தும் விட்டால் மட்டும் போதாது. வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும். ஏழ்மை குலைய வேண்டும். இன்னல் ஒழிய வேண்டும். வறுமை குறையவேண்டும். மத்திய அரசாங்கம்—மாகாண அரசாங்கம் என்ற வித்தியாச முறை மாற்றுந் தாய் முறையாகும்.

சிலர் கூறுகின்றனர் "குறைந்த நேர வேலை, விடுமுறை நாட்கள் மிகுதி, உட்கார்ந்த உத்தியோகம் தானே அதனால் வேலைக்கேற்ற கூலி" என்று. தனக்கிருக்கும் ஒரே ஒரு செல்வ மகனின் குறும்புத்தனத்திற்கும், "வானரம்...வாவில்லாக் குறை ஒன்றுதான், போதும், போதும் பொழுது போனால், பொழுது விடிந்தால், உடைப்பதும், அடிப்பதும்... அப்பப்பா போதும் போதும் பிள்ளையே இல்லாமல் இருக்கலாம்"! என்று குறைபடும் பெற்றோரே! வயதில் சிறுவர். ஜாதி, மதம், கொள்கை கோட்பாடு, ஏழை, எளியவன் என்ற பல திறப்பட்ட பச்சிளங் குழந்தைகள் ஒன்றா இரண்டா ஒரு ஆசிரியருக்கு குறைந்தது 30. உங்களால் ஒரு குழந்தையை அடக்க திராணியில்லா நீங்கள், பெற்ற தன் செல்வத்தையே "குரங்கு, சனியன், பிசாசி" என்று அழகு மொழியால் அழைக்கும் நீங்கள் கூறுகிறீர்கள் "விடுமுறை நாட்கள் அதிகம், குறைந்த நேர வேலை, உட்கார்ந்த உத்தியோகம்,"—இப்படி வாய்க்குவந்ததை அதுதான் போகட்டும். அப்படியானல் கையைப் படைத்த ஆண்டவன் வயிற்றை ஏன் படைத்தான்? வயிறு உள்ளோருக்கு கை எதற்கு? "பசி" அது எல்லோருக்கும் ஏற்படும் ஒரு இயற்கை விதி. அது தகுதி, குலம், பணம், ஏழை என்று பார்த்து வருவதில்லை. மானம் காக்க ஆடை. குடியிருக்க ஒரு வீடு. ஆடம்பர ஆடைகள் வேண்டாம் அரசர்கள் போல. (அக்கால) மாளிகை வேண்டாம் மண் குடிசை போதும்.

இன்றைய மாணவர் நாளை நாட்டின் விதியை நிர்ணயிப்பவர். அதை ஒவ்வொருவரும் மனதில் கொள்ள வேண்டும். மிருகங்களின் மத்தியில், அல்லது மிருகங்களே வளர்க்கும் மனிதர் (சமீபத்தில் ஓநாய் சிறுவன் என்று பத்திரிகைகளில் படித்திருப்பர்) அதனுடைய தன்மை, குணம், குரல் சகலமும் மாறுபட்டுவிடுகிறது. அது போல ஆசிரியர்களின் மத்தியில் வாழும், (கற்கும்) மாணவன் அவரின் குணங்களைப் பார்க்கிறான். அதன்படியே நடப்பான். அதனால் ஆசிரியர் அவனை—அந்த மாணவனை—எப்படியும் மாற்றலாம். அவன், அந்த மாணவன் ஈரக் களிமண், எழுதப்படாத கரும்பலகை, கரடுமுரடான கருங்கல் போன்றவன். இவைகள் செய்வோனின் திறமையைப் பொறுத்தது. கண்ணுக்கு விருந்தாகவும், காட்சிப் பொரு

ளாகவும் ஆக்கலாம். அன்றி கண்ருவியாகவும் ஆக்கலாம். அது போல ஆசிரியர்கள் எந்த வழியிலும் திருப்பலாம் மாணவரை. அதற்கேற்ற வல்லமை, சக்தி, ஜீவன் இருக்கிறது. இதை மறந்து ஊருக்கு இளைத்தவனாக ஆக்கினால் உலகத்தையே திரும்பிப்பார்க்க வைத்து விடுவார்கள்! பொறுத்திருந்தோம், பொறுக்கிறோம், பொறுமையோடுதான் இருக்கப் போகிறோம். கண்ணீரைத் துடைத்துவிட்டால் நின்றுவிடாது கண்ணீர். களிப்புவேண்டும்.

"உயர்ந்த நாடு" என்று திரும்பிப் பார்க்க வேண்டுமா உலக நாடுகள். உயர்த்துங்கள் ஊதியத்தை உபாத்தியாயர்களுக்கு. இல்லை, ஒழித்துக்கட்டுங்கள் அவர்களை. புண்ணியம் செய்தவர்களாவீர்கள். "இல்லை" என்ற சொல் இல்லையாக வேண்டும். வேண்டாம் இந்த வேதனை வாழ்வு.

வாழ்க ஆசிரியர்கள்! வளர்க ஆரம்பக் கல்வி!!

வணக்கம்!

"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"

★

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

★

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-8

ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1-0

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

(தபால் செலவு உட்பட)

★

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

" நான் சொல்வது சரியா ?"

[தி. ரா. செல்வராசன், ஆசிரியன், தனலட்சுமி பாடசாலை, சென்னை.]

அன்பு நண்ப,

வணக்கம், நலம்.

ஆசிரியர் வேலை மிகவும் எளியது. ஆண்டில் அரை பாகம் விடுமுறை—என்று நம்பி ஏமாந்தவன் போல மனக் குழப்பத்தோடு நீ கடிதம் எழுதியிருக்கிறாய். குழந்தைகளிடம் உண்மையான அன்பு இல்லாமல், வேறு வேலை கிடைக்கும்வரை ஆசிரியப் பணியை மேற்கொண்டவன் மனநிலை, உனக்கு எப்படித்தான் ஏற்பட்டதோ? பலநாள் உன்னுடன் பழகிய எனக்கு இது புதிராகவே இருக்கின்றது.

பயிற்சியை முடித்துவிட்டுக் கிராமத்திற்கு வந்திருந்தபோது நீ சொன்னதை நினைத்துப் பார்க்கிறேன். "அறுபது ரூபாய்க்காக வீண் பொழுது போக்கும் வேலைக்காரனைப் போல நான் மாறமாட்டேன்; ஆறாயிரம் ரூபாய் பெறும் அதிகாரியைப் போல கடமைகளைச் செய்து முடிப்பேன்" என்று முழங்கினாய். அதைக்கேட்ட நான், இருண்ட ஆசிரியவானில் ஒரு விடிவெள்ளி முளைத்துவிட்டது என்று கனவு கண்டேன். நனவாக மாறவேண்டிய கனவு, இன்று கானல்நீர் போலாயிற்று!

தோழா, என் உள்ளத்தில் தோன்றுவதைஎழுதுகின்றேன். மனத்தில் எழும் உணர்ச்சிகளை மறைத்து, அழகாக எழுதி, உன்னைச் சிரிக்க வைத்துக் களிப்பில் ஆழ்த்த எனக்குத் தெரியும். இதனால் யாருக்கு நன்மை? அஞ்சல் நிலையத்தார்க்கு இரண்டணுவரவு. ஆனால் நமக்கோ ஒன்றுமில்லை. உண்மையைப் பாராட்டி, கைக்கொள்வதில் உனக்கு உறுதியுண்டு. இந்த நம்பிக்கை என்னை எழுதத் தூண்டுகிறது.

"மாணவனாகப் பள்ளியில் கற்றபோது கண்ட ஆசிரிய உலகம் வேறு; ஆசிரிய மாணவனாகப் பயிற்சிப் பள்ளியில் பயின்றபோது உணர்ந்த ஆசிரிய உலகம் வேறு; ஆசிரியராகப் பள்ளியில் அமர்ந்து பணியாற்றும்போது பழகுகின்ற ஆசிரிய உலகம் வேறு; எவ்வளவு மாறுதல்—ஏமாற்றம்" என்று குறிப்பிட்டிருந்தாய்.

இந்த மாறுதல் இயற்கை. சென்ற ஆண்டு நீயும் நானும் செஞ்சி மலைக்குச்சென்றிருந்தோமல்லவா? அந்த மலையைத்தொலைவிலிருந்து பார்த்தபோது நீலமும் பச்சையும் இழைத்த கம்பளம்போர்த்ததுபோலத்தோன்றியது. அதன் அருகே சென்று

நோக்கியபோது குட்டையான மரங்களும் அகன்ற பாறைகளும் பழைய கோயில்களும் கண்ணுக்குப் புலப்பட்டன. மலைமீது ஏறிய பின்னர் முன்பு காணாத காட்சிகளைக் கண்டோம்; உணராத புதிய அனுபவங்களை அடைந்தோம். புதியவைகளைக் கண்டு மருள்வதால் பயனில்லை; புதிய பாடம் கற்றுக்கொள்வது பயனுடையது. இது நம் கடமை; வாழ்க்கையின் சட்டம்.

கட்டாந்தரையில் நடந்து பழகிய குழந்தை, கடற்கரை மணலில் நடக்கும்போது தள்ளாடுகிறது. மெல்ல மெல்ல அங்கேயும் நடக்கக் குழந்தை கற்றுக்கொள்கிறது. புதிய பள்ளியில் அமர்ந்துள்ள நீ ஒன்றும் புரியாமல் தத்தளிக்கிறாய். நாள் செல்லச் செல்ல எல்லாம் ஒழுங்காக அமைந்துவிடும். 'நாள் செய்வதை நல்லோர் செய்யார்' என்பதை நீ மறந்துவிட்டாயா?

பழக்கமில்லாத புதிய பள்ளியில் பணியாற்றுவது சற்றுக் கடினம். அங்குள்ளவர்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்துகொள்ள நாள் பலவாகும். பின்னர் நம்மைச் சுற்றுப்புறத்திற்குத் தக்கவாறு அமைத்துக்கொள்ளவேண்டும். மாற்றிக்கொள்ள மனமில்லை என்றால் மாறினால் போல, தக்கவாறு நடிக்கவேண்டும். மனத்திற்குப் பிடிக்காத செயலைச் செய்யவும் பழக்கம் வேண்டும். இந்த நடிப்புப் பெயர் கடமையாம். என்ன செய்வது? சமுதாய வாழ்க்கை கருதமுடியாத அளவு மாறிவிட்டது; வளர்ந்துவிட்டது.

"பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் மனம்விட்டுப் பழகவில்லை; தலைமையாசிரியர் அன்பாகவும் அமைதியாகவும் பேசவில்லை; பள்ளிப் பொறுப்பாளர் குறை கூறிக்கொண்டே இருக்கிறார். இதற்கு நான் என்ன செய்வது? இதைப் போக்க வழியுண்டா? அவர்கள் மேலும் குறையில்லை. என்னிடம் தான் குறை இருக்கவேண்டும். குறை நீக்க வழி சொல்லாயோ?" என்று நீ வருந்தி எழுதியுள்ளாய்.

உன் நிலை இரங்கத் தக்கதாக உள்ளது. ஆசிரியர்கள் உன்னிடம் பழக—மனம் விட்டுப் பேச—அன்பு செலுத்த. தலைமையாசிரியர் அன்பாகப் பேச துணைவராக உதவ—கடமைகளை ஒழுங்காகச் செய். பொறுப்பாளர் மனம் மகிழ—பாராட்டிப் பேச—கைம்மாறு கருதாமல் உழை. இவ்வாறு எழுதுவதனால் உனக்கு என்ன பயன்? வழிகேட்டவருக்கு, இடது பக்கம் செல், இடது பக்கம் திரும்பி வலது பக்கம் செல் நேரே. பேசாமல் திரும்பிப் போ என்று வழி சொல்வதால் வழி புரியுமா? ஒருகாலும் விளங்காது.

ஆனால் விளக்கமான வழியை உனக்குக் காட்டுகின்றேன். அந்த ஒற்றையடிப்பாதை, ஏசு, புத்தர், காந்தி போன்ற "மனித தெய்வங்கள்" நடந்து பண்பட்ட பாதை. விருப்பம் இருந்தால் நடந்து சேரலாம்.

உயர்ந்த எண்ணங்களை எண்ணி நல்ல உணர்ச்சிகளைப் பெற்று, சிறந்த செயல்களைச் செய்வதன் மூலம் நாம் படிப்படியாக உயரலாம். அதற்கு வழி இதுதான் என்று காட்டும் கைகாட்டியாக நான் நிற்கின்றேன். நானும் அந்தவழியில் காலெடுத்துவைக்கவில்லை. என் அறியாமையைக் கண்டு நானே சிரித்துக்கொள்கிறேன்.

பல்வலியால் அவதியுறும் எனக்கு வைத்தியம் எழுதியுள்ளாய். பல்வலிக்காரனான நான், மனநோய்க்காரனான உனக்கு மருந்து எழுதித் தர வேண்டியிருக்கிறது! இந்த உலகமே அற்புதமான மருத்துவ மனை. இங்கு நோயாளிகளே வைத்தியர்கள்! நம்பிக்கையே மருந்து !!

காலையில் பல்லைத் துலக்குவது போல இரவில் படுக்கைக்குச் செல்லு முன்பும் துலக்கவேண்டும். பல்லிடுக்கில் சிக்கிய உணவுப் பொருள் இரவு முழுதும் தங்கியிருந்து நஞ்சாக மாறி, ஈற்றை அரித்துவிடும். பல்வலி போவதற்கும், இனி வராமல் தடுப்பதற்கும் இதுதான் சிறந்த வழி என்று நீ எழுதியுள்ளாய். உன் அறிவுரைப்படி தவறாமல் நடக்க முயற்சிக்கின்றேன்.

இரவில் படுக்கைக்குச் செல்லு முன் பல்லைத் தூய்மை செய்து கொள்வதுபோல மனத்தையும் ஒழுங்கு செய்துகொள்ள வேண்டும். காலையில் கண் விழித்ததிலிருந்து இரவு படுக்கைக்குச் செல்லும்வரை நடந்த நிகழ்ச்சிகளையும், அப்போது எழுந்த எண்ணங்களையும் திரும்ப எண்ணிப் பார்க்கவேண்டும். வீட்டுக் கதவோரத்தில் நின்று கொண்டு, தெருவை வேடிக்கை பார்ப்பது போலப் பற்றில்லாமல் பார்க்கப் பழக வேண்டும். மனத்தை ஆளும் தலைவனாக வேண்டுமென மனமார விரும்பி, அன்றைய செயல்களையும் எண்ணங்களையும் சீர்தூக்கிப்பார்த்து நல்லவைகளைக் கொண்டு, தீயவைகளை ஒதுக்கப் பழகவேண்டும். இதுதான் வாழ்க்கையில் ஒரு படி முன்னேற்றம். இதுவே எல்லாவற்றுக்கும் அடிப்படை.

புல் மேய்ந்த பசு, நிழலில் படுத்துக்கொண்டு, அசை போடுகிறது. அசை போட்டு, தான் உட்கொண்டவைகளைச் சீரணிக்கிறது. மனிதனும் 'நினைவு அசை' போடும் உயிர்தான். எண்ணிப் பார்க்கத் தெரிந்தவன்; உண்மையான சுவையைக் காண்பவன். நல்ல எண்ணங்களே சுவையானவை. நீயும் 'நினைவு அசை போட்டு'ப் பழகு!.

" தமிழ் இலக்கண வகுப்பில் நுழைந்த பின்னர்தான் செய்வினை, செயப்பாட்டு வினை கற்பிக்க வேண்டும் என்று தெரிந்தது. மேசையில் இலக்கண புத்தகம் இல்லை. பக்கத்து வகுப்பு ஆசிரியரிடம் புத்தகம் வாங்கச் சென்று, சென்று வந்த உல்லாசப் பிரயாணத்தைப்பற்றி பேசிவிட்டு வகுப்பிற்குள் நுழையும்போது

தலைமையாசிரியர் வகுப்பை அடக்கிக் கொண்டு இருந்தார். பல்லெல்லாம் தெரியக்காட்டி, பூனையைப்போல வகுப்பிற்குள் நுழைய வேண்டியதாயிற்று இரண்டு மூன்று நாட்களாக மூன்று பிள்ளைகள் வகுப்பிற்கு வரவில்லை; வாராமைக்குக் காரணம் என்ன என்பதும் தெரியவில்லை; வீட்டிற்குச் சென்று விசாரிக்க நேரமில்லை. மேல் அதிகாரிகளை ஏமாற்ற, பள்ளி நிர்வாகியாரையும் தலைமையாசிரியரையும் ஏமாற்றி, பொய் ஆஜர் போட நேரிடுகிறது. அப்போது என்னைப் பார்த்து யாரோ மெல்ல சிரிப்பதுபோல் தோன்றுகிறது. அந்த நிமிடத்தில் என் மனச்சான்று செத்துவிடுகிறது" இவ்வாறு ஒவ்வொரு செயலையும் எண்ணிப்பார்த்து, அறவழியில் நின்றது எவ்வளவு நிற்காதது எவ்வளவு என்று சீர்தூக்கி ஆராய்ந்து, குறைகளுக்காக வருந்தவேண்டும்.

அன்றைய செயல்களையும் எண்ணங்களையும் நினைத்துப் பார்ப்பதில் பயனுண்டு. பிழைகளுக்காக வருந்துவது நல்லது. இந்த முதல்படியில் நிற்பது முன்னேற்றம் இல்லை; முயன்று முயன்று படிகளில் ஏறவேண்டும். பிழையைத் திரும்பச் செய்யாமலிருக்க வேண்டும. பிழையான பழக்கத்தையும் செயலையும் தடுத்து நிறுத்த மனஉறுதி வேண்டும். இன்றுதான் கடைசிமுறை, நாளையிலிருந்து ஒழுங்காக நடந்து கொள்வேன் என்று தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டு வெறுக்கும்பழியைத் திரும்பவும் செய்து மீளாத துன்பத்தில் அமிழ்ந்து விடுகிறோம். இதிலிருந்து மீள வழியில்லையா? உண்டு. அதற்கு மன உறுதி வேண்டும். தவறான செயலை நாம் செய்யத் தகாதது என்று ஒதுக்கத் துணிவு வேண்டும். அப்போதுதான் மனச்சான்றைக் கொல்லாமல் — சுற்றுப்புறத்திற்குப் பலியாகாமல் வாழலாம்.

பத்துத்திங்கள் சுமந்து, ஈன்று புறந்தருதல் தாயின் கடன்; ஆனால் ஐந்தாண்டுகள் உழைத்து, அறிவை உருவாக்குதல் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கடமை. இத்தகைய பொறுப்புமிகுந்த கடமையிலிருந்து ஒரு நாள் தவறலாம்; பலநாள் தவறுவது, தவறாகாது; மனம் அறிந்து செய்யும் குற்றமாகும். மனச்சான்றே அறம்— தெய்வம்—என்று நம்புகின்ற நீயும் நானும் ஒருநாள் மறந்து— தவறி — பிழை செய்யலாம். ஆனால் மனமறிந்து, குற்றத்தைப் பலநாள் செய்யக்கூடாது. செய்த தவற்றைத் திரும்பச் செய்யாதிருப்பதன் மூலம் நாம் மனிதராக முயல்வோம்; நல்லாசிரியராக உழைப்போம்.

செய்த குற்றத்தைத் திரும்பச் செய்யாதிருத்தல் நல்லது; தீமையற்ற செயல்களை நாடிச்செய்வது மிகவும் நல்லது. நமக்கு அறிவு வேண்டும். இந்த அறிவுதான் பழியிலிருந்து நம்மைக் காப்பாற்ற வல்லது.

கணக்குப்பாட நேரத்தில்கரும் பலகையில் கணக்கை எழுதி விட்டு நாற்காலியில் உட்கார்ந்தி ருக்கும்போது நீயே உன்னை ஒரு கேள்வி கேட்டுக்கொள்! "நான் செய்வது சரியா?" என்று பதில் கிடைக்குமுன்பே நீ நாற்காலியி லிருந்து எழுந்து நிற்பாய். "நான் சரியா?" என்ற கேள்வியை மறு முறையும் கேட்டுப்பார். நின்ற இடத்திலிருந்து பெயர்ந்து மாண வர்களின் நோட்டுப் புத்தகத்தில் கவனம் செலுத்துவாய். தவருக வழி எழுதியுள்ள மாணவனுக்கு சரியான வழியைக் கற்பிப்பாய். பின்னர் உனக்குள் "நான் செய் வது சரியா?" என்று கேள். சரி என்று பதில் கிடைக்கும். அப் போது இனம்புரியா மகிழ்ச்சி உன் மனத்தில் நிறைந்திருக்கும்.

"நான் செய்வது?" என்று உன்னையே நீ கேட்டுத் தவறு நேரிடாமல் காத்துக் கொள்வது சிறந்த வழி. அப்போதுதான் "நீ செய்வது சரியா?" என்று பிறர் நம்மீது பழி சுமத்த முடி யாது. தவறு என்று உணர்ந் ததை விலக்கத் தயங்காதே! சரி என்று தோன்றுவதைச் செய்ய அஞ்சாதே!

'உன்னையே நீ எண்ணிப்பார்' என்பது பண்டாரப் பாட்டு. "நான் செய்வது சரியா?'! என் பது பண்பாட்டுக் கேள்வி. இவை இரண்டும் மனச்சான்றை வளர்த்து, மனத்தைப் பண் படுத்தி, நம்மை மனிதனுக உயர்த் தும் தன்மை பெற்றவை

எண்ணத் தெரிந்துகொள்! செய்த தவற்றைத் திரும்பச் செய்யாதே! மனச்சான்றின்படி நட! மகிழ்வுடன் கடமை செய்! பணமும் பதவியும் பேரும் புக ழும் உண்மையான மன அமை தியை அளிக்கமாட்டா. வஞ்சனை யில்லா உழைப்புத்தான் மன அமைதியளிக்கும், நண்பா! ஒரு நாளும் உழைக்க அஞ்சாதே

எனக்குத் தோன்றிய உண்மை களை எழுதியுள்ளேன். இதில் உனக்குக் கருத்து வேறுபாடு இருக்கலாம். தயங்காமல் எடுத் தெழுது. உன் கடிதம் எதிர் பார்த்திருக்கின்றேன்.

அன்பன்,

அறவாழி

நடைகள் பலவிதம்

ம. ரா. பூபதி B. A. (Hons.)

மனிதனுக்குக் கால்கள் எதற்காக ஏற்பட்டிருக்கின்றன? எல்லாம் வல்ல இறைவன் கோயிலை மூன்று வேளையும் வலம் வருவதற்கு என்பான் ஆண்டவனுக்கடியான்; பல இடங்களுக்கும் சென்று இயற்கையின் எழில்களைக் கண்டு களிப்பதற்கு என்பான் கவிஞன்; மாலை வேளைகளில் மெரினா கடற்கரையை வட்டமிடுவதற்கு என்பான் சென்னைக் கல்லூரி மாணவன்.

இப்படி, நடக்கின்ற நோக்கம் அவரவர் மன நிலைக்குத் தகுந்தாற்போல் வேறுபடுகிறது; என்றாலும், கால்களில் உள்ள தசைகள் நடக்கவே ஏற்பட்டிருக்கின்றன என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் பலர் தங்கள் கால் தசைகளை நடப்பதற்குப் பெரும்பாலும் பயன்படுத்துவதில்லை; நடப்பதற்கு முதுகையே நாடுகின்றனர்; "முன்னால் நடக்க முதுகு, உடலைத்தாங்கக் கால்கள்" என்பது அவர்கள் கொள்கை.

கொரில்லா நடை (Gorilla walk)

நடத்தல் என்றால் என்ன? உடலின் சமநிலையை (balance) இழப்பது, பின் திரும்பப் பெறுவது—இச்செயல்கள் தொடர்ந்து விரைந்து நிகழ்வதே நடத்தல். நடத்தலாகிய இந்த 'அரியபெரிய' செயலை இரண்டு வகையில்செய்து முடிக்கலாம்: ஒன்று முதுகால் நடத்தல்; மற்றவகை கால்களால் நடத்தல்.

இவற்றில் முதுகால் நடப்பதற்கே கொரில்லா நடை என்று பெயர்.

"கொரில்லா நடையே விரிக்கின், முன்னால் உடலைத் தள்ளி நீட்டித் தரைதா ழாமல் தடுத்தல் என்ப"

என்பது கொரில்லா நடைக்குரிய நடையிலக்கணத் சூத்திரம்! கொரில்லா நடையில், முதலில் கால் முன்னால் செல்வதில்லை. மாறாக இடுப்புக்கு மேல் உள்ள உடல் செல்கிறது. பின் அந்த உடல் சமனிலை இழந்து கீழே விழுவதைத்தடுத்து நிறுத்துவதற்காகக் கால் செல்கிறது. காலின் வேலை உடலைத் தாங்குதல் — இவ்வளவுதான்.

கொரில்லா நடை மனிதர்களுக்கு ஏற்றதில்லையே தவிர, கொரில்லாக்களுக்கு (மனிதர் போன்ற குரங்குகட்கு) மிகவும் ஏற்றது. கொரில்லாக்களின் கைகள் மிக நீளமானவை; நீட்டி

னால் தரையை எட்டக் கூடியவை. ஆகவே, கால்களுக்கு முன்னால் உடல் சென்று குப்புற விழும் நிலை ஏற்பட்டால், கைகள் தரை மீது ஊன்றி உடலைக் கீழே விழாமல் தடுக்கும். ஆனால் மனிதர்களுடைய கைகள் கொரில்லாக் கைகள் போல நீளமாக இல்லை. (கைகள் நீளமாக இருப்பது ஆண்களுக்குரிய முப்பத்திரண்டு அங்க இலக்கணங்களில் ஒன்று என்றும், இராமன், கண்ணன் போன்றவர்கள் கைகள் இப்படி நீளமாக இருந்தன என்றும் நம் சமய நூல்கள் கூறும். அதை இங்கே நினைவுபடுத்திக் கொள்ளாதீர்கள்!) ஆகவே கொரில்லாக்கள் போலக் கைகளைத் தரையில் ஊன்றிக்கொள்ள இயலாது.

கொரில்லா நடையில், மனித உடலில் உள்ள இழுப்பாற்றல் மையம் (centre of gravity) கால்களுக்குள் அடைபடாமல் அடிக்கடி முன்புறமாக வெளியே நகர்கிறது. இதனால் தரைக்குள்ள இழுப்பாற்றல் (gravity) உடலை மிகுந்த ஆற்றலோடு விரைவாகத் தன்னை நோக்கி இழுக்கிறது. இதன் விளைவாக முதுகில் உள்ள தசைகளுக்கும் முதுகெலும்பு வரிசைக்கும்வேலை அதிகமாகி வலிக்கத் தொடங்குகின்றன.

முதுகால் நடப்பது அழகாகத் தோன்றாது. மேலும் சரியாகவும் நடக்கமுடியாது. கால் தசைகளால் எளிதாகவும், துன்பமில்லாமலும் செய்யக்கூடிய வேலையை எதற்காக உடலால் வருந்தியும், துன்பப்பட்டும்செய்யவேண்டும்?

நேரிய நடை (Normal walk)

நேரிய நடையில், உடல் 'உதட்டுக்கு மிஞ்சிய ஒண்பல்போன்று' கால்களை மிஞ்சி முன்னுக்குச் செல்லாமல், நேராக நிற்கும். அதன் கனம் சிறிது இடக்கால் பக்கம் சரியும்; அப்போது வலக்கால் உடலுக்கு முன்னால் நீண்டு தரையில் பதியும். வலக்குதிக்கால் தரை தட்டியதும், இடதுபாதமும் இடக்காலும் முன்னால் நகரத்தொடங்கும்; இப்போது உடலின் கனம் சிறிது வலக்கால் பக்கமாகச் சரியும். முன்னால் நகர்ந்த இடக்கால், வலக்கால் உள்ள இடத்துக்கும் முன்னால் நிலத்தில் பொருந்தி, வலக்காலில் சரிந்த உடலின் கனத்தைத் தாங்குவதற்குத் தயாராகிவிடும். இந்த நேர்முறை நடையில் நடப்பதற்கு வேண்டிய ஆற்றல் (Energy) கால் தசைகளிலிருந்தே கிடைக்கிறது.

> "நேரிய நடையே கூறின், உடலை ஒரு நிலையாக உயர்த்திக், கால்கள் ஒன்றை ஒன்று முன்னிட நீட்டி ,நடத்தல் என்றே நவின்றனர் புலவர்"

என்பார் நடை இலக்கணத்தார்.

நேரிய நடையில் உடல் சமநிலையை (balance) இழப்பதே இல்லை. ஆபத்து ஒன்றும் இல்லாமல் எப்பொழுது வேண்டு

மாளுலும் அது ஒரு நிலையில் நிற்கலாம்; முன்னுக்கு விரைய லாம்; பின்னுக்கு நகரலாம். நடக்கும் போது உடலை முன்னுக்குத் தள்ளுவதற்கும் வேண்டிய ஆற்றல் (Energy) முழுதும் கால் தசைகளிலிருந்து வருகின்றது. கால் தசைகள் இயற்கையில் பெரியவை; வன்மை வாய்ந்தவை; தள்ளுவதற்கும் விரைந்து நகர்வதற்கும் ஏற்ற முறையில் அமைந்தவை. ஆகவே அலுப்பு சலிப் பில்லாமல், நீண்ட நேரம் நடந்து கொண்டே இருக்கலாம்.

'நடையும் நடைப் பழக்கம்', ஆகவே எல்லோரும் நேரிய முறையில் நடக்கின்றனர் என்று சொல்வதற்கில்லை; ஒவ்வொருவர் நடையும் சிறிது சிறிது வேறுபடுகின்றது. தொலைவில் நடந்து செல்கிறவர்கள் ஏற்கெனவே நமக்குத் தெரிந்தவர்களாக இருந்தால், அவர்கள் நடையைக் கொண்டே அவர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்து விடுகிறோம். ஆகவே நடையில் உள்ள சிறு சிறு மாறுதல்களும் நமக்கு நன்மையையே செய்கின்றன. நடை வேறுபாடுகளை முற்றிலும் வகைப் படுத்திக் கூறுவதென்பது எளிதான செயல் இல்லை; என்றாலும் கீழ் வருமாறு சில வகைகளைக் கூறலாம்.

அன்ன நடை (Swan-like walk)

இந்த நடையை 'மட அன நடை' என்றும், 'அன்ன மென்னடை' என்றும் சிலப்பதிகாரம் செப்பும். இந்த நடை பெண்களுக்குரிய அழகு நடை; ஆண்களிலும் சிலர் இந்த அன்ன நடையை மேற்கொள்கின்றனர்; ஆனால் பார்ப்பதற்கு அருவருப்பாக இருக்கும். அன்னம் ஒரு வித இடர்ப்பாடும் இன்றி நீரில் நீந்துவதைப்போன்று, பெண்ணும் உடல் அதிகம் அசையாமல் நடக்க இந்த நடை பயன் படுகிறது.

"அன்ன நடையே அரில்தபத் தெரியின்—முதுகும் தலையும் சிறிதாத் தாழ—இடைவெளித் தொலைவு அரை அடிக்குள்ளா—அடிமேல் அடியிட்ட சைதல்; அதுவே—நங்கையர் நடையென நாட்டப் படுமே"

என்னும் நடை இலக்கணம்.

ஆமை நடை (Tortoise walk)

இது அன்ன நடைக்கு எதிரான நடை. அளவுக்கு மீறிப் பருத்தவர்கள் பெருமூச்சு விட்டுக்கொண்டு அசைகின்ற நடை. இது மேற்கூறிய அன்ன நடை போன்று பெண்களுக்கே உரிய நடை யன்று. இரு பாலர்களுக்கும் பொது. இதைக் குறிக்கும் நடை இலக்கணச் சூத்திரம்.

"கைகால் குறுகிய கனமுடை உடலர்—மெய்த்துளி ஓட, கைத்தலம் குறுக—வீசி அசைதலே விரிநூல் புலவர்—ஆசில் ஆமை நடையென அறைப"

என்பது.

பிடி நடை (Walk of She-Elephant)

சில பெண்களுக்குக் கொடி போன்ற உடல் இருக்காது; ஆனால் சதைப் பற்றுள்ள வளமான தேகம் உண்டு; அவர்கள் நடக்கும்போது உடல் அதிகம் அசையாது. ஆனால் மெதுவாக ஆடிக் கொடுக்கும். அவர்கள் பார்வையும், அன்ன நடைப் பெண்கள்பார்வையைப்போன்று நிலத்திலோ கால் நுனியிலோ பொருந்தி இருக்காது. மாறாக, நேராகப் பார்த்து நடப்பார்கள்; இந்த நடைக்குப் பெண் யானை நடை அல்லது பிடி நடை என்று பெயர்.

"கொடியுருக்குன்றுரு
எனும்வகை இன்றி–இடைப்
படு உடலர் எதிர்நோக்

குடனே–சீரிய தேகம் சிறி
தாய் ஆட–மடப்பிடி என்ன
மதர்த்து நடத்தல்–பிடி நடை

அதுவேபெண்டிர்க்குரித்தே"

என்பது நடை இலக்கண விதி.

பீடு நடை அல்லது ஏறு நடை (Lion – like walk)

நேர்ப் பார்வையோடு மார்பை அளவாக முன்புறம் தள்ளி, நிமிர்ந்து, உடல் ஆடாமல், வேண்டிய அளவு கால்களை எடுத்து வைத்து நடப்பதற்குப் பெருமித நடை, பீடு நடை அல்லது ஏறு நடை என்று பெயர். இந்த நடை ஆண் யானை. சிங்கம் முதலிய பிராணிகளுக் குண்டு. இந்த நடை ஆண்களுக் குரியது; சிறுபான்மை நகரப் பெண்களுக்கும் உரியது என்று சொல்லலாம்; நாட்டுப் புறத்தில் வாழ்கின்ற பெண்கள் இந்த நடையை மேற்கொள்ள முடியாது; முயன்றால் பழி சேரும்.

"பீடு நடையே பேசின்,
நோக்கே
நேரா மார்பம் நிமிர்ந்தசை
யாமல்
இடைவெளி அளவா இரு
கால் மாறி
நடத்தல் என்றே நவின்ற
னர் வல்லோர்; அதுவே,
பெரிதும் ஆடவர்க் குரித்
தென மொழிப
ஊர்ப்பெண் மேற்கொளின்
உறுவது பழியே"

என்பர் நடை இலக்கண ஆசிரியர்.

தேரை நடை (The Toad–like walk)

உடலில் அணிந்துள்ள ஆடைகள் அங்கு மிங்கும் அசைய, வீரத்தோடு கைகளை ஆட்டிக் கொண்டு, தத்தித் தத்தி நடைப்பது தேரை நடை. தேரைகுதித்துக் குதித்து நடக்கும். ஆகவே தான் அதைப் போன்ற நடக்கும், தேரை நடை என்ற பெயர் ஏற்பட்டது. எனவே,

"தேரை நடையே செப்புங்
காலை

சோரும் உடைகள் துவள, வீரம்
படவே கைகள் மெய்வழி போக்கித்
தத்தித் தத்தி நடப்பதாகும்''

என்னும் நடை இலக்கணம் உண்மை நிறைந்தது.

சார்லி சாப்லின் நடை (The Charlie Chaplin walk)

இந்த நடை முதலில் வலப்பக்கம் வளையும்; பிறகு இடப்பக்கம் வளையும்; நல்லபாம்பின் உடலைப் போல வளைந்து வளைந்து செல்லும்; இந்த நடையில் ஆற்றல் (Energy) அதிகமாக வீணாகும். பாதம் நிலத்தில் பொருந்தும் போது, பெரு விரல்கள் வெளிப்புறம் நோக்கி அமையும். உடலின் கனம் கால்களுக்கு முன்னால் தள்ளப்படும் போது, நேர்ப் பாதையிலிருந்து இடப்புறமும் வலப் புறமும் திரும்பும்.

''நஞ்சிடை அரவம் நல்லுடல் ஒப்ப
வலமும் இடமும் வகையாமாறி
வளையும் நடையைப் புலவோர் சார்லி
சாப்லின் நடை எனச்சாற்று வர்; பாதப்
பெருவிரல் நோக்கில் விரியும் வெளியே''

இது இந்த நடையை வர்ணிக்கும் நடை இலக்கணச் சூத்திரம்.

இடுப்பாடு நடை (Rhumba Walk)

உடலைத் தாங்குவதற்குரிய வல அல்லது இடக்காலில் உடல் கனம் முழுவதையும் சரிப்பது இடுப்பு ஆடு நடை. இப்படி சரிப்பதால், இடுப்பு வலக்கால் பக்கமும் இடக்கால் பக்கமும் மாறி மாறி அசைந்து தங்கும். இதனால் உடல் விரைந்து முன்பக்கம் போகமுடியாது. விரைவாக நடந்தாலும் பார்ப்பதற்கு அருவருப்பாக இருக்கும்.

''இடுப்பாடுநடையை இயம்பில் பருத்த
இடுப்பின் பளுவை இடவலக் கால்மேல்
கிடத்தி மெதுவாய் இடம் பெயர்ந் தசைதல்
என்மனார்; விரையின் அருவருப் பாமே''

என்பது நடை இலக்கண முடிவு.

கைவட்ட நடை (Eager-Bea-verWalk)

இந்த நடையை மேற்கொள்பவர்கள் தாங்கள் விரைந்து செல்வதாக மனத்தில் எண்ணிக் கொள்கிறார்கள்; கைகள் மிக மிக விரைவாக முன்னும் பின்னும் ஓடும். கைகள் இரண்டும், இரண்டு வட்டங்களை உண்டாக்குவன போலவே அசையும். இவ்வளவு மிகுதியான வேகத்தோடுகைகள் அசைவதால் உடலின் சமநிலை கால்களுக் கிடையிலிருந்து வெளியே விலகிச் சென்றுவிடுகிறது; மேலும் கைகளின் விரைவுக்கு ஏற்றாற்போல இடுப்புப் பகுதியும் முன்னும் பின்னும் விரைவாக அசையும்.

இதனால் இந்த நடை பார்ப்பதற்கு விநோதமாக இருக்கும்.

அதோடு இந் நடை எக்காரணத்துக்காக மேற்கொள்ளப் படுகிறதோ அக் காரணத்தையே பாழ்படுத்தி விடுகின்றது. விரைவாகச் செல்ல விரும்புகின்றவர்கள் தாம் இந்த நடையைப் பயன்படுத்துகின்றனர்; இந்த நடை பக்கத்தில் உள்ளகாற்றின் வேகத்தைத் தான் அதிகப்படுத்துகிறதே தவிர, ஆளை விரைவில் கொண்டு போவதில்லை; போக வேண்டிய இடத்தை அடைந்த பிறகும் ஓரே களைப்பாக இருக்கும்.

**"கைகள் இரண்டும் களிவட் டம்செய
இடுப்பே முன்னும் பின்னும் இயங்க
அடைவுள காற்றே அகன்று விரைய
விரைதல் வேண்டினர் ஏற்(று) ஏ மாறும்
கடுநடை யதுவே கைவட்ட நடையெனும்
விநோத நடை எனவிளம்பினர் புலவர்"**

என்பது கைவட்ட நடையின் இலக்கணம் என்பர் நடை இலக்கண நூலார்.

முன்கை வட்ட நடை
(The Nervous-Nelly Walk)

இந்த நடைக்கும் முன் கூறிய கைவட்ட நடைக்கும் மிகுதியும் தொடர்புண்டு. கைவட்ட நடையில் முழுக் கைகளும் முன்னும் பின்னும் அசைந்து வட்டங்கள் உண்டாக்கும். ஆனால் முன்கை வட்ட நடையில், கை முட்டிக்குக் கீழே உள்ள முன்கைகள் மட்டும் முன்னும் பின்னும் வேகமாக அசைந்து வட்டங்களை உண்டாக்கும். முட்டிக்குமேல் உள்ள புயங்கள் இரண்டும் உடலோடு ஒட்டிக்கொண்டிருக்கும். தோள்கள் நேராகவும், தசைகள் இளகிய நிலையிலும். சிறிது கூறு விழுந்தது மாதிரியும் தென்படும். இந்த நடை பெரும்பாலும்பெண்களுக்குரிய நடை. இந் நடை உள்ள பெண் வேகமாக "சிவுக் சிவுக்" கென்று நடப்பாள். ஆனால் கால்களுக்கு இடையேயுள்ள தொலைவு குறுகலாக இருக்கும். மேலும் இப்படி நடப்பதால் உடல் சக்தியும் வீணாகச் செலவழியும்.

நடை இலக்கணம் இந் நடைக்குக் கூறும் இலக்கணமாவது :

**"முன்கை இரண்டும் முழுவட் டம்செய
புயங்கள் இரண்டும் உடலில் பொருந்த
நிமிர்ந்த தோளுடன் நேரிழை மகளிர்
சிவுக்சி வுக்கென விரைந்தே உடலின்
ஆற்றல் அழித்தல் அறிந்தோர் முன்கை
வட்ட நடையென வகுத் துரைத் தனரே"**

குதிகால் உதை நடை
(The Splash-kick Walk)

இந்த நடை உடையவர்கள் கால்களில் அணிந்துள்ள பூட்ஸ் மேசோடு முதலியவை சேற்றி

லும், தம்புதுசியிலும் மூழ்கி விடும். நேரிய நடையிலிருந்து இது கொஞ்சந்தான் மாறுபட்டது; என்றாலும், வெறுக்கத் தக்க விளைவுகளை உண்டாக்கி விடுகின்றது. கால் பாதம் முன்னால் செல்லும்போது, குதிகளில் ஒரு சிறு சுழற்சி ஏற்படுகிறது. நடையில் ஏற்படும் இந்தத் திடீர் நிகழ்ச்சியால் குதிகளில் படிந்துள்ள சேறும், மண்துகளும் எதிர்த்திசையில் பறந்துசென்று மற்றக் காலில் அணிந்துள்ள பூட்ஸ், மேசோடு ஆகியவற்றின் மேல் விழுந்து அவற்றைப் பாழாக்கி விடுகின்றன.

"குதிகால் உதைநடை குறிக்
கின், ஒருகால்
முன்செல முனையும் வேளைப்
பின்னுள
குதிகால் சுழலப் பதிந்துள
சேறு
வேறொரு காலணி வீழ்க்
குதலே"

என்பது நடை இலக்கண நூல் விதி.

புரு நடை

(The Cute–Thing Walk)

சில பெண்கள் ஒருவிதமான நடையைக் கையாள்கின்றனர். அது புரு நடப்பதைப் போன்றது. கால் பாதங்கள், நடக்கும் போது நேராகப் பொருந்துவதற்கு மாறாக, உட்புறம் சிறிது வளைந்து படிகின்றன. இதனால் இடுப்பும் நடக்கும்போது அதிகமாக அசைந்து கொடுக்கின்றது. இப்படி நடப்பது தங்கள் பெண்மை அழகை அதிகப்படுத்துகின்றது என்பதும், இப்படி நடப்பதே அறிவுடைமை என்பதும் இப் பெண்களின் எண்ணம்.

இந் நடையில் அடிகளுக்கிடையே உள்ள தொலைவு மிகவும் குறைவு. இடுப்பின் அசைவும் அதிகமாகிறது. ஒரு குறிப்பிட்ட தொலைவு போவதற்கு அதிக அடிகளும் எடுத்து வைக்க வேண்டியிருக்கிறது. இந்தச் செயற்கை நடையால் விரைவில் களைப்பேற்படும்.

"புறவு நடையே புகலின் பாதம்
உள்ளிடம் நோக்கி வளைய,
நடுவிடம்
ஆடியும் அசைந்தும் வாடிடப்
பெண்டிர்
அழகு மிகுமென அகந்தனில்
உன்னிப்
பழகும் நடையெனப் பகரப்
படுமே"

இந் நடைக்கு நடை இலக்கணம் நவிலும் விதி இது.

ஏற்ற இறக்க நடை

(The Upsy–Daisy Walk)

இந்த நடை உடையவர்கள் நடக்கும்போது ஒரு விநோதமான காட்சியைக் காணலாம். ஒவ்வொரு முறையும் அடி எடுத்து வைக்கும்போது, இவர்கள் உடல்கள் ஒருமுறை மேலே சென்று பிறகு கீழ்நோக்கிவரும். இவர்கள் நடப்பதைப் பார்ப்பவர்

கள். இவர்கள் கால்களில் "ஸ்பிரிங்" (Spring) இருக்கின்றதோ என்று ஐயுற்றால் அதில் வியப்பொன்றும் இல்லை. பெருவிரல் போக்கு முன்னோக்கிக் காணப்படுவதைவிட மேல் நோக்கியே பெரிதும் காணப்படும். இந் நடையில் உடல் மேலே சென்று கீழே இறங்குவதற்காகும் ஆற்றல் (Energy) முழுதும் வீணாகச் செலவாகிறது. ஒவ்வொரு அடியிலும் 150 பவுண்டுகளை மூன்று அங்குல உயரத்துக்கு ஏற்றி இறக்குவது என்றால் கொஞ்சமான சக்தியா செலவழியும்?

இந் நடையை விவரிக்கும் நடை இலக்கணச் சூத்திரம் பின்வருமாறு :

"நடையின் ஒவ்வோர் அடி
யிலும் உடலே
முன்னே செல்முனம் சில்லங்
குலமே
ஏறி இறங்கி இடர்ப்பட்டாற்றல்
வீணும் நடையை விளை நூல்
வல்லோர்
ஏற்ற இறக்க நடைஎன் பாரே"

கோமாளி நடை

(I-Don't-Care Walk)

சிலர் நடக்கும்போது தம் நடையைப் பற்றியோ, கால்களின் போக்கைப் பற்றியோ, உடல் ஆட்டங்களைப் பற்றியோ கவலைப்படுவதே இல்லை. தலை ஒரு பக்கம், கையொரு பக்கம், கால் ஒரு பக்கம், உடல் ஒரு பக்கமாகப் போகும். இவர்கள் ஒவ்வொரு முறை அடியெடுத்து வைக்கும் போதும், ஒவ்வொரு வகை அபிநயத்தை இவர்கள் உடலில் காணலாம். இத்தகைய நடைக்கே கவலையற்ற நடை அல்லது கோமாளி நடை என்று பெயர். இந் நடையில் சக்தி மிகமிக அதிகமாக வீணாகிறது; மெலிந்த உடல் உள்ளவர்கள் விரைவில் களைப்படைந்து விடுவர். களைப்பு மிகமிக வெறுப்பும், சலிப்பும் ஏற்படும். இந்த நடை பார்ப்பதற்கும் வெறுப்பூட்டும். ஆகவே இதை யாரும் அவ்வளவாக விரும்புவதில்லை.

"கைஒரு புறமாக் கடுகி
வீசவும்,
காலொரு புறமாக் கழலவும்,
ஆடும்
மெய்ஒரு புறமா மேவவும்,
மேலுள
தலைஒரு புறமாத் தாளம்
போடவும்
அடிக்கோர் அபிநயம் பிடித்தடி
இடுதல்
கோமாளி நடையெனக் கூறப்
படுமே"

என்பது இதைப்பற்றிய நடை இலக்கண விதி.

குடியன் நடை

(The Drunkard's Walk)

சிலர் நடப்பதைப் பார்த்து விட்டு, நாம் "என்ன குடிகாரன் போல் தள்ளாடி நடக்கிறான்!" என்று வியக்கிறோம். கோமாளி நடைக்கும் குடியன் நடைக்கும்

(36-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவில் படிப்பறிவு
புள்ளி விவரங்கள் பேசுகின்றன

இந்தியாவில் மொத்தம் 36 கோடி ஜனத் தொகையில் 6 கோடி மக்களுக்கே (16·6 சதவிகிதம்) ஏதாவது ஒரு மொழியில் சாதாரண கடிதத்தை எழுதவும் படிக்கவும் தெரியுமென்று 1951–ல் எடுக்கப்பட்ட ஜன கணிதக் கணக்குப்படி தெரிகிறது. எஞ்சியுள்ள 30 கோடி மக்கள் தற்குறிகளாவர்.

1951ல் எடுக்கப்பட்டஜனகணிதையில் கண்டுள்ளபடி எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தொகை பற்றிய தஸ்தாவேஜியை ரிஜிஸ்ட்ரார் ஜெனரல் 5–2–55–ல் வெளியிட்டுள்ளார். எழுதப் படிக்கத் தெரிந்த 6 கோடி மக்களில் 6 லட்சம் பேர்களுக்கு படிக்கத் தெரியுமே தவிர எழுதத் தெரியாது. இதில் 5கோடி மக்களுக்கு மேல் நடுத்தரப்பள்ளிக்கல்வி கூட பெறவில்லை. நடுத்தரக் கல்வி பெற்றுள்ளவர் தொகை 90 லட்சம்தான். இந்த 90 லட்சம் மக்களில் 38 லட்சம் பேர்களோ அல்லது, 100–க்கு ஒருவரோ தான் ஹையர் செகண்டரி பள்ளிப் படிப்பில் தேர்ச்சி பெற்றுள்ளனர். 38 லட்சம் மக்களில் 16 லட்சம் பேர்கள் எட்டாவது வகுப்புக்குமேல் கொஞ்சம் படித்துள்ளனர். 46.6 லட்சம் பேர்கள் இண்டர்மீடியட் வரை படித்துள்ளனர். 11·7 லட்சம் மக்கள் பட்டமும், டிப்ளோமாக்களையும் பெற்றுள்ளனர்.

மாதிரி சர்வேயில் 10சதவிகிதம் அடிப்படையில்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஜீவனோபாயத் தொழில் நடத்தும் வகுப்பு மக்களின் பேரில்தான் அவர்களின் கல்வியின் தரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தெ. இந்தியாவில் 28 சதவிகிதம் படித்தவர்கள்

அகில இந்தியாவிலும் 16.6 சதவிகிதம் நபர்களே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருந்தபோதிலும் மேற்கு இந்தியாவில்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தொகை மிக அதிகமாகவிருக்கிறது. இங்கு மொத்த ஜனத்தொகையில் 23·8 சதவிகிதம் பேர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாவர். வட இந்தியாவில்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர் தொகை மிகவும் குறைவு. மொத்த ஜனத்தொகையில் 10·8சதவிகிதம்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாவர். தென் இந்தியாவில் 22·8 சதவிகிதமும்கிழக்கிந்தியாவில் 16·8 சதவிகிதமும், வடமேற்கு இந்தியாவில் 13·3 சதவிகிதமும், மத்திய இந்தி

யாவில் 10·9 சதவிகிதமும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாவர்.

எழுதப்படிக்கத் தெரிந்தவர்களில் பெண்களைவிட ஆண்களே அதிகம். நாடு பூராவிலும் 24·9 சதவிகித ஆண்களுக்கும், 7·9 சதவிகித பெண்களுக்கும் எழுதப் படிக்கத் தெரியும். தென் இந்தியாவில்தான் படித்த பெண்கள் அதிகம். அதாவது 13·5 சதவிகித பெண்கள் படித்தவர்கள். வட இந்தியாவில் படித்த பெண்கள் தொகை மிகவும் குறைவு. அங்கு 3·6 சதவிகித பெண்களே படித்தவர்கள். மேற்கிந்தியாவில் 12·6 சதவிகிதமும், வடமேற்கு இந்தியாவில் 6·5 சதவிகிதமும், கிழக்கிந்தியாவில் 6·6 சதவிகிதமும் மத்திய இந்தியாவில் 3·8 சதவிகிதமும் பெண்கள் கல்வி பெற்றுள்ளனர். ஜீவனோபாயத் தொழில் நடத்தப்படும் வகுப்பைச் சேர்ந்தவர்களிடையே உள்ள படித்தவர்கள் தொகை வருமாறு:—(1) விவசாயம் நடத்தும் வகுப்பினர்களில் 12·1 சத விகிதம் பேர் படித்தவர்கள் (2) விவசாயம் அல்லாத மற்றத் தொழில்களை நடத்துவோர்களில் 29 சதவிகிதம் பேர் படித்தவர்கள்.

1951 ஜனகணிதைப்படி பிரிக்கப்பட்ட 8 வித ஜீவனோபாயத் தொழில் நடத்தும் வகுப்பினர்களில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் தொகை வருமாறு :—

(1) நிலம் சொந்தமாக வைத்துக்கொண்டு உழுது சாகுபடி செய்பவர்கள் அவர்களை அண்டியிருப்பவர்களில் 13·3 சதவிகிதம் படித்தவர்கள் அதாவது இதில் 21·8 சதவிகிதம் ஆண்கள், 4·5 சதவிகிதம் பெண்கள் (2) நிலம் சொந்தமாக இல்லாமல் சாகுபடி செய்பவர்களும் அவர்களை அண்டியிருப்பவர்களில் 11·2 சதவிகிதம் பேர்கள் படித்தவர்கள் (17 3 சதவிகிதம் ஆண்கள் 4·8 சதவிகிதம் பெண்கள்) (3) உழுது பயிரிடுவோர்களும் அவர்களை அண்டியிருப்பவர்களில் 6·2 சதவிகிதம் படித்தவர்கள். (10 சதவிகிதம் ஆண்கள் 2·5 சதவிகிதம் பெண்கள்).

(4) சாகுபடி செய்யாத நிலச் சொந்தக்காரர்களில் 32·8 சதவிகிதம் படித்தவர்கள் (47·7 சதவிகிதம் ஆண்கள், 20·4% பெண்கள்).

(5) விவசாயம் அல்லாத பிற தொழில்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் பிழைப்பவர்களில் 22·2% படித்தவர்கள். இதில் (32·3% ஆண்கள் 10 8% பெண்கள்).

(6) வர்த்தகத்தை நம்பிப் பிழைப்பவர்களில் 32·9% படித்தவர்கள் (51·6% ஆண்கள், 22·6% பெண்கள்).

(7) போக்குவரத்தை நம்பிப் பிழைப்பவர்களில் 32·7% படித்தவர்கள் (41·7% ஆண்கள், 21·7% பெண்கள்) (8) மற்ற சர்வீஸ்களை நம்பியிருப்பவர்களில் 30.5% படித்தவர்கள் (40 6% ஆண்கள், 19·4% பெண்கள்.

நகரங்களில் படித்தவர் அதிகம்

தென் இந்தியாவில் நகரங்களில் 59·1% ஆண்களும், 30·8% பெண்களும் படித்தவர்கள். கிராமங்களில் 34·8% ஆண்களும், 12·7% பெண்களும் படித்தவர்கள். வட இந்தியாவில் நகரங்களில் 48% ஆண்களும், 20·4% பெண்களும் படித்தவர்கள். கிராமங்களில் 17·6% ஆண்களும், 2·2% பெண்களும் படித்தவர்கள்.

10 வயதுக்கு மேற்பட்டவர்களிடையே தான் இந்தப் புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டது. 5 வயதுக்குக் கீழும் அதற்கு மேலும் உள்ள குழந்தைகள் சாதாரணமாக எழுதப் படிக்கத் தெரியாதவர்களே. இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து நகரங்களில் வசிக்கும் மக்களில் 100–க்கு 55 பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்றும் பெண்களில் 100–க்கு 27 பேர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்றும் தெரிகிறது. கிராமங்களில் ஆண்களில் 100–க்கு 24 பேர்களும், பெண்களில் 100–க்கு 6 பேர்களும் படித்தவர்களாவர்.

(33-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே ஒரு வேறுபாடுதான் உண்டு. கோமாளி உடல் எப்படி வேண்டுமானாலும் ஆடலாம். ஆனால் கால்கள் முன்னோக்கியே செல்லும். குடியன் நடையிலோ உடலும் ஆடும்; கால்களின் போக்கும் மாறும்; முன்னோக்கியும் செல்லும்; பக்கவாட்டத்திலும் செல்லும்' பின்னோக்கியும் மீளும்.

"குடியன் நடையே கோமாளி
நடையாம்:
கால்பின் நோக்கிக் கடுகலும்
உரித்தே"

என்பது குடியன் நடைக்கு கூடை இலக்கணம் கூறும் விதி.

மேற் கூறிய நடைவகைகள் பெரும்பான்மைய; இங்குக் கூறாத புதிய நடை யாரிடமேனும் காணப்பட்டால் இக் கட்டுரை படிப்போர் அந்த நடையையும் எப்படியாவது மேற்கூறிய வகைகளுள் ஒன்றில் அடக்கிக் கொள்ளவேண்டும்! காரணம்:

"கூறிய நடையின் வேறுநடை
காணினும்
அடக்கிக் கோடல் ஆன்றோர்
கடனே"

என்று நடை இலக்கணம் வகுத்தளித்த நல்லாசானே புறனடைச் சூத்திரம் கூறி இருப்பது தான்.

—"கலைக்கதிர்."

ஆதாரக் கல்வியால் ஆபத்து!

மக்கள் சபை உறுப்பினர்கள் எச்சரிக்கை

தென்னிந்தியாவின் கல்வித் திட்டங்களில் செய்யப்படுகிற கடுமையான மாற்றங்களை, தென்னிந்திய மக்கள் சபை உறுப்பினர்கள் வன்மையாகக் கண்டிப்பவர்களாக இருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

ஆதாரக் கல்வியை 5 முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்குப் போதிப்பது பற்றிய பிரச்சினையில் அவர்களிடை பலத்த கருத்து வேறுபாடு நிலவியது.

ஆதாரக் கல்வியை ஆதரிக்கும் உறுப்பினர்கள், "குழந்தைகளை வெறும் 'குமாஸ்தாக்க'ளாக ஆக்கிவிடக் கூடாது" என்றனர்.

அதற்குப் பதில் தரும் வகையில், ஆதாரக் கல்வியை எதிர்ப்பவர்கள், "அப்படியானால் குழந்தைகளை வெறும் 'கூலி களாகவும் தயாரித்துவிடக் கூடாது." என்று சுடச்சுடக் கூறியிருக்கின்றனர்.

சென்னை மாநில ஆரம்பக் கல்விக் குழு உறுப்பினர்கள் சென்னையைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்களை நேற்று சந்தித்தனர்.

சில தமிழ்நாட்டு உறுப்பினர்கள் ஆதாரக் கல்வியை ஆதரித்த போதிலுங்கூட, தோழர்கள் திருக்குறள் வி. முனுசாமி, ஏ. ஜெயராமன், சங்கரபாண்டியன், மற்றும் பி. டி. தாணுப் பிள்ளை போன்றவர்கள், "பத்து வயதுக் குட்பட்ட குழந்தைகளுக்கு ஆதாரக் கல்வியைப் புகுத்துவதை அடியோடு ஒழிக்க வேண்டும்," என்று வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர்.

அனேக இடங்களில் இளஞ் சிறார்களுக்கு ஆதாரக் கல்வி போதிக்க முயற்சிக்கப்பட்டதில் தோல்வியே ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்தையும், மேலும் பல மேற்கோள்களைக் காட்டியும் ஆதாரக் கல்வித் திட்டத்தை எதிர்த்து அந்த உறுப்பினர்கள் வாதாடியிருக்கின்றனர்.

"மாறிக்கொண்டிருக்கிற பாடத் திட்டங்கள், பிரதேச மொழியில் பாடங்களைப் போதித்தல் ஆகிய பிரச்சினைகளால் ஏற்கனவே குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டிருக்கிறது ;

"எனவே, இன்னும் 15 அல்லது 20 ஆண்டுகளுக்குப் பொதுவாகவும், குறிப்பாக 5 முதல், 10 வயதுடையவர்களுக்கும் ஆதாரக் கல்வி போதிப்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதைக்கூட மேற்கொள்ளக்கூடாது," என்றும் அவர்கள் கருத்தறிவித்திருக்கின்றனர்.

"ஆதாரக் கல்வி தேவை என்ற பிரச்சாரம் புரிவோரே தங்கள்

குழந்தைகளை, ஏதாவது ஆதாரப் பயிற்சி இல்லாத, 'கான்வெண்ட்' பள்ளிகளுக்கு அனுப்பிவரு வதே பொது மக்களிடையே பரவி நிற்கும் ஆதாரக் கல்விக் கண்டனத்திற்குப் போதுமான எடுத்துக் காட்டாகும்,'' என்றும் அவர்கள் கூறியிருக்கின்றனர்.

"சென்னை புதிய கல்வித் திட்டத்தினால் குழந்தைகளுக்கு மனனஞ் செய்யும் பழக்கமே இல்லாது போய்விட்டது; எளிய கணிதம்கூட குழந்தைகட்குத் தெரியவில்லை,'' என்றும் அபிப்பிராயப்பட்டனர்.

"சமீப ஆண்டுகளில் சென்னையில் செய்யப்பட்ட 'பரிசோதனை' களின் விளைவாக, தென்னிந்தியர்களின் திறமை குறைந்திருப்பதுடன், தேசீய, சர்வ தேசீய உத்தியோகங்களுக்கு அவர்கள் நேர் தெடுக்கப்படுவதும் குறைந்துவிட்டது;

"இதர மாநிலங்களிலும், தனியார் நிறுவனங்களிலும், சென்னை பட்டதாரிகளை விரும்பி உத்தியோகத்திற்கு வரவேற்கப்பட்ட நாட்கள் சென்றுவிட்டன; எனவே, இந்த நிலையில், தென்னிந்தியப் பள்ளிகளில் கல்விச் சீர் திருத்தங்கள் செய்யப்பட்டு, கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் ஆங்கிலம் புறக்கணிக்கப்பட்டால், கொஞ்ச காலத்தில் தேசீய, சர்வ தேசீய உத்தியோகங்களில், தென்னிந்தியர்கள் எங்கும் இருக்கவேமாட்டார்கள்,'' என்றும் அவர்கள் திட்டவட்டமாகக் கருத்தறிவித்திருக்கின்றனர் என்றும் தெரிய வருகிறது.

—" நம் நாடு "

மணி மொழிகள்

எஸ். சீதாலட்சுமி

1. நீ பிறருக்குத் தீங்கு செய்யும்போது உனக்கே தீங்கு செய்து கொள்கிறாய். ஏனென்றால் பிறர் வேறு நீ வேறு அல்ல.

2. அண்டத்தில் தன்னையும், தன்னில் அண்டத்தையும் காண்பவனே மகா யோகி.

3. உடல் பலத்தால் இரும்புச்சங்கிலியை உடைத்துவிடலாம். ஆனால் ஆசை எனும் சங்கிலியை விவேகத்தினாலன்றி உடைக்க முடியாது.

4. அறநெறியை அனுஷ்டிப்பதற்கு யாக்கை வேண்டுமே யொழிய அழகுக்கல்ல. அழகில்லார் பலர் யாக்கையின் உதவியால் ஆத்ம ஞானத்தைப் பெற்றிருக்கின்றனர்.

5. சிறியதை நாடிப் பலதடவைகளில் நாம் பெரியதை இழந்துவிடுகிறோம்.

அந்த நாட்டு நாடோடி!

("அரசிளங்கோ")

விழியில் வழிந்தோடும் கண்ணீர்த் துளிகளுக்குச் சொந்தம் கொண்டாடுபவன் சீமான் அல்ல; ஏழையாகத்தானிருப்பான். ஏழையின் அழுத கண்ணீரைக் கண்டு கலங்கியவர் உண்டு; அது வற்ற வழியே இல்லையா என்று எண்ணியவரும் உண்டு; முன்வந்து முயற்சி வைத்து முயன்றவர்களும் உண்டு.

வக்கில்லாமல், வழிஉணராமல், வாழ வழியே தெரியாமல் ஓடாகி, வறுமை மிகுந்து, உயிர் உள்ளளவும், உழைத்து வந்து ஏழைகளைக் கண்டு, ஆசைமுகங் கொண்டு, 'உன் விழி நீரைத் துடைக்கிறேன்; உன் தொல்லை எனக்குத் தெரியும், உனக்கு வேண்டிய பல வசதிகளையும் செய்கிறேன். அதற்கு வேண்டிய திட்டத்தை இப்போது தயாரித்துக் கொண்டிருக்கிறேன். உழையுங்கள், உற்பத்தியைப் பெருக்குங்கள்' என்று முதலைக் கண்ணீர் விட்டவர்கள், ஏமாற்றும் எத்தர்கள், சரசிகளைச் சுற்றி வரும் உல்லாசிகள், ஊர்ஊர், நாட்டுக்கு நாடு, இருந்தனர், இருந்தும் வந்தனர், இருந்து கொண்டும் வருகின்றனர், இன்றும் இப்பொழுதும்! உழைப்பவன் பெருக்கும் கண்ணீரை தடைபோட வேண்டும் என்று உதட்டில் மிதந்து வந்ததே தவிர தடுத்து நிறுத்த முயலவில்லை, முதலாளி வர்க்கம் முயன்றதும் கிடையாது. சரித்திரம் தரும் வரலாறு இது!

செல்வவான்களின் செருக்கும், அவர்களின் ஆட்டமும் பாட்டமும், கேளிக்கைகளும் கொண்டாட்டங்களும் சில பல நன்மைகள் புரிந்திருக்கின்றன ஒரு சில நாடுகளில். எங்கெந்த நாட்டில் பணபலமும் பஞ்சைகளின் எண்ணிக்கையும் மிகுந்துள்ளதோ அந்த நாட்டில் ஊருக்கு உழைக்கும் ஒரு சில உத்தமர்கள் தோன்றிஉள்ளனர், தோன்றியும் வருகின்றனர். எடுத்துக் காட்டு—இந்தோசீனு!

ஏழையின் வியர்வையை வழித்தெறிய முன்வந்தான் ஒருவன். சீனத்தின் எல்லையிலேயுள்ள இந்தோ சீனம் அவனைத் தோற்றுவித்தது.

பல நாட்டில், ஏழையின் உணர்ச்சி ஆரம்ப காலத்திலேயே அழிக்கப்பட்டு விட்டதை நன்கு உணர்ந்தவன். சரியாகத் திட்டம் தீட்டப்படாமல், ஒழுங்கான கண்காணிப்பில்லாமல் வெறும் வளர்ச்சியை நம்பி இறங்கிய ஏழை மக்களின் புரட்சியை அடிச்சுவடுகூடத் தெரியாமல் ஆளும் ஆயுதத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டுப் போனதைக் கண்டு அனுபவம் பெற்றவன்.

ஏழை வெறும் உணர்ச்சிக் கூடாக இருக்கக் கூடாது. வயிர உள்ளமும் சமய சந்தர்ப்பத்திற் கேற்ற போர்த் திறமையும் கொண்டு போராடவேண்டும்! புலி பதுங்குவது பின் தங்கிப் போகிறது என்பதற்காக அல்ல, வெற்றிக்கு வேண்டிய வழியை அந்தச் சமயத்தில் அடைகிறது என்பதுதான் உண்மை என்பதை யுணர்ந்தவன். பொருமும் ஏழை, பொழியும் கண்ணீர் பன்னீராக மாறவேண்டும், மாற்ற வேண்டும் என்று கருதி, திட்டம் தீட்டி வெற்றிப் பாதையை நோக்கு கையில் ஆயிரமாயிரம் இளம் சிங் கப் பட்டாளங்கள் அஞ்சா நெஞ் சுடன் அணி வகுத்து நிற்பதைக் கண்டு புன்னகை பூத்தான். காளையரின் புதுமுகம் கண்டான் மகிழ்ந்தான்! மகிழ்வு உள்ளத் தில் நிறைய இளைஞர்கள் சுதந்தர கீதம் பாட மங்கையினர் வாழ்த் துப்பா முழங்க வெற்றிப் பாதையை நோக்கிப் பீடுநடை போட்டான் **அந்த இளைஞன்—ஹோசி-மின்!**

மக்கள் மன்றத்தில் ஏறுநடை போட்ட அவனை ஒழித்துக்கட்ட முயன்றவர்களில் மதவாதிகளும் உண்டு. துரோகிகளும் உண்டு. அதிகார வெறிபிடித்த ஆளும் ஆதிக்கத்தினரும் உண்டு. அவனை அழித்து ஒழிக்க வேண்டு மென்று கூச்சல் போட்ட குறை மதியினர் குன்றிப் போயினர்; குமுறலாயினர் அவனை முறி யடிக்க முடியவில்லை என்ற தோல்வியில்.

"என்னுடையவன், என்ன ருமைத் தோழன், என் நாட்டுக் காந்தி, என்னருமை மாமா" என்று செல்லப்பெயரிட்டுப் பள் ளுப்பாடுகின்றனர், வீரம் என்ற வார்த்தைக்குப் புதிய தொரு பொருள் தந்த வியட்நாமியர்கள்; இன்று!

ஊர்சுற்றியவன், பரதேசிப் பயல், எச்சல் தட்டைக் கழுவிய வன், நாடோடிப்பயல், உன்னை ஒழித்து விடுகிறேன் பார் என்று உலகறியப் பறைசாற்றிய ஏகாதி பத்திய வெறியர்களைக்கண்டு 'எங்கள் நாட்டுத்தலைவர். நாட் டுக்கு நாடு ஓடி அலைந்த நாடோடி தான், குடியரசைக் காட்டிப்புது வாழ்வைத்தந்தசெம் மல் அவர்', என்று வீரப்பண் பாடுகிறார்கள், இன்று வியட் நாமியர்கள்!

1945-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் பூத்து மலர்ந்தது, வியட் நாம் குடியரசு. தலைவர் ஹோசி-மின். அவர் வானொலியில் மக் களுக்கு ஒலிபரப்புகையில் மக் கள் எவரும் சமம்; ஏற்றத் தாழ்வு இல்லை. விடுதலையும் வாழ் வும் இயற்கை கொடுத்த அழி யாச் செல்வங்கள். பிரஞ்சு வெறி யாட்சியில் தொண்ணூறு ஆண்டு களுக்கு மேலாக அல்லல்பட் டோம். அவதியுற்றோம், தாங் கொணுத்தொல்லை; அடக்கு முறைச் சட்டம் எல்லாம் கண் டோம். நம் ஒற்றுமையைத் தகர்த்தனர். விடுதலை இயக்க வீரர்களை வெட்டிச் சாயத்தனர்.

இன்று நாம் விடுதலை பெற்று விட்டோம். இப்போது ஆடிச் சிறகடித்துப்பறக்கும் சிட்டுக் குருவிகள் நாம்! நம் புதுக்குடியரசில் உழைப்பனுக்கு உணவு உண்டு. எல்லோரும் ஓர் நிறை! நம் குடியரசில் ஏற்றத்தாழ்வு எதுவுமிருக்காது என்று ஒலிபரப்பினார் அந்த அறிஞர்!

1890-ம் ஆண்டு! அடிமை இந்தோசீனத்தில் அன்னாம் ஒரு பகுதி! யின் (Yinh) அதிலமைந்த ஒரு மாகாணம். அதில் ஒரு கிராமம். அங்கு எளிய குடும்பத்தலைவன் ஒருவனை தந்தையாகக் கொண்டு பிறந்தான் ஹோ. கொஞ்சிக் கொஞ்சி பால் ஊட்டித் தாலாட்டும் தாயும், முத்தம் தந்து மகிழும் தந்தையும் ஊட்டி ஆட்டி வராலாயினர்.

நாட்கள் திங்களுடன் ஓடி ஆடி, வளர்ந்து கொண்டிருந்தான் அவன். அன்னையும் தந்தையும் அவனை ஊட்டி வளர்த்து வரும்போது நாட்டின் நிலைமையையும், தோற்றத்தினையும் உணர்த்த இயற்கை அன்னை மறக்கவே இல்லை. உற்சாகமும், நல்லறிவும் கொண்ட அவனை 'குடிஉரிமை உன்னுடைய பிறப்புரிமை' என்று அதுவே அவனுக்குப் பாடம் சொல்லித் தந்தது.

துள்ளினும் களைக்காத பருவம்! இயற்கை கொடுத்த துடுக்கும், அடிமை நிலத்தின் நாட்டுப் பற்றும் சேர்ந்து நெஞ்சை உருக்காக மாற்றிக் கொண்டிருந்த நேரம்! அவனுக்கு ஆண்டு பதினெட்டு ஆயிற்று. வீட்டிலே தங்க விரும்பவில்லை. பலமுறை கனவுண்ட நாடுகளைக் காணவேண்டும், கண்டு குடியோம்பலின் முறையை அறியவேண்டும் என்ற விருப்பம் அவன் இதயத்தின் அடித்தளத்திலிருந்து சத்தம் வைத்துக்கொண்டேயிருந்தது! பதினெட்டாம் ஆண்டில் பிரெஞ்சு கப்பலொன்றில் சாதாரண எடுபிடி ஆளாக சேர்ந்தான். கப்பல் செய்கோன் துறைமுகத்திலிருந்து அமெரிக்கா புறப்பட்டது. ஹோ அமெரிக்க மண்ணில் இறங்கினான். பிறகு பிரிட்டனுக்குச் சென்றான்.

பிரிட்டனில் உணவுக்கடை ஒன்றில் வேலைக்காரனாக அமர்ந்தான். கிடைத்த வேலையும் கூலிவேலைதான். ஹோவின் வேலை, உணவு அருந்திவிட்டுச் சென்றவர்களின் தட்டுகளைக் கழுவுவது. சிறிது காலம் அந்த வேலை அவனைக் கடத்திக் கொண்டு வந்தது. பிரிட்டனில் இருந்தபோது முதலாம் உலகச் சண்டை தொல்லைகளுக்கிடையே வாழ்ந்து வந்தாலும் ஓய்வு கிடைக்கும்போது, பலமுறைச் சொற்பொழிவுகளை கண்டு கேட்க அவன் தவறியதே இல்லை. சில கால வாழ்க்கை ஓட்டத்தில் அவனுக்குப் பிரிட்டன் கசந்தது.

அவன் உள்ளத்தில் அடுத்து வட்டமிட்ட நாடு பிரான்ஸ்!

பாரிஸ்! சீமான்களின் சிருங்காரவனம். அழகியவர்களின் ஆடல்பாடல்களுக்கு அது ஒரு சொர்க்கவாசல்!

கொஞ்சி மொழியினங்கள் சிப்பிபோல் நகரும்போது, அழகைத் தழுக்கடித்துக் கொண்டிருக்கும் துல்லிய இழை ஆடைகள் காற்றையும் கால்களையும் அலசும்போது, வெட்டும் விழிகள் குறுகுறுத்துச் சுழலும் பொழுது, வாசம் வீசும் தென்றலைப்பரிமளக் கூந்தல் தொட்டுத் தடவும்போது, பைய விழிகள் அங்கு மிங்கும் காண, நாணம் கொண்டதுபோல் நடித்து துவளும் அந்தக் கோகிலங்களின் துடி இடை... அப்பப்ப! அம்மம்ம...சொல்ல முடியாது! ஆப்பிள் ஜூஸ், பழரசம்தான் பாரிஸ்!

சேல்விழி மங்கையர்களும் உல்லாச புரியினரும் சேர்ந்து சிந்து பாடிக்கொண்டிருந்த நேரம்தான், ப்ரான்ஸ் புரட்சிக்கு முன்னிருந்த நிலை.

இதுபோன்ற நிலையைக் காணக் கொடுத்து வைக்கவில்லை ஹோவுக்கு. ஏழை எரிமலையாகி, எத்தர்களை எரித்து எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் விளங்கிய நிலையில் பாரிஸ் சென்றான் ஹோ.

பாரிஸ் நகரத்தில் புகைப்பட நிலையம் ஒன்றில் வேலைக்கு அமர்ந்தான். புகைப்படம் எடுப்பவரின் கீழ் வேலை பார்த்து வந்தான், துணையாளாக! படம் எடுப்பது, திருத்துவது, மெருகிடுவதுதான் இவன் செய்து வந்தவேலை. நிலையத்தின் உரிமையாளர் இவன் வேலைக்குக் கூலியாகக் கொடுத்து வந்தது ஒரு சில நாணயங்கள், பிராங்குகள் தான்!

அமெரிக்கா சென்ற நேரத்திலும், பிரிட்டனிலிருந்த காலத்திலும், பாரிஸில் அடி வைத்த போதும் ஹோ, எந்தத் தொல்லையையும் கண்டு அஞ்சியவனல்ல. அதற்காக அழுதவனுமல்ல! எதையும் தாங்கும் இதயம் அவனிடம் இருந்தது. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் பிறந்த நாடு அவன் கண்முன் வரும். பிரெஞ்சு ஆதிக்க வெறியர்களின் ஈட்டி முனை முன்னால் அல்லலுறும் ஆயிரக் கணக்கான அந்த நாட்டு உயிர்கள், வந்து வந்து ஓடும். தங்கம் உண்டு அவனது பூமியில், வளம் கொண்ட நாடு அவனது நாடு. கனிப் பொருள் கொண்ட நாடுதான். பிறந்த நாட்டின் பெருமையை நினைப்பான். அது பெற்று தன்னகத்தே குவித்து வைத்திருக்கும் செல்வங்களை நினைப்பான். உறங்குகையிலும் சிந்தனையிலும், ஓய்வு கிடைக்கும் ஒவ்வொரு விநாடியிலும், அவனை அழைத்து நாட்டைப்பற்றி உரைத்து அறிவைத் தரும் ஆசானாக இருந்தது, மறைந்த மனித குல மாணிக்கம் மார்க்ஸ்—அளித்த நூல்கள்.

அறிஞன் மார்க்ஸ் அவனுள்ளத்தை அறிவொளியால் நிரப்பி

ஞன். மார்க்ஸ்தான் கடவுள் தந்தை, தாய் எல்லாம்!

கிடைக்கும் சமயங்களில் பிரஞ்சுப் புரட்சியைப் பற்றிப் படிக்கத் தவறவில்லை. பாஸ்டில் சிறை முதலாளி வர்க்கத்துக்கு முன்னுல் தூள் தூளாக்கப்பட்டதும் தெரியும்! பல நாட்டு வரலாறுகளைக் கண்டான். அது தந்த அனுபவங்களை உள்ளத்தில் கொண்டான்! பல்வேறு மொழிகளை கற்றுத் தெளிய வேண்டும் என்ற நினைப்பை அவன் விட்டு விடவில்லை. பாரிஸிலிருந்தபோது அங்கு நிலவிய சூழ்நிலை நல்ல படிப்பினையைக் கொடுத்தது ஹோவுக்கு. அவனுடைய எதிர் காலத் திட்டத்திற்கு ஒரு வளர்ப்புத் தாயாக இருந்தது அந்த மண். ஹோ முப்பதாவது ஆண்டை எட்டிப் பிடித்தான்.

அவனின் அரசியல் படிப்பும் பாரிஸிலிருந்துதான் தொடங்கியது. அரசியல் பால பாடத்தை அந்த நாட்டு அபேதவாதக் கட்சியிலிருந்து தொடங்கினுன். அதனுடன் வேறுபாடு கொண்டதன் காரணமாக அதிலிருந்து விரைவிலே விலகி பிரஞ்சு நாட்டுப் பொதுவுடமை இயக்கத்தில் சேர்ந்தான். அதே ஆண்டு அவன் நாட்டு அன்னுமியரின் சார்பாக மூன்ருவது அனைத்துலக காங்கிரசில் கலந்து கொண்டு இணையாக வாக்களித்தான். இதனிடையே பத்திரிகை ஆசிரியராக வேண்டும் என்ற எண்ணம் மனதில் வந்து கலந்தது. அந்த நாட்டு ஏடுகளில் சில, ஹோவின் சிலபல கட்டுரைகளைத் தாங்கி வெளியிட்டன.

1922–ஆம் ஆண்டு! முப்பத்திரண்டாவது வயதில் உருண்டு கொண்டிருந்தான் ஹோ. "Le Paria" என்ற இதழை சொந்தமாகத் தொடங்கினுன். இதில் தான் அவனுக்கிருந்த வேட்கையைப் பூரணமாகக் காணமுடிந்தது.

முதலாளித்துவம் ஹோவின் பேனு முனையில் விழிபிதுங்கியது. ஹோவின் எழுத்துக்கள் சாட்டையடிபோல் விளங்கின. அவன் பாரீசில் இருந்த காலையில் இந்தோசீனத்திற்கு சுதந்திரம் வேண்டுமென்று முழங்கியதை அப்பொழுதிருந்த மூன்று நாட்டு முப்பெருந் தலைவர்கள் Lloyd George, Wodro Wilson, George Clemenceau போன்றவர்கள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை, காதில் போட்டுக் கொள்ளவுமில்லை, அதைப்பற்றி கவனித்ததாகவும் தெரியவில்லை.

நாட்கள் பிறந்து வளர்ந்து கொண்டேயிருந்தன. புரட்சியின் தாயகம் சோவியத் மண்ணைக்காண அவாக் கொண்டான். ஹோவின் வியத்தகு அறிவின் திறனைக் கண்டு சோவியத் வியந்தது. பின் 'சோவியத்துக்கு வருக!' என்ற அழைப்பும் விடுத்தது. சோவியத் மண்ணில் காலடி வைப்பதற்கு முன் நாட்டுக்கு நாடு சுற்றினுன். பரோடி (Borodin)னுடன் சீனம் சென்ருன். மலேயாவில் கால்வைத்

தான். அண்டை நாடான சயாமில் நுழைந்துமிருக்கிறான். ஹாங்காங் சென்று வர மறக்கவேயில்லை. இறுதியில் சோவியத் பூமி ஹோ வைக்கண்டது. அந்த ஆண்டுதான் 1923. அங்கிருந்து ஹோ காண்டனுக்கு வந்தான். செயல் துறையில் இறங்கினான். 1926-ல் அன்னாம் இளைஞர்களின் விடுதலை இயக்கம் கண்டான். பரோடினுடன் இருந்து கொண்டு காலனி எதிர்ப்பு அறிக்கைகளை வெளியிட்டான்.

ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நாளன்று அன்னாமியரில் பலர் காண்டனில் ஓரிடத்தில், ஒன்று கூடுவது வழக்கம். உயிர் துறந்த அன்னாமிய வீர இளைஞனின் கல்லறை அது. அது காண விழா மாதிரி ஆயிரக் கணக்கில் வருவர், கூடுவர். கல்லறையைக் காணவரும் அன்னாமியருக்கு முன்னால் அவன் வீரம் தெறிக்கும் சொற்பொழிவாற்றுவான்.

1927—ஆண்டில் சியாங்காய் ஷேக் கொமின்டாங் கட்சிக்கும் விடுதலை வீரன் 'மா' வின் செங்கொடி இயக்கத்திற்கும் சீனத்தில் சச்சரவு உண்டாயிற்று.

இது சமயம் சோவியத் மறுமுறையும் ஹோவை அழைத்தது. இம்முறை பரோடினுடன் ஹோ சோவியத் சென்றான். ஹோ இல்லையென்றாலும் அவன் கண்ட காண்டன் இளைஞர் கழகம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டு இருந்தது.

ஆண்டு 1930—அவனது வாழ்வில் ஓர் அற்புதத்தை நிகழ்த்தியது! வெறும் ஹோ, தோழன் ஹோவாக மாறினான்! ஆம்! அன்றுதான் பொதுடமை இயக்கம் கண்டான், அதற்குக் கடைக்கால் நட்டான்—அவ்விடுதலை இயக்க வீரன்.

பிரெஞ்சு ஆதிக்க புரியினர் மனித வேட்டையாடிய நேரங்களில் இந்த நேரமும் ஒன்று. சுதந்திர வீரர்களை சல்லடை போட்டு சலித்துக் கொண்டிருந்தது பிரெஞ்சு அரசாங்கம். பிரெஞ்சு அதிகாரவெறியர்களின் கண்களிலிருந்து அவன் தப்ப முடியவில்லை. அவனைக் கையும் மெய்யுமாகப் பிடிக்க வேளையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். பிரிட்டிஷ் உதவிகொண்டு அவன் சிறை பிடிக்கப்பட்டான் ஒரு நாள்.

அழித்துவிடலாம், ஒழித்து விடலாம் என்று சிந்து பாடிக்கொண்டிருந்த சீமான் வர்க்கம் 'ஹோ' பிடிபட்டான், சிறையிலே அடைக்கப்பட்டான் என்று கேள்விப்பட்டபோது,'ஒழிந்தது உபத்திரவம். தங்கு தடையில்லாமல் சுரண்டலாம்' என்று கருதியது.

இங்கிலையில் அவன் க்ஷயரோகத்தினால் மிகவும் தொல்லைபட்டான். அவன் உடல் இந்நோயால் மெலிந்தது. ஹோ மெலிந்து வருவதைக் கண்டு பிரெஞ்சு அரசாங்கம் கண்ணின் மணிபோலக் காத்து வந்தது.

அவன் மேல் கொண்ட அன்பின் காரணமாக அல்ல, அச்சத்தின் காரணமாக!

ஆண்டுகள் ஓடி மறைந்து கொண்டிருந்தன. 1936–வது ஆண்டு பிரான்சில் இடதுசாரியினர் ஆட்சிமனை ஏறினர். இந்தோ சீன மக்களுக்கு முற்றும் நம்பிக்கை பிறக்கவில்லை என்றாலும், ஓரளவுக்கு நம்பிக்கை இருந்தது. வெஞ்சிறையில் வாடி வதங்கிய வாலிபக் காளைகள் எல்லாம் விடுதலை செய்யப்பட்டனர். பொதுவுடைமை வீசும் ஏடுகளை எழுதலாம், படிக்கலாம், அச்சடிக்கலாம் என்ற உத்தரவைத் தந்தது அப் புதிய அரசாங்கம்.

புதிய அரசின் ஒவ்வொரு செயலும் வெறும் கண்துடைப்பு நாடகமென்று எண்ணினர் ஹோவும் மற்ற தலைவர்களும். சுதந்திரம் என்ற பேச்சே இல்லை, அளிக்கப்படவில்லை. இன்றோ, நாளையோ என்ற அளவில் மக்களின் மனக் குமுறல் இருந்து வந்தது.

தொழிற்சாலைகளில் அடிக்கடி வேலை நிறுத்தம் ஏற்பட்டது. தொழிற் சங்கம் காணவும், மேடையேறிப் பேசவும், கூட்டம் கூட்டும் உரிமையும் பேச்சளவிலே இருந்தது. ஒவ்வொரு வீர இளைஞனும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடத் தயாராக இருந்தான்.

1940–ம் ஆண்டு! ஜூன் திங்கள்! வெறி நாயைப்போல் வேட்டையாடிக் கொண்டு வந்த ஹிட்லரிடம் பிரான்ஸ் மண்டியிட்டுப் பணிந்தது! விச்சியின் ஆதரவு கொண்டு இந்தோ சீனத்தில் பட்டாளங்களுடன் படை எடுத்தனர் பாசிஸ ஜப்பானியர். படை எடுப்பைக் கண்டு ஒவ்வொரு இந்தோ சீன வீரனும் வெகுண்டான், உள்ளம் கொதித்தான். மூலை முடுக்குகள், பட்டிதொட்டிகள் எங்குமுள்ள ஒவ்வொரு சாதாரண மனிதனும் ஜப்பானிய பாசிஸத்தின் போக்கினை எண்ணத் தலைப்பட்டான். தெரிந்தோ தெரியாமலோ ஒவ்வொருவரும் ஒரு முனையில் சேரலாயினர். நாட்டில் உறங்கிக் கிடந்த ஒரு சில மக்களையும் விழிக்கச் செய்து விட்டது பாசிஸ்டுகளின் படை எடுப்பு. இதுவரையில் தனித் தனி முகாம் அமைத்துக் கொண்டிருந்த தேசியவாதிகள் குடியானவர் தொழிலாளர்கள் இயக்கங்கள் எல்லாம் ஒன்று சேர விழைந்தன; இணைந்தன. நாட்டின் நானாவித இயக்கங்களையும் ஒன்றுபடுத்தி விட்டது அந்தப் படை எடுப்பு. படையை அணி வகுத்துச் செல்லும் படைத் தலைவனாக ஆக்கப்பட்டான் ஹோ. வறுமையில் உழன்றும் அவன் தலைமையில் வயிரம் பாய்ந்த கட்டையாக ஒவ்வொருவனும் விளங்கினான்.

நீண்ட காலமாகக் குமுறிக் கொண்டிருந்த இளைஞர்களின் உள்ளம் ஒரு அரிய வாய்ப்பைப் பெற்றது. 'சாவே வா! கழனியைக் கட்டாந் தரையாக்கும்

பாசிஸ வெறியர்களை ஒழித்தே முடிப்பேன்' என்று சூளுரைத்து ஆயுதம் ஏந்தினர். ஆயுதமும் வெடிகுண்டுகளும் வழங்கப்பட்டன. கொடுமையையே கண்டிருந்த உள்ளம் குமுறிற்று, வெடித்தது! கொரில்லாப் போர், எங்கும் எம்முனையும். காட்டில், வீட்டில், பட்டி தொட்டியில், எங்கும் எச்சந்தும், 'வியட்நாம்— அது எங்கள் குடியரசு' என்று முழக்கமிட்டனர் விடுதலை விரும்பிகள்.

பிரெஞ்சு அரசாங்கம் ஜப்பானியரின் படை எடுப்புக்குப்பின் இருந்த இடம் தெரியவில்லை.

'கொலை வாளினை எடடா!

மிகு கொடியோர் செயல் அறவே, என்று முழங்கினர். வியட்நாமியரின் வீரசுதந்திர கீதத்தை யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஒவ்வொரு வியட்நாம் வீட்டிலும் வியட்நாமியரின் சுதந்திர கீதம் கேட்டது. சங்கென முழங்கியது!

ஜப்பான் உலக யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டது. வியட்நாமியர் விடுதலைக் கொடியை நாட்டினர். 1945–ம் ஆண்டு! செப்டம்பர் திங்கள் அழகு மிகுந்த நாள் அவர்கட்கு! அன்று குருதி கொட்டி வீரப் போரிட்டு மடிந்த ஆயிரமாயிரம் வியட்நாமியரின் நினைவு அலைகளின் இரத்தச் சுவட்டில் 'வியட்நாம் குடியரசு' மலர்ந்தது, பரிணமித்தது. சுரண்டல் கொடி சுட்டு எரிக்கப்பட்டது. ஐந்து கோண நட்சத்திரம் பொறிக்கப்பட்ட கொடி உச்சி மீது ஏறியது. அண்டம் கண்டு அதிசயித்தது, இந்த அற்புத நிகழ்ச்சியை!

இந்த அதிசயத்தைக் கண்டு உலகப் பெரு மக்கள் விந்தை மிகக் கொண்டார்கள். ஏகாதிபத்தியவாதியினர் மிரண்டு, செய்வது இன்னது என்று அறியாது திகைத்தனர். பிரஞ்சு ஆதிக்க வெறியர்களுக்கு உதறல் கண்டது. இந்தோ சீனத்தை அபினும் மற்றவற்றாலும் சுரண்டி வந்த சீமான்களால் இப்போது சுதந்திர கீதம் பாட முடியவில்லை.

நாட்கள் பிறந்து உருமாறிக் கொண்டிருந்தன. பிரஞ்சு ஆதிக்கபுரியினருக்கு காலனி ஆசை இன்னும் விடவில்லை. இவர்களுக்கு ஒத்தாசைபுரிய டாலர் ஏகாதிபத்தியம் உதவிக்கு வந்தது. தங்களின் பாரும், பண பலமும் போய்விட்டதே என்று பாதவித்தவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது இது. வளங்கொண்ட நாட்டின் பொன் கொழிக்கும் நிலங்கள் பண அரசர்களின் முன்வந்து ஆட்டம் போட்டன.

வியட்னும் குடியரசு பூத்த அதே ஆண்டு பிரஞ்சியர் வியட்னுமியரைத் தாக்கினர். அமெரிக்கரின் ஆள் அம்பு விமான வெடிகுண்டு பிரஞ்சியருக்கு உத

வியாகவந்தன. பிரிட்டனும் பிரஞ்சியருக்குப் பக்கபலமாக நின்றது. ஆதிக்க வெறியினர் பிரஞ்சு பக்கம் நின்று கொக்கரித்தனர். தன்னாட்டுத்தோழன் ஒவ்வொருவன் முன்னும் ஹோ நின்று வாரீர் களம் காண்போம் என்று உரிமைக் குரல் கொடுத்தார்.

ஹோ ! பேரே புதுமை ! உள்ளத்திலிருந்து வரும் வார்த்தைகளே புதுமை! பேச்சிலே தனி வகைப் புதுமை! மக்களை இயக்க அடிப்படையில் ஒன்று திரட்டி குடியானவரும் தொழிலாளரும் அணிவகுத்துச் செல்லும் முறையே புதுமையல்லவா?

'நாம் பிறந்தது நல்ல மண். வீரம் வளர்க்கும்மண். சுதந்திரச் சிட்டுப்போலப் பறக்கப் பிறந்தோம் நாம். சுதந்திரம்! அது தான் நமது இதய கீதம்! இது வரை சிந்தியது குருதியல்ல. இனிமேல் கொட்டப்போவது தான் குருதிவீரம் — அதற்குப் புது அகராதி காண விழையுங்கள்' என்று போர் முழக்கமிட்டார் ஹோ! இம்முழக்கம் சந்து, பொந்தெல்லாம் சென்று முழங்கிற்று.

இன்று! ஹோவின் தலைமையில் வீர வியட்நாமியர் சென்ற எட்டாண்டு காலமாக போர் வெறியருடன், இரத்தம் சிந்திக் கொண்டிருப்பது நிறுத்தம்பட்டிருக்கிறது. உலகமே அதைக் கண்டு, வியட்நாமியரின் வீரச் செயலைக் கண்டு அதிசயிக்கிறது; அற்புதம், அற்புதம்' என்று கூறி 'வெற்றி வெற்றி பெறுக' என்ற ஆசியையும் தருகிறது.

தீன்-பின்—பூ என்ற கோட்டையின் வீழ்ச்சி, தங்களின் அந்திய காலத்துச் சாவு மணி என்பதை பிரெஞ்சியர் உணர்ந்தபின்தான் வழிக்கு வந்தனர். சமாதானம் விழைந்தனர். வரலாற்றில் பொன்னெழுத்தில் பொறிக்கப் படவேண்டிய அந்தப் போரில் பிரஞ்சியர்மட்டும் பன்னிரண்டாயிரத்திற்கு மேற்பட்ட உயிரை இழந்தனர்.

வியட்நாம் மண் இரண்டரைக் கோடி மக்களைக் கொண்டது. அது தென்னாட்டுத் தலைவனை ஹோவை ஏற்றுக்கொண்டு அவர் வழி சென்று கொண்டிருக்கிறது.

ஹோ ஒரு தீவிர அரசியல்வாதி; சமுதாயவாதியும் கூட; நல்ல ஆராய்ச்சித் திறம் கொண்டவர். ஒரு காரியத்தை நாடி அதைச் செய்யுமுன் அதன் முன் பின் விளையும் லாப நட்டங்களை நன்கு உணர்ந்து செயலாற்றும் திறமை கொண்டவர்.

ஒவ்வொரு சாதாரண மனிதனும் வியட்நாமைத் தாங்கிக்கொண்டிருக்கும் தூண் என்று கருதுகிறார். ஒவ்வொருவருடனும் பேசுகிறார். சேர்ந்து வாழ்கிறார். குதிரைமேல் ஏறிக்கொண்டு குடி நலம் பேணுகிறார். 'குடி நலம் என் நலம்' என்று கருதுவதால் ஹோவை'எங்கள் நாட்டுக்காந்தி' என்று புகழ்பாடி ஏத்துகின்றனர் வியட்நாமியர். 1946—ஆம்

ஆண்டு குடியரசுப் பூத்த வேளை யில் இவரிடம் இருந்தது ஒரே ஒரு கோட்டுதான் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்! தொழிலாளர், குடியானவர்களுடன் அன்பு ததும்பப் பேசுவர். அவர்களுடனே தூங்குவார். எந்த நேரமும் அவர் எண்ணத்தில் தொழிலாளரும் குடியானவரும் வந்து வந்து போவார். நண்பர்கள் ஏதாவது வந்து கேட்டால் 'நான் எங்கு தூங்கினால் என்ன, எங்கிருந்தால் என்ன, இந்நாட்டு மன்னர்கள்' என்பார் சிரிப்பு தவழ. யாரும் அவரை எளிதில் போய் பார்க்கலாம். பல மணிநேரம் பல நாள் காத்திருந்து இடுப்பொடிய வேண்டியதில்லை.

ஒரு முறை ஓர் பிரெஞ்சு இதழின் பிரெஞ்சு பொறுப்பாளர் ஒருவர் ஹோவைக்கண்டு பேட்டி காணவேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது. அவரைப் பார்த்து உங்களின் பிறந்த நாட்டுப் பிறப்புரிமையில் எவ்வளவு சொந்தம் கொண்டிருக்கிறீர்களோ, அதையேதான் என் மக்களும் விரும்புகிறார்கள் என்றார் ஹோ. அந்தப் பிரஞ்சியருக்கு ஒன்றும் பேச முடியாமற் போய்விட்டது.

வீர வியட்நாமியர் இன்று வெற்றி நடையுடன் நின்று கொண்டிருக்கின்றனர். அணி வகுத்துச்செல்லும் ஹோவுக்குப் பின்னால் கத்தோலிக்கர்கள் உண்டு! மக்கள் குடியரசுவாதிகள் உண்டு! அபேதவாதிகள் (Socialists) உண்டு! குடியானவர் தொழிலாளிகள் உண்டு! பொது உடைமைத் தோழர்களும் உண்டு! இன்னும் எல்லோரும் ஒன்று நின்று ஒரே விடுதலை இயக்கமாகி ஒன்றாகிவிட்டனர்; ஒன்றாகி நிற்கின்றனர். கட்சி வேறுபாடு இல்லாமல் எல்லா இயக்கத்தினராலும் போற்றி வாழ்த்தப்படுகிறார் இன்றைய வியட்நாம் தலைவர் ஹோ!

ஹோ-அவன் ஒரு நாடோடி, அனாதை, ஊர் சுற்றியவன், எச்சில் தட்டைக் கழுவியவன், மக்களை ஏமாற்றுகிறவன் என்று சில ஆண்டுகளுக்கு முன் பிரச்சாரம் செய்த பிரஞ்சியர்களும் பிரட்டானியரும் அமெரிக்கரும் இன்று ஹோவைப்பற்றிப் பேசப் பயப்படுகின்றனர். பணபலம் குறைந்த பிரிட்டன் பதுமை வேடம் போடுகிறது!

எந்த நாடோடியைக் கண்டு அமெரிக்கரும் பிரஞ்சியரும் வசை புராணம் படித்தார்களோ அதே நாடோடி இன்றைய வியட்நாம் மண்ணின் இரண்டரைக் கோடி மக்களின் தலைவன் என்பதைக் கண்டு உலகம் வியக்கிறது. அதிசயிக்கிறது!

—"திராவிடன்"

E. S. L. C. Public Examination

FURNISHING OF MARKS TO CANDIDATES.

It is hereby notified that the Government have ordered that any candidate, whether he/she passed or failed in the E.S.L.C. Examination and who requires a certified copy of marks obtained by him/her at any one examination may be given a certified copy of marks on payment of a fee of Rs. 2 (*Rupees two only*) and that, in case where the head of a recognized Higher Elementary School wants to know the subjects in which the candidates presented from the school may have failed in the E.S.L.C. Examination, the head of the school may be furnished with a list showing the names of the failed candidates and the subjects in which they have failed on payment of a fee of annas four only per candidate. The certified copy of marks will contain only the mark obtained by the candidate and not all the particulars contained in a regular Elementary School Leaving Certificate and the list of failed candidates furnished to the heads of Higher Elementary Schools will not show the marks obtained by the candidates in each subject but will show only the subjects in which each candidate has failed. Applications for certified copies of marks and lists of failed candidates for any particular year, which should contain necessary particulars for their issue, should be made to the undersigned only after 5th June every year, accompanied by treasury receipts for the fees prescribed. The fees should be remitted into a Government Treasury to the credit of MADRAS STATE under the head "XXXVI—(a) Miscellaneous Departments—Government Examinations by the Commissioner—Fee for certified copy of marks/list of failed candidates—E.S.L.C. Public Examination, 195...".

Office of the Commr. for Govt. Examinations,
Madras, 8th April 1955.

அரசாங்கப் பரீட்சைகள்

இ. எஸ். எல். சி. பொதுத்தேர்வு

பரீட்சை எழுதிய மாணுக்கர்களுக்கு 'மார்க்கு' அளித்தல்

இ. எஸ். எல். சி. தேர்வில் பரீட்சை எழுதிய மாணவர்கள் தேறியவர்களானுலும், தோல்வியுற்றவர்களானுலும், தங்கள் பரீட்சை 'மார்க்கு' சம்பந்தமான அத்தாட்சித் தாள் தேவையானுல் இரண்டு ரூபாய் முன்னதாகச் செலுத்த வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட உயர்தர ஆரம்பப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் தங்கள் மூலம் மேற்படி பரீட்சைக்குச் சென்ற மாணவர்களின் மார்க்குகளை அறிய விரும்பினுலும், அம்மாணவர்கள் எந்தப் பாடத்தில் தவறி விட்டார்கள் என்பதை அறிய விரும்பினுலும், மேற்படி ஆசிரியன்மார் அரசாங்கத்துக்கு ஒரு மாணவனுக்கு நான்கணுவீதம் கட்டணம் செலுத்த வேண்டும். இந்த அத்தாட்சித் தாளில் சாதாரணமாக ஆரம்பப் பள்ளி இறுதித்தேர்வு நற்சாட்சிப்பத்திரத்தில் காணப்படும் எல்லா விவகாரங்களும் இருக்காது. ஆனுல் பரீட்சை எழுதிய மாணவரின் 'மார்க்கு'கள் மட்டும் காணப்படும். ஆரம்பப் பள்ளிகளின் தலைவர்களுக்கு அனுப்பப்படும் பட்டியலிலும் ஒவ்வொரு பாடத்திலும் மாணவர் பெற்ற 'மார்க்குகள்' எவ்வளவு என்பது குறிப்பிடப் பெற்றிருக்காது. மாருக, எந்தப் பாடத்தில் சம்பந்தப்பட்ட மாணவர் தேறவில்லை என்பது மட்டும் குறிக்கப்பட்டிருக்கும். எந்த ஆண்டின் தேர்வு குறித்து அத்தாட்சித் தாள் வேண்டும் என்பவர்களும், தேருத மாணவர்களின் மார்க்கு விவரம் வேண்டும் என்பவர்களும் அந்தந்த ஆண்டையும் தேவைப்படுகின்ற விவரங்களையும் ஒவ்வொரு ஆண்டின் ஜூன் 5-ஆந் தேதிக்குப் பிறகுதான் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பம் செய்யவேண்டும். அத்துடன் தொகையை அரசாங்க கஜானுவில் கட்டிவிட்டு அதன் ரசீதை இணைக்க வேண்டும். கட்டணங்களை அரசாங்க கஜானு ஏதாவதொன்றில் சென்னை இராச்சிய வரவு கணக்கில் 36-வது தலைப்பின் கீழ்க் குறிப்பிட்டுக் கட்டவேண்டும்.

The fees should be remitted under the head 'XXXVI—(a) Miscellaneous Departments—Government Examinations by the Commissioner—Fee for Certified Copy of marks/list of failed Candidates—E. S. L. C. Public Examination 195..." Office of the Commissioner for Govt. Examinations.

Madras, 8th April 1955.

பயன் தரும் பழம்

அன்றாடம் நம் கண்ணெதிரில் படும் பொருள்கள் சிலவற்றின் அருமைபெருமைகளைத்தெரிந்து கொள்ளாமலேயே நாம் அவற்றோடுபழகிவருகிறோம். அப்படிப் பட்ட பொருள்களிலே எலுமிச்சம்பழம் ஒன்றாகும்.

எலுமிச்சம்பழத்தை இனிய சாறுபண்ணவும், ஊறுகாய் போடவும், சோறு பிசையவும் ஆன சிலபலவகைகளில் மட்டுமே நம்மில் பெரும்பாலோர் பயன் படுத்தி வருகிறோம். ஆனால் அதில் அடங்கிக்கிடக்கும் நூற்றுக் கணக்கான நன்மைகளை அறிந்துகொண்டு, அதனை முழுக்கப் பயன்படுத்தத் தெரியாமலேயே நாம் வாழ்ந்து வருகிறோம்.

எலுமிச்சம்பழத்தின் அருமை பெருமைகள் இப்பொழுதுதான் சிறிதுசிறிதாக வெளிப்பட்டு வருகின்றன. சாறுபிழிய, ஊறுகாய் போட, பச்சடி செய்ய, சோறுபிசைய மட்டுமல்லாமல் மிகவாகவெளிப்படும் குருதியைத் (இரத்தத்தை) தடுக்க, பெட்ரோல் ஊற்றும் காகிதப்பைகளின் உட்புறத்தை வழவழப்பாகவும் பாதுகாப்பாகவும் ஆக்க, மை (இங்க்) கறைகளைப் போக்க, மீனின் நாற்றத்தைக் குறைக்க, வாழைப்பழம் ஆப்பிள் போன்ற பழங்களின் தோல்கள் கருத்துப் போகாமல் பாதுகாக்க, இரும்பை வலுவாக்க, குருதிக்கு ஏற்ற மாற்றுப் பொருளாக உடலுக்குள் செலுத்த இன்னபிற நூற்றுக்கணக்கான வழிகளில் எலுமிச்சம் பழம் பெரிதும்பயன் பட்டுவருகின்றது.

எதிர்காலத்தில் ஏற்படும் பெரும்பாலான நன்மைகள் எலுமிச்சம் பழத் தோலிலிருந்தே கண்டுபிடிக்கப்படும். எலுச்சம் பழத்தோலைப் பற்றி நீண்டநாட்கள் ஆராய்ச்சி நடத்திய அமெரிக்க நிபுணர்கள் தோலிலிருந்து பலவித நன்மைகள் ஏற்படக்கூடும் என்பதை வெளியிட்டிருக்கிறார்கள். அணுக்குண்டு நீர்க்காற்றுக் குண்டுபோன்றவைகள் வெடித்து, அவற்றிலிருந்து எழும்பும் வெப்ப அலைகள் மனிதனைத் தாக்குமேயானால், எலுமிச்சம்பழத் தோலிலிருந்து எடுக்கப்படும் ஒருவகைச் சாரத்தின் மூலம், வெப்ப அலைகளால் ஏற்படும் தொல்லைகளைப் போக்கிக்கொள்ளமுடியும் என்று அவர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். எலிகளிடத்தில் இதுபற்றிய ஆராய்ச்சித் தேர்வு நடத்தி அவர்கள்வெற்றியடைந்ததாகச் சொல்லப்படுகிறது. எலுமிச்சத் தோலிலிருந்து எடுக்கப்பட்ட சாரத்தை எலிகளுக்குஉணவாகக்கொடுத்து சிறிதுகாலம் பழக்கப்படுத்தப் பட்ட பிறகு, வெப்ப அலைகளை

அவற்றின் உடலில் செலுத்திப் பார்க்கும்போது, அவை அந்த அலைகளைத் தாங்கிக்கொள்ளும் திறத்தனவாகக் காணப்பட்டன வாம்.

பழக்கறையோ அல்லது இரும்புக்கறையோ வெள்ளைத் துணிகளில் பட்டுவிட்டால், அவற்றைப் போக்க, உப்புக்கலந்த எலுமிச்சம் பழச் சாற்றைக் கறைப்பட்ட இடங்களில் தடவினால் கறை போய்விடும் என்பதை எல்லோரும் பொதுவாக அறியவே செய்வார்கள். எலுமிச்சப்பழம் வெள்ளை உடுப்புகளை வெளுப்பதற்கும் பயன்படுகிறது. அதன் சாற்றைத் தண்ணீரோடு கலந்து, அதில் துணிகளைக் கசக்கிப்பிழிந்தால் அழுக்கு அகன்றுவிடும். அலுமினியக் கலன்களை (பாத்திரங்களை) ஒளியுடையனவாக ஆக்க எலுமிச்சச் சாற்றைப் பயன்படுத்துகின்றனர். எலுமிச்சைச் சாறு மீன்களைத் தீ நாற்றம் வீசாமல் பாதுகாத்துக்கொள்ளும் சிறந்த ஏதுவாகும் என்று அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டது. மீன் வணிகர்கள் மீன்களைப் பதப்படுத்துவதற்கு முன்போ அல்லது பின்போ எலுமிச்சைச்சாற்றைத் தெளித்து விடுவதன் மூலம் தீ நாற்றத்தைப் போக்கிவிடுகிறார்கள். தீ நாற்றத்தைப் போக்கும் அந்தச்சாரம் பல்வேறு வகையான மருந்துகளின் உற்பத்திக்குப் பயன்படக் கூடும் என்று அறிவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

எலுமிச்சம்பழம் இந்தியா, பர்மா போன்ற இடைகிழக்காசிய நாடுகளில் தான் முதன் முதல் தோன்றியிருக்கக்கூடும் என்று ஊகிக்கிறார்கள். இந்தியாவில் சில இடங்களில், புதைபொருள் ஆராய்ச்சிக்கழகத்தினர் நிலத்தை அகழ்ந்து காணும்போது, சிற்சில வேளைகளில் எலுமிச்ச விதைகள் அகப்படுகின்றன. அவற்றின் காலத்தைக் கணக்கிடும் போது அவை கி.மு. 4000க்கும் முந்தியனவாகத் தென்படுகின்றன. கிழக்கு ஐரோப்பா நாடுகளில் 1600ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எலுமிச்சம்பழம் இருந்துவந்திருக்கிறது. அது இந்தியாவிலிருந்து அரேபிய, பாரசீக, கிரேக்க, உரோம வணிகர்களால் கொண்டு செல்லப்பட்டதாகும். எலுமிச்சம் பழம் சுமார் 400 ஆண்டுக் காலத்திற்கு முன்புதான் இங்கிலாந்திற்குப் போய்ச் சேர்ந்தது. அதனை முதன் முதலில் அமெரிக்காவிற்குக் கொண்டு போய்ச் சேர்த்தவர் கிரிச்டோபர் கொலம்பஸ் ஆவார்.

எலுமிச்சத் தோல் மிக்க ஆற்றலுள்ள எண்ணெயைக் கொண்டிருக்கிறது. ஐம்பது அல்லது அறுபது காலன் தண்ணீரில் அதன் ஒருசில துளிகளை விட்டாலும் மிக்க மணம் வீசுவதாக இருக்கும். புலவகை நறுமணத் தைலங்கள் செய்வதற்கு எலுமிச்ச எண்ணெய்யின் சாரம் பயன்படுத்தப்படுகிறது.

எலுமிச்சம்பழம், அதன் சாறு அதன் தோல் ஆகியவற்றைப்

பன்னெடுங் காலமாகக் காய்ச்சல், தொண்டைப் புண், வயிற்றுவலி, வாதம், எரிச்சல் போன்ற நோய்களைப் போக்குவதற்கான மருந்துகளாக வீட்டு மருத்துவமுறையில் கையாளப்பட்டு வந்திருப்பதைப்பார்த்தும், என் அண்மைக் காலம் வரையில் டாக்டர்கள் அவற்றைப் பயன்படுத்த முனையாமலே வாழ்ந்துவந்தனர் என்பது வியப்புக்குரியதாகவே இருக்கிறது. எலுமிச்சம்பழத்தின் அருமை பெருமைகளை இப்பொழுதுதான் மருத்துவத்துறை அறிஞர்கள் அறிந்து அதனைப் பயன்படுத்திக்கொள்ள முனைந்துள்ளனர்.

எலுமிச்சம்பழம் பற்றிய இன்றைய அறிவியல் ஆராய்ச்சி சென்ற உலகப்பெரும்போரிலிருந்துதான் துவக்கப்பெற்றது என்னலாம். குருதிக் காயத்தை உடனே ஆறவைப்பதற்கும், குருதியை உடனே உறையவைப்பதற்கும் எலுமிச்சம்பழத்தினுள்ள சதைப்பற்றைச் செர்மானிய போர்வீரர்கள் சென்ற உலகப் பெரும்போரின்போது கையாண்டார்களாம். அந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்க டாக்டர்கள் ஆராய்ச்சி நடத்தியபோது, எலுமிச்சம்பழச் சதைப்பற்றிலிருந்து எடுக்கப்படும் ஒருவகை நீர்ப்பசையைக் குருதிக்கு ஈடாக உடலுக்குள் செலுத்தலாம் என்பதைக் கண்டறிந்தார்கள். எலுமிச்சம் பழத்திலிருந்து தயாரிக்கப்படும் சில மருந்துகள் சீதபேதி, வயிற்றுக்கடுப்பு போன்ற நோய்களைத் தடுப்பனவாக இருந்து வருகின்றன.

எலுமிச்சம் பழத்திலிருந்து எடுக்கப்படும் நைட்ரிக் தைலம் வேறு இன்னீர் வகைகளும், உணவு வகைகளும் தயாரிக்க உதவியாக இருக்கிறது. எலுமிச்சையிலிருந்து எடுக்கப்படும் ஒரு வகை மெழுகு, எண்ணெய்த் தொட்டிகளில் தண்ணீர் புகாதவாறு தடுப்பதற்கு உதவிசெய்கிறது. எலுமிச்சையின் ஒரு வகைச் சாரம் எஃகைக் கடினமாக்குவதற்குக் கையாளப்படுகிறது. இப்படியாகப் பலப்பல.

நமக்கு எளிதாக, விலை குறைவாக, ஏராளமாகக் கிடைக்கக்கூடிய எலுமிச்சம்பழம் நூற்றுக்கணக்கான நன்மைகளை உள்ளடக்கிக் கொண்டிருப்பது வியப்புக்குரியதுதானே!

—"மன்றம்"

மணி மொழி

தருணத்தைத் தமக்கு ஏற்றதாகச் செய்து கொள்ளுதலும், அப்போதைக்கப்போது செய்யக்கூடியதை ஒழுங்கு படச் செய்தலும் நல்வாழ்வு வாழத்தெரிந்து கொண்டவர்களது செய்கைகளாகும்.

காலமும் கருத்தும்

தேவை! தேவை!
அமர்சிங்குகள் தேவை!

"இந்த அணைக்கட்டைக் கட்டி முடிக்க 20 லட்சம் செலவாகும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இறுதியில் செலவு 40 லட்சமாகிவிட்டது."

"இந்த மின்சார விசை உற்பத்தி நிலையத்திற்காக மொத்தம் 60 லட்சம் ரூபாய் செலவேற்படும் என்று திட்டம் தீட்டும் குழு கணக்குப் போட்டுக் கொடுத்தது. கடைசியில் பார்த்தாலோ திட்டம் 100 லட்சம் ரூபாயை விழுங்கிவிட்டது."

"இந்த இரும்பு உருக்குத் தொழிற்சாலையை நிறுவ ஒரு கோடி ரூபாய் போதுமென முதலில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்போதோ அது போதாது—ஒன்றரைக் கோடி ரூபாய் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது."

இந்த வகையாகத்தான் செய்திகள் அடுக்கடுக்காக வந்துகொண்டிருந்தன இதுவரையில்.

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட திட்டங்களிலும் சரி, ஏனைய திட்டங்களிலும் சரி, செலவு, எதிர்பார்த்ததைவிடக் கூடுதலாகவே இருந்துவந்திருக்கிறது.

எதிர்பார்த்ததைவிட செலவு அதிகமாகிவிட்டது என்கிற வாசகத்தைக் கேட்டுக் கேட்டு, இனி எந்தத் திட்டமாயினும் சரி, நிலைமை அப்படித்தான் இருக்கும்போலும் என்று நாம் முடிவு கட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

ஆனால் இதோ ஒரு செய்தி—உள்ளத்தில் தேன் பாய்ச்சும் உன்னதமான செய்தி!

மத்ய பாரத் மாநிலத்தில், 80,000 ரூபாய்களை விழுங்கும் என்று மதிப்பிடப்பட்டிருந்த அரசாங்க வேலை ஒன்று எட்டே எட்டு ஆயிரங்களில் முடிந்துவிட்டிருக்கிறது.

கடந்த 1953–மே திங்கள் 16–ம் நாளன்று ஆபத்தான விபத்தொன்று ஏற்பட்டு விலையுயர்ந்த மின்சார இயந்திரமொன்று பாழாகிவிட்டதாம்—மத்திய பாரத் மாநிலத்தில்.

பழுதுப்பட்ட இயந்திரத்தைச் சீர்செய்து சரிப்படுத்த எவ்வளவு செலவாகும் என்று விசாரித்தபோது "ரூபா 80,000" என்று திட்டவட்டமாகத் தெரிவித்ததாம் பம்பாயிலுள்ள பிரபல மின்சாரக் கருவிக் கம்பெனி ஒன்று. சரி என்று தலையை அசைத்துவிட்டு அதற்கான

தொகையையும் ஒதுக்க முன் வந்ததாம் மத்ய பாரத் அரசு.

ஆனால் நில்லுங்கள் என்றோர் குரல் எழுந்தது. எழுப்பியவர் பெயர் அமர்சிங். இந்தச் சீரமைப்புக்கா 80,000 செலவு? வேண்டாம் என்றார் அந்த மின்சார அதிகாரி. மிகமிகக் குறைந்த செலவிலே அந்தப் பணியினை முடித்திட இயலும் என்றும் உறுதியுரை பகர்ந்தார். உறுதியுரை பகர்ந்ததோடு நிற்கவில்லை. பாழ்பட்ட இயந்திரத்தைத் தானே முன் நின்று புதுப்பிக்கவும் முயற்சித்தாராம். மாதக் கணக்கில் வேலை செய்து, இரவு பகலாகப் பாடுபட்டு, கடந்த மார்ச் மாதத்தில், பழுதடைந்த இயந்திரத்தைப் புத்தம் புதியதாக மாற்றி அமைத்து விட்டாராம்.

முன்னர் இருந்ததைவிட அதிகமான சக்தியோடு வேலை செய்கிறதாம் அந்த இயந்திரம்—இப்போது. ஆனால் அதற்காக ஆகியிருக்கும் செலவோ எட்டே ஆயிரம் தானாம்!

80,000-ஆகும் என்று எதிர்பார்க்கப்பட்டது— ஆனால் 8000-ல் முடிந்துவிட்டது. முடித்துவைத்திருக்கிறார் அமர்சிங் என்னும் மின்சார அதிகாரி.

அதிகாரிகள் என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்! இப்படிப்பட்ட அதிகாரிகள் இருந்தால் அல்லவா ஒரு நாடு விரைவில் முன்னேறமுடியும்!

செலவை, முதலில் எதிர்பார்த்ததைவிட அதிகப் படுத்திக் காட்டும் "தலைசிறந்த" அதிகாரிகள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள் நாட்டிலே! இருந்தென்ன நன்மை? நாடு, அவர்களால் ஓடாக இளைக்கிறது. பணம் பாழாகிறது வேகவேகமாக! ஆனால் அமர்சிங், தன்னுடைய அருந்திறமையால், 80,000 செலவாக வேண்டிய ஒரு திட்டத்தை 8000-ல் முடித்து, பொது மக்களின் பணத்தில் 72,000-ஐ மிச்சப்படுத்தியிருக்கிறார்.

தேவை—தேவை—அமர்சிங்குகள் தேவை இந்த நாட்டிற்கு. ஏராளமாகத் தேவை. அமர்சிங்குகள் பலர் புறப்பட்டால்தான் மக்களின் பணம் மிச்சமாகும்—மிகக் குறைந்த செலவில் மிக அதிக நன்மை என்கிற நல்ல ஏற்பாடும் நாட்டில் உருவாகும்.

அருமையான சட்டம்— அவசியமானதிட்டம்!

"என் பெண்ணுக்குத் திருமணம் செய்துமுடித்தேன். அந்த நிகழ்ச்சியோடு என் செல்வமெல்லாம் கரைந்துவிட்டது."

"என்னுடைய கல்யாணம் ஏக தடபுடல். ஆயிரம் பேருக்கு விருந்து. பத்தாயிரம் செலவு. ஆனால் இப்போதோ என் பெயரில் 20,000 கடன்."

"அப்போது நான் சிறிதும் சிந்திக்கவில்லை. என் பிள்ளைக்குத் திருமணம் என்றவுடனே கண்ணை மூடிக்கொண்டு செல

விடத் தொடங்கினேன். 50,000 அழிந்துவிட்டது. அந்தப் பணத்தை அப்படியே 'பாங்கி' யில் போட்டுவைத்திருந்தாலாவது அது இப்போது என் பிள்ளைக்கு எவ்வளவோ துணையாக இருக்கும்!''

இப்படியெல்லாம் பலர் பேசுவதை அடிக்கடி கேள்விப்படுகிறோம் நாம்.

உண்மையிலேயே இந்த நாட்டில் திருமணம் என்றவுடனே பலர் கண்ணை மூடிக்கொண்டு காசை வாரி இறைக்கின்றனர்.

அடுத்த வீட்டுக்காரன் தன் பிள்ளைக்கு 6000 ரூபாயில் திருமணம் செய்துவைத்தானே— அப்படியானால் நான் என் பிள்ளையின் திருமணத்திற்கு 10,000 ரூபாயாவது செலவழிக்க வேண்டாமா? என்கிற பொறுமைப் பேய்க்கு ஆளாகின்றனர் சிலர்.

இந்த ஊரிலேயே பெரிய மனிதன் நான். என்னுடைய குடும்பத்தில் திருமணம் என்றால் உலகமே திரண்டு வரவேண்டாமா? என் பெருமை அந்தஸ்து கௌரவம் அத்தனையும் இப்போதுதானே நாட்டிற்குத் தெரிந்தாகவேண்டும்? — இப்படிப்பட்ட போலிப் பெருமை என்னும் கடிவாளத்தில் சிக்கிய குதிரைகளாகி விடுகின்றனர் சிலர்.

பக்கத்து ஊர் பழைய செட்டியார், தாழ்ந்த சாதி. அவர் செய்துவிட்டார் அற்புதமான திருமணம். நானோ உயர்ந்த சாதி. ஓஹோ என்று வாழ்கிற குடும்பம். நான் செய்யவேண்டாமா அதைவிட உயர்வாக?— ஜாதி உணர்ச்சி என்னும் இப் பொல்லாத சிறைக்குள் சிக்கித் தவித்துச் சிந்தனையை இழக்கின்றனர் வேறு பலர்.

வீண் கவுரவம், போலிப் பெருமை, பொருளற்ற படாடோபம் ஆகிய உணர்ச்சிகளால் உந்தப்பட்டு, தங்கள் தேவைக்கும் சக்திக்கும் மீறிய அளவில் பணத்தை ஒரு திருமணத்திற்கு வாரி இறைத்துவிட்டு, பிறகு காலமெல்லாம் கைகளைப் பிசைந்துகொண்டிருக்கும் குடும்பங்கள் இந்த நாட்டில் பல லட்சம்.

பெருஞ் செல்வர்கள் மட்டுமல்ல, பரிதாபத்திற்குரிய ஏழைகளும் இந்தப் பாழான தொத்து நோய்க்கு ஆளாகி வறுமைப் பள்ளத்தில் வீழ்ந்து வதைகின்றனர். இந்த மடமை என்னும் கொடுமை தொலைந்தாகவேண்டும் என்பதை வற்புறுத்தி எத்தனையோ அறிஞர்களும் கலைஞர்களும் தலைவர்களும் சீர்திருத்தத் தொண்டர்களும் பேசியும் எழுதியும் பார்த்தாகிவிட்டது. என்றாலும் சமுதாயம் திருந்தக்காணோம். திருமணம் என்கிற இன்ப விழாவைப் பணத்தை இழக்கும் துயர விழாவாக மாற்றிடும் மடமை அழியக் காணோம். எனவேதான் போலும் பாகிஸ்தான் நாட்டின் மேற்கு பஞ்சாப்

அரசாங்கம் சட்டத்தின் துணை கொண்டாவது இந்த வீண் கௌரவத்தின் கொட்டத்தை அடக்குவோம் என்று முன் வந்துவிட்டது. ஒவ்வொரு திருமணத்தின்போதும் இந்த அளவு தான் செலவு செய்யலாம் என்கிற வரையறையை வகுக்கும் ஒரு மசோதாவை மேற்கு பஞ்சாப் அரசு கொண்டுவர இருக்கிறது. ஒவ்வொரு திருமணத்தின்போதும் ரூ. 1000 மட்டுமே செலவழிக்கலாம் என்றும், திருமணத்தின்போது சுமார் 50 பேர்களுக்குமட்டுமே விருந்தளிக்கலாம் என்றும், திருமண விழா இரண்டு நாட்களுக்குமேல் நீடிக்கக்கூடாது என்றும் அந்த மசோதா தெரிவிக்கிறது. இந்த நிபந்தனைகளை மீறுவோர் ஓர் ஆண்டு கடுங்காவல் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படலாம் என்றும் அந்த மசோதா அறிவிக்கிறது.

அந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அபராதமும் தண்டனையும் அதே அளவில்தான் இருக்கவேண்டுமா அல்லது வேறு அளவிலா என்பதில் கருத்து வேறுபாடு இருக்கலாம்.

திருமண விழாவில் 50 பேர்களுக்கு மட்டும்தானா அல்லது அதிகம் பேருக்கு விருந்தளிக்க அனுமதி தரலாமா என்பதிலும் கருத்து வேறுபாடு இருக்கலாம்.

ஆனால் திருமணச் செலவுக்கு ஓர் அதிகபட்ச எல்லையை நிர்ணயித்து, அதனை மிகக் கடுமையான முறையில் நடைமுறைக்கும் கொண்டு வந்தால், நன்மை பல உண்டு என்பதில் மட்டும் கருத்து வேற்றுமை இருக்க வழி இல்லை.

பாகிஸ்தானில் மட்டுமல்ல, இந்தியாவிலும், வடநாட்டில் மட்டுமல்ல, தென்னாட்டிலும் இப்படிப்பட்ட ஒரு சட்டம் நிச்சயம் வந்தாக வேண்டும். வந்தால் தான் குடும்பம் எனும் கப்பல் மோதி உடைகிற பாறையாக இல்லாமல் இன்பத்தை வீசும் இளந்தென்றலாக இருக்க முடியும் திருமணம். அருமையான சட்டம் இது. அவசியமான திட்டம்.

அங்கே, அது !

ஆனால் இங்கே ?

இன்னும் இரண்டாண்டுக் காலத்திற்குள், செயற்கைச் சந்திரன் ஒன்றை உருவாக்கி, வான வீதிக்கு அதை அனுப்பி, நம் பூமியைச் சுற்றி வரும்படிச் செய்யமுடியுமாம் — அமெரிக்க நாட்டு விஞ்ஞானிகள் அறிவிக்கிறார்கள்.

மிகப் பிரமாதமான செலவொன்றும் ஏற்பட்டுவிடாதாம் இதற்கு. நெடுந்தொலைவு பறக்கும் வெடி விமானத்தைக் கட்டுவதற்கு எந்த அளவு செலவு ஏற்படுமோ அதே அளவு பணத்தை இதற்குச் செலவிட்டால் போதுமாம்.

பொறி இயற் கலை அறிவிலே யும் இப்போது இருப்பதைவிட அதிகப்படியான வளர்ச்சியை நாம் பெறவேண்டிய தேவை கிடையாதாம். இதுவரை ஏற்பட்டுள்ள எஞ்சினியரிங் அறிவைக் கொண்டே இந்த அரும் பணியை முடித்துவிட இயலுமாம்.

12 அங்குல வட்டமுள்ள இந்த அமைப்பு, வான வெளியில் இயங்குவதன் மூலம், காலநிலையையும் ஒலி பரப்பையும் பாதிக்கின்ற "காஸ்மிக்" ஒளிச் சுடர்களைப் பற்றிய தகவல்களையெல்லாம் இந்தச் செயற்கை நிலாவில் அமைக்கப்பட்டிருக்கும் கருவிகள் தாமாகவே பூமிக்குத் தெரியப்படுத்துமாம் – இவ்வாறு கிடைக்கும் தகவல்கள், இராணுவத்திற்கும் பொருளாதார விஞ்ஞான வளர்ச்சிக்கும் மிகவும் பயன்படுமாம்.

இந்தச் செயற்கை நிலா, பூமிக்குமேல் 190 மைல் உயரத்தில் பூமியைச் சுற்றிவரும் என்றும், அது இருக்கவேண்டிய இடத்திற்கு 3 ராக்கெட்டுகள் அதைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் என்றும், இச் செயல்கள் யாவும் மனிதரின் துணையின்றி தாமாகவே நடைபெறக் கூடியன என்றும் அவ் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

வான வீதியிலே ஒரு செயற்கை நிலாவைப் பவனி வரும்படி செய்யுமளவிற்கு மேல்நாட்டு மக்கள், அறிவிலே முதிர்ந்து, பண்பாட்டிலே வளர்ந்து, முன்னேற்றப் பாதையில் முழு வேகத்துடன் செல்கின்றனர்.

ஆனால் நாமோ? இங்கோ? என்ன நிலையில் இருக்கிறோம்? எந்தப் பாதையில் செல்கிறோம்? இதோ ஓர் எடுத்துக்காட்டு.

வடநாட்டில் ஆமதாபாத் நகருக்கு அருகில் காகாரெச்சி என்றோர் கிராமம். அங்கே இரண்டு திங்களுக்கு முன்னர் சில தொற்று நோய்கள் பரவினவாம்.

பரவினால் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்வார்கள் அறிவுத் தெளிவும் விஞ்ஞான உணர்ச்சியும் படைத்த இக் கால மக்கள்?

டாக்டர்களை வரவழைத்து, மருந்துகளைத் தருவித்து, நோய்த் தடுப்பு ஊசிகள் குத்திக் கொண்டு, தொற்று நோய்களின் பரவுதலைத் தடுப்பதற்கான சுகாதார ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நோய்வாய்ப் பட்டவர்களைத் தனித்திருக்கச் செய்வது, பிறர் அவர்களை அண்டாதபடி தடுப்பது, நோயைப் பரப்பும் கருவிகளாக உள்ள கொசுக்கள், ஈக்கள் முதலியவற்றை அழிப்பது, குப்பை கூளங்கள் முதலிய அசுத்தங்களை அகற்றுவது, நோயை அகற்றுவதற்கான முறைகளை அனைவருக்கும் அறிவிப்பது முதலிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இதுதானே முறை? ஆனால் இந்த நேர்மையான முறையை மேற்கொண்டார்களா காகா ரெச்சி கிராமத்தவர்கள்?

இல்லவே இல்லை. அழகான வேலைப்பாடுகள் அமைந்த அருமையான தேர் ஒன்றைக் கட்டினார்கள்.

'சிதாலா தேவி' என்னும் தேவதை ஒன்றின் சிலையைத் தேடிப் பிடித்தார்கள்.

சிலையைத் தூக்கித் தேரில் அமர்த்திவிட்டு அண்மையில் ஓடிக்கொண்டிருந்த நாய் ஒன்றை இழுத்து வந்தார்கள்.

தேரில் கட்டினார்கள் நாயை. கண்பரே—நாயாரே—இழுமய்யா தேரை என்றார்கள்.

தேர் ஓடிற்று—வேக வேகமாக—நாலா வீதிகளிலும்.

தேர் எப்படி ஓடிற்றோ அதே போல ஊரைப் பிடித்த நோய்களும் இனி ஓடியே போய்விடும் என்று உரக்கக் கூறி உற்சாகச் சிந்து பாடினார்களாம் காகா ரெச்சி கிராமத்தவர்.

எப்படியிருக்கிறது வேடிக்கை! தேவதையைத் தேரில் வைத்து அதனை ஒரு நாயைக்கொண்டு இழுத்துவிட்டால் போதும் — நோய்கள் பறந்துவிடும் என்று நம்புகிறார்கள் நம் மக்கள். இந்தக் காலத்தில்—இருபதாம் நூற்றாண்டில்!

வான வெளியிலே செயற்கை நிலாவை உலவ விட்டு, அதன் மூலம் வானத்தின் நிலை பற்றிய தகவல்களைச் சேகரித்து, அத்தகவல்களைக் கொண்டு மேலும் பல நன்மைகளை மனித சமுதாயத்திற்குச் செய்ய முயற்சிகள் நடக்கின்றன மேல் நாட்டில்.

நாயைக் கொண்டு ஒரு தேரை இழுத்துவிட்டால் போதும். நோய்கள் யாவும் பறந்துவிடும் என்று நம்பப் படுகிறது இந் நாட்டில்.

நிலைமை இப்படியே இருக்குமானால், மேல் நாடு மேலான நாடாகவும், நம் கீழ்நாடு கீழான நாடாகவுமேதான் இருந்தாக வேண்டும் என்பதிலே ஏது ஐயம்?

அந்தோ! மூட நம்பிக்கையே! உனக்கு, இந்தியாவை விட்டு அகலும் ஆசை இல்லவே இல்லையா?

மைசூர் காட்டும் மகத்தான பாதை!

தென்னாட்டில் உள்ள மைசூர் அரசு, கல்வித் துறையிலேயும், தொழில் வளத்திலேயும், ஆட்சி அமைப்பிலேயும் பல முறை இந்தியாவுக்கே வழிகாட்டியிருக்கிறது. இப்போது அது மற்றொரு முக்கியமான துறையிலேயும் இந்தியத் துணைக் கண்டத்திற்கு வழிகாட்ட முன் வந்திருக்கிறது. மைசூர் அரசின் எல்லைக்குள், மாதம் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கும் அதிகாரிகளின் பஞ்சப்படி அலவன்ஸ், சொந்த அலவன்ஸ் முதூ

ஷிய எல்லா அலவன்சுகளையும் ஏப்ரல் முதல் தேதி முதல் நிறுத்திவிட அந்த மாநில அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

இந்த ஏற்பாடு, முற்றிலும் நியாயமானது என்பது நம் கருத்து. மூன்று வேளை உணவிற்கும் வழியின்றித் தவிக்கும் மக்கள் இந்த நாட்டில் ஆயிரமாயிரம். தங்களுடைய அருமைக் குழந்தைகளுக்கு ஆரம்பப் கல்வியை அளிப்பதற்குத் தேவையான சிறுதொகையுமின்றி வாடுபவர்கள் பல லட்சம். தமக்கோ, தம் மனைவியர்க்கோ, தம் பெண்கள் பிள்ளைகட்கோ நோய்கள் வந்தால் அவற்றைத் தடுப்பதற்குப் பணமின்றித் தவிப்பவர்கள் கோடி கோடி. இருக்க இல்லமும், உடுக்க உடையுமின்றி வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து தத்தளிக்கும் நிலையினர் எண்ணற்றோர் இந் நாட்டில். இவர்களெல்லாம் இப்படி வாடும் போது, 1000—2000—5000—10,000 என்று ஊதியம் பெறுபவர்கள், அதற்கு மேலும் ஒரு தொகையை, பஞ்சப்படி என்றும், சொந்த அலவன்ஸ் என்றும், மோட்டார் அலவன்ஸ் என்றும், வீட்டு வாடகை அலவன்ஸ் என்றும் எதற்காகப் பெறவேண்டும்? பெறுவது எப்படி முறையாகும்?

எனவேதான் மைசூர் அரசாங்கம், ஒழியவேண்டும் அந்த அலவன்சுகளென்று முடிவு செய்திருக்கிறது. யார்தானகட்டும், இந்த அரிய முடிவைத் தேவையற்ற ஏற்பாடு என்றோ, தீங்கு பயக்கும் திட்டமென்றோ, எப்படிச் சொல்லிவிட முடியும்?

சிறந்ததோர் ஏற்பாட்டைக் மேற்கொண்டிருக்கிறது மைசூர். மனமாரப்பாராட்டுகிறோம் ஆனால் மைசூர் அந்த அளவோடு நின்றுவிடக்கூடாது. யாருக்கும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் இருக்கக்கூடாது என்கிற திட்டத்தையும் கொண்டுவர வேண்டும்.

மைசூரில் மட்டும் இந்த ஏற்பாடு அமுலுக்கு வந்தால் போதாது. இந்தியா முழுவதிலும் வந்தாகவேண்டும்.

எவருடைய ஊதியமும் மாதம் ஆயிரம் ரூபாய்க்குமேல் இருக்கக்கூடாது. அதுபோலவே எவருடைய ஊதியமும் மாதம் நூறு ரூபாய்க்குக் குறைவாக இருக்கக் கூடாது.

இப்படிப்பட்ட ஒரு சிறந்த ஏற்பாட்டை என்றைய தினம் இந்திய அரசாங்கம் மேற்கொள்கிறதோ, அன்றையதினம்தான், இந்தியாவிலே, புதுவாழ்வு பூக்கும். புதிய இன்பமும் பிறக்கும். சமதர்ம சகாப்தம் இந்த நாட்டில் அரும்பக்கூடிய அந்த நாளும் அதுவாகத்தான் இருக்க முடியும். ஆமாம்—மெய்தான்—ஆனால் அந்த நாள் என்று வரும்? ஏழைகள் அனைவரும் கேட்கின்றனர் இதுபோல! என்ன சொல்

லப் போகிறது இந்திய அரசாங்கம்?

ஒரே ஒரு கோடி—அதற்கு! 72 கோடி—இதற்கு!

ஆதாரக் கல்வி என்பது அர்த்தமற்றதோர் சொல்லடுக்கு என்பதை எத்தனையோ முறை நாம் எடுத்துவிளக்கி யிருக்கிறோம். இல்லாத ஊருக்குப் போகாத பாதையைப் புரியாத மனிதனிடம் தெரியாத மொழியில் கேட்பதைப் போன்றதோர் திட்டம்தான் அது என்பதையும் நாம் எடுத்துக் காட்டியிருக்கிறோம். இந்திய அரசாங்கம் இது போலச் சொல்லவில்லை—சொல்ல முடியாது வெளிப்படையாக—அதற்குப் பற்பல அரசியல் காரணங்கள் உண்டு—ஆனால் தன் உள்ளத்தின் உள்ளே இதே கருத்தைத்தான் அதுவும் கொண்டிருக்கிறது. இந்த உண்மையை முதல் ஐந்தாண்டுத் திட்டம் மிகத் தெளிவாக அறிவிக்கிறது.

இந்தத் திட்டத்தில், ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்க 72 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆதாரப் பள்ளிகளைத் தொடங்கவோ ஒரே ஒரு கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆதாரக் கல்வியின் வெற்றியில், உண்மையில், இந்திய அரசாங்கத்திற்கே நம்பிக்கையில்லை என்பதைத்தானே இந்தப் புள்ளிவிவரம் தெள்ளிதின் விளக்குகிறது?

நம்பிக்கை யிருந்தால் ஆதாரக் கல்வியின் வளர்ச்சிக்கு ஒரே ஒரு கோடியை ஒதுக்குவானேன்? ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்க 72 கோடியை அளிப்பானேன்?

ஆதாரக் கல்வி என்கிற சொற்றொடரை நீண்ட காலமாகச் சொல்லி வந்திருக்கிறது காங்கிரஸ் கட்சி—எனவே அதனைத் திடீரென்று கைவிட்டுவிட முடியாது—ஆனால் ஆதாரக் கல்வியால் ஏற்படக்கூடிய பயனோ பூஜ்யம்!—எனவே அதற்காக அதிகப் பணத்தை ஒதுக்குவதில் பயனும் கிடையாது. ஆதாரக் கல்வியின் வளர்ச்சிக்காக ஏதோ கொஞ்சம் செலவிட்டது போலவும் இருக்கவேண்டும். அதே நேரத்தில் அதற்காக அதிகச் செலவு செய்வதும்கூடாது. செய்வதாலே பயனும் கிடையாது.

இப்படி எண்ணியிருக்கவேண்டும் இந்திய அரசாங்கம். எனவேதான் ஆதாரக் கல்வியை ஒரு கோடியோடு ஒதுக்கித் தள்ளிவிட்டு, புதிய ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்க 72 கோடிகளை அளித்திருக்கிறது.

ஆதாரக் கல்வி யென்பது நாட்டிற்கு ஆகாத கல்வியே என்பதை விளக்க இதைவிடவா வேறு சான்று தேவை?

இவர்கள் தொகையா இத்தனை இலட்சம்?

இப்படித்தான் கேட்கத் தோன்றுகிறது 1951-ல் எடுக்

கப்பட்ட குடி மதிப்புக் கணக்கின் விவரம் ஒன்றைக் காணும் போது.

இந்தியாவில் நகரப் பகுதிகளில் மட்டும் 1,44,489 பேரும், கிராமப் பகுதிகளில் 3,43,418 பேரும், ஆகமொத்தம் சுமார் 5 லட்சம் பேர், பிச்சை யெடுத்தே பிழைக்கின்றனராம். வேறு தொழில் ஏதும் இல்லையாம் இவர்களுக்கு. 1951–ம் ஆண்டின் சென்சஸ் தெரிவிக்கிறது இதுபோல.

இந்தியாவின் எழில்மிகு முகத்திற் காணப்படும் பெரியதோர் களங்கம் இது. விரைவில் இந்தக் களங்கம் போக்கப்படல் வேண்டும். ஆங்காங்கே பிச்சைக்காரர் விடுதிகள் ஏற்படுத்தப்பட்டு, அந்த விடுதிகளில் பிச்சைக்காரர்கள் திரட்டப்பட்டு, பல்வேறு தொழில்களில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, பிறரைப்போல அவர்களும் முழு மனிதர்களாக, பிச்சை யெடுக்கும் பரிதாபம் அற்றவர்களாக மாற்றப்பட வேண்டும். குருடர்கள், முடவர்கள், நொண்டிகள் போன்ற சிலர் உழைக்கவே முடியாதவர்கள் என்று கருதப்படக்கூடும். அது தவறு. அவர்களிடம்கூட பொருத்தமான முறையில் சிறந்த பல ஊழியங்களைப் பெற முடியும். அமர்ந்த இடத்தில் அமர்ந்தபடியே கையால் மட்டும் செய்யக்கூடிய வேலைகள் சில உண்டு. கால்களை இழந்தவர்கள் அத்தகு வேலைகளை மேற்கொள்ள முடியும். சிறிது பழகிவிட்டால், கண்ணால் காணாமலே, கைகளாலும் கால்களாலும் இயக்கக்கூடிய இயந்திரங்கள் பல உண்டு. அத்தகு பணிகளில் பார்வை இழந்தவர்கள் ஈடுபடலாம். கைகள் இல்லையென்றாலும் கால்களாலேயே செய்யக்கூடிய வேலைகள் பல உண்டு. அத்தகு பணிகளைக் கைகளை இழந்தவர்கள் மேற்கொள்ளலாம்.

அரசாங்கம் ஒரு திட்டம் தீட்டிப் பணியாற்றினால் பிச்சைக்காரர்களையே காணமுடியாத ஒரு புதுக்காட்சியை இந்தியாவில் உருவாக்கலாம்.

இங்கிலாந்து போன்ற நாடுகளில் சிற்சில பிச்சைக்காரர்கள் உண்டு. ஆனால் அவர்களும் இங்கேயுள்ள பிச்சைக்காரர்களைப் போலக்கண்டகண்ட இடங்களில் காணப்படமாட்டார்கள். வெளிப்படையாகவும் பிச்சைகேட்கமாட்டார்கள். ஏனெனில் பிச்சை கேட்பது அங்கே கடுந் தண்டனைக்குரிய குற்றம் என்று சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

இங்கிலாந்தில் சிற்சில இடங்களில் பிச்சைக்காரர்கள் உட்கார்ந்துகொண் டிருப்பார்களாம். பிச்சையெடுக்கும்நிலையில் அல்ல. அப்படியிருந்தால்தான் போலீஸ் உடனே பிடித்துக்கொள்ளுமே! பண்டங்களை விற்பவர்கள் என்கிற நிலையில் பிச்சைக்காரர்கள் இருப்பார்களாம்! காலணு விலையுள்ள பொருளை இரண்டணு

(64–ம் பக்கம் பார்க்க)

ஆரம்ப ஆசிரியர்கட்கு வேண்டுகோள்!

ஆரம்ப ஆசிரியர்களே! ஆசிரிய மானேஜர்களே! எயிடட் பள்ளிகளின் தலைவர்களே! பஞ்சாயத்துப் பள்ளிகளின் நிர்வாகிகளே! உங்கள் அனைவருக்கும் ஓர் வேண்டுகோள். சென்ற பதினைந்து ஆண்டுகளாக, "**ஆரம்பக் கல்வி**" என்னும் இந்த இதழ், உங்களுடைய எழுச்சி முரசமாகவும் உரிமைக் குரலாகவும் இருந்து ஒப்பற்ற பணி புரிந்து வருவதை நீங்கள் நன்ருக அறிவீர்கள். ஏராளமான பொருட்செலவையும் பொருட்படுத்தாமல், நாங்கள் இந்த இதழைச் சிறப்புடனும் தொடர்ச்சியாகவும் நடத்தி வருகிறோம் என்ருல் அதற்குரிய ஒரே காணம், ஆசிரியர் உலகத்தின் நன்மைக்காகப் பாடுபட வேண்டும் என்கிற குறிக்கோள் நம்முடைய உள்ளத்தில் ஊறிப்போய் இருப்பது தான். இந்த இதழின் இடைவிடாத பணியால் ஆரம்ப ஆசிரியர்களின் பிரச்சினைகள் நாட்டு மக்களின் கவனத்தைக் கவர்ந்து விட்டன — ஆட்சியாளர்களின் செவிகளிலும் புகுத்திருக்கின்றன என்பது நாடறிந்த விஷயம். ஆசிரியத் தோழர்கட்கு இவ்விதம் பெருநன்மை புரிந்துவரும் ஓர் இதழ் சிறப்புடன் திகழ வேண்டும் என்பதற்காகவே நம்மால் பல பாட புத்தகங்கள் வெளியிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் புத்தக விற்பனை சிறப்புடன் நடைபெற்ருல்தான், ஆசிரியர்களின் இருதய கீதமாகிய இந்த ஏடு, எழிலும் இனிமையும் மிகுந்ததாய்த் திகழமுடியும். இதனை நீங்கள் நன்ருக அறிவீர்கள். அறிந்த காரணத்தால்தான், இத்தனை ஆண்டுகளாக, எங்களுடைய பாடபுத்தகங்களை, உங்களுடைய பள்ளிக்கூடங்களில் வைத்து, எங்களுக்குப் பேராதரவு நல்கியிருக்கிறீர்கள். நீங்கள் இதுவரை காட்டிய ஆதரவுக்கும் அன்புக்கும் எங்களுடைய மனம் கனிந்த நன்றி. இத்தனை ஆண்டுகளாக நீங்கள் ஆதரித்தது போலவே, இந்த ஆண்டிலும் எங்கள் புத்தகங்களை உங்கள் பள்ளிகளில் வைத்து, அதன் மூலமாக "**ஆரம்பக் கல்வி**" இதழுக்கு ஆக்கமும் ஊக்கமும் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். உங்களுடைய பள்ளிக்கூடங்களில் இப் புத்தகங்களை வைப்பதோடு நில்லாமல், அக்கம் பக்கத்திலுள்ள பள்ளிகளிலும் இப் புத்தகங்கள் ஏற்கப்படும்படி உங்களுடைய அன்பு வளரவேண்டும். "ஆரம்பக்

கல்வி''யின் வளர்ச்சி, புத்தகங்களின் வளர்ச்சியையே அடிப்படையாகக் கொண்டிருப்பதனால் ஆரம்பப் பள்ளிகளிலும் உயர்தர ஆரம்பப் பள்ளிகளிலும் நமது புத்தகங்களே பவனி வரும்படி செய்ய வேண்டியது உங்களுடைய நீங்காக் கடமையாகும். ஆதரவு தாருங்கள்—"ஆரம்பக் கல்வி''யை வளருங்கள்.

(62-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று விலை கூறுவார்களாம். வணிகர் கோலத்திலுள்ள அப்பிச்சைக்காரர்களின் நிலைமையை உணர்ந்த இரக்க சிந்தையுள்ளவர்கள், அங்கே சென்று, பண்டத்தின் விலை காலணாதான் என்பதைநன்றாக அறிந்தபோதிலும், இரண்டணாவைக் கொடுத்துவிட்டு, பண்டத்தைப் பெற்றுச் செல்வார்களாம்.

பிச்சையெடுப்பதற்கோ தடை!

மறைமுகமாகப் பிச்சையெடுப்பவர்கள் கையாள்வதோ இவ்வளவு கண்ணியமான முறை!

இது இங்கிலாந்தில்! ஆனால் இங்கோ? மிக மிக விபரீதமான நிலை நிலவுகிறது. இங்குள்ள நிலை மாறவேண்டும்! விரைவில், ஆமாம்! தக்க முறையில் !!

புதிய கல்வி திட்டம் அமுலுக்கு வராது!

மந்திரி சுப்பிரமணியம் அறிவிப்பு

அடுத்த ஜூன் மாதத்தில் புதுக் கல்வித்திட்டம் அமுலுக்கு வராது:பழைய கல்வித் திட்டமே நீடிக்கும் என்று மந்திரி சுப்பிரமணியம் நிருபர்களிடம் கூறினார்.

கல்வி முறைபற்றி ஆராய்வதற்காக டாக்டர் அழகப்ப செட்டியார் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டி ஜூன் மாதத்தில் தான் சிபாரிசுகளை சர்க்காரிடம் தாக்கல் செய்யும்.

அரசாங்கத்தினர் அந்த சிபாரிசுகளை ஆராய்ந்து உடனே முடிவு எடுக்க முடியாது. ஆகவே ஜூன் மாதத்தில் ஆரம்பமாகும் பள்ளிக்கூடத்தில் பழைய திட்டமே (தற்போது உள்ள திட்டம்) தொடர்ந்து அமுலாக்கப்படும் என்று மந்திரி சுப்பிரமணியம் சொன்னார்.

ஆட்சேபம் கிளம்பாதா?

நிருபர்: அடுத்த வருஷம் (1956-ஆம் வருஷம்) பொதுத் தேர்தல் வருகிறது அப்போது புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டு வருவீர்களா? அப்போது ஏதாவது ஆட்சேபம் கிளம்பாதா? இதனால் புதிய திட்டம் அடுத்த வருஷம் கூட வராது அல்லவா? என்று நிருபர் கேட்டதற்கு மந்திரி சிரித்துக் கொண்டே மழுப்பிவிட்டார்.

முக்கிய அறிவிப்பு

"ஆரம்பக் கல்வி பத்திரிகை" இனும்

சென்ற 1954–55 ஆண்டுக்கு எமது வேண்டுகோளுக்கிணங்கி, பற்பல எயிடெட் பாடசாலை மானேஜர்களும், தலைமை ஆசிரியர்களும், பஞ்சாயத்து போர்டு தலைமை ஆசிரியர்களும், எமது **புது முறை சங்க வாசகங்களை** ஒன்று முதல் ஐந்தாவது வகுப்புவரை **வீரபாண்டியன் வாசகங்கள்** 1 முதல் 8–வது வகுப்பு வரையில் பாட புத்தகங்களாக வைத்தும், சிலர் எமது இதர பாட புத்தகங்களைப் பாடசாலையில் வைத்தும், ஆதரித்தமைக்கு எமது அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அம்மாதிரியே 1955–56 ஆண்டுக்கும் மீண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்துவைத்து எமது பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவ்வாண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளும் தலைமை ஆசிரியர்கள், 1955–56–க்குத் தொடர்ந்து வைத்துக்கொள்வதாக, நமது அலுவலகத்திற்கு மே 31–ம் தேதிக்குள் ஒரு கார்டு மூலம் தகவல் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

அவ்விதம் தகவல் அனுப்பும் பாடசாலைகளின் பெயர்கள் 1955–56 ஆண்டுக்கு மறுபடியும் புதிதாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வழக்கம்போல் நமது ஆரம்பக் கல்வி பத்திரிகையை இனமாகத் தொடர்ந்து அனுப்பப்படும். புத்தகங்கள் வாங்கும் புத்தகக் கடை ரசீதுகளை (Cash Bills) அலுவலகத்திற்கு 1955 ஜூன் மாதம் 30–ம் தேதிக்குள் அவசியம் அனுப்பி விடவும். சென்னை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் ஆர்டர்களுக்கு Billகள் அனுப்பத் தேவையில்லை. ஆர்டர்களைக்கொண்டே பெயர்களை ரிஜிஸ்டர் செய்யப்படும்.

ஆர்டர்கள் அனுப்பும்போது கவனிக்க வேண்டியவை :

முன்பு தபாற் கட்டணம் 5 தோலாவுக்கு அரையணவாகயிருந்தது. தற்போது ஓரணவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக சுமார் 20 ரூபாய்க்குப் பெறுமான, சுமார் நாற்பது

புத்தகங்களை தபால் மூலம் அனுப்பப்பட வேண்டுமானால் அதற்கு தபாற் செலவு 5 முதல் 6 ரூபாயாகின்றது. அதாவது 20 ரூபாய்க்குக்கொடுக்கப்படும் 20% கமிஷன் ரூபாய் 4-க்குமேல் தபாற் செலவாகிறது. ஆதலால் புத்தகங்களை ரயில்வே பார்சல் மூலம் வரவழைத்துக்கொள்வது மிகவும் இலாபகரமானது. இரயில்வே செலவு 20 ரூபாய் பெறுமான புத்தகத்துக்கு 1 ரூபாய்க்கு மேல் ஆகாது.

ஆதலால் நேரிடையாகச் சென்னை அலுவலகத்திற்கு ஆர்டர் அனுப்புபவர்கள், மறக்காமல் அருகிலுள்ள இரயில்வே நிலையத்தின் (Railway Station) பெயரை ஆர்டரில் குறிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அப்படிக்குறிக்கப்படாமல் அனுப்பப்படும் ஆர்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுத் தங்கள் பதில் கிடைத்த பிறகே அனுப்பப்படும்.

கமிஷன் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, தபால்மூலம்தான் அனுப்ப வேண்டுமென விரும்புகிறவர்கள் தங்கள் ஆர்டர்களி லேயே அவ்விதம் குறிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இரயில்வே நிலையம் (Railway Station)அருகாமையில்இல்லா தவர்களும், மொத்தமாகச் சென்னையிலிருந்து புத்தகங்களை வரவழைத்துக்கொள்ள வசதி இல்லாதவர்களும், தங்களுக்கு அருகாமையிலுள்ள புத்தக வியாபாரிகளிடம் ஆர்டர் கொடுத்துச் சில்லரையாக வாங்கிக்கொள்வது இலாபகரமானதாகும்.

எல்லாப் புத்தக வியாபாரிகளுக்கும் 20% கமிஷன் கொடுக்கின்றோம். அவர்கள் செலவும், இலாபமும் போகக் குறைந்தது ரூபாய்க்கு 1 அணா ($6\frac{1}{4}$%) கமிஷன் கொடுக்கும்படியாவது கேட்டு வாங்கலாம். 20% கமிஷன் வேண்டுமென்று விரும்புபவர்கள் சென்னை அலுவலகத்திற்கே ஆர்டர்கள் அனுப்பி இரயில்வே நிலையத்தின் (Railway Station) பெயரையும் தவறாமல் குறித்தனுப்பவும். செலவு 5% போக 15% ஆசிரியர்களுக்கு அவசியம் இலாபம் கிடைக்கும்.

நமது பத்திரிகையில், நமது புத்தகங்களை வாங்கி விற்கும் வியாபாரிகளின் பெயர்களை ஜில்லா வாரியாகப் பிரசுரித்திருக்கின்றோம். அவர்கள் மூலம் புத்தகங்களை வாங்கிக்கொள்ளலாம்; தக்க கமிஷன் கொடுப்பார்கள். இன்னும் எங்கள் புத்தகங்கள் அகப்படாத இடங்களில் ஆங்காங்குள்ள வியாபாரிகளை நமது புத்தகங்களை வரவழைத்து விற்கும்படி ஏற்பாடு செய்துக் கொள்ளவும்.

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் கவனிக்க வேண்டியவை

நமது அலுவலகத்தில் ஒன்று முதல் எட்டாவது வகுப்பு வரையில் ஆரம்பப்பாடசாலைகளுக்குத் தேவையான எல்லாப்பாட புத்தகங்களும் பிரசுரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆரம்பப் பாடசாலைகளுக்கு 25 புத்தகங்களும், உயர்தரப் பாடசாலைகளுக்கு 11 புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பாட புத்தகங்களை மாற்றலாமென அரசாங்க உத்தரவில் கண்டிருக்கிறது. ஆதலால் சில பாடசாலைகளில் சிற்சில புத்தகங்களையே மாற்ற வசதியிருக்கும். சில ஆரம்பப் பாடசாலைகளில் எல்லாப் புத்தகங்களையும் மாற்றவசதியாயிருக்கும். அப்பாடசாலைகளுக்கு 25 மாதிரிப் புத்தகங்களை அனுப்புவதென்றால் தபாற்கட்டணம் அதிகமாகின்றது. அப்படி முழு செட்டையும் தபால்மூலம் அனுப்ப எண்ணுபவர்கள் ரூபாய் 7 மணியார்டர் (M. O.) அனுப்பவும். இரயில்வே நிலையம் அருகே உள்ளவர்கள் ரூபாய் 6 அனுப்பினால் முழுசெட் இரயில்வே Paid பார்சல் மூலம் அனுப்பப்படும்.

6 முதல் 8 வகுப்பு வரையில் 11 புத்தகங்கள் தபால் மூலம் பெற விரும்புகிறவர்கள் ரூ. 7–ம் இரயில்வே பார்சல்மூலம் பெற விரும்புகிறவர்கள் ரூ. 6–ம் M. O. அனுப்பவும்.

குறிப்பிட்ட புத்தகங்கள் மட்டும் வேண்டுபவர்கள் ஆரம்பக் கல்விப் பத்திரிகையில் வெளியிட்ட அளவு தபால் பில்லைகள் வாங்கி கவரில் வைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தபால் மூலம் அனுப்பப்படும்.

மாதிரிப் பிரதிகள் அனுப்பப்படும் பாடசாலைகளை ரிஜிஸ்டர் செய்து வருகிறோம். குறிப்பிட்ட பாட புத்தகங்களை ஒரு முறைக்குமேல் எக்காரணத்தைக்கொண்டும் மறுமுறை அனுப்ப முடியாது. அப்படி மறுபடியும் பணம் அனுப்பப்பட்டால் தபாற் செலவு கழித்துக்கொண்டு மீதித் தொகையைத் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

எமது புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

சென்னை

1. M. துரைசாமி முதலியார் & கோ.
புக் செல்லர்
1–1, மலையப்பன் தெரு
சென்னை–1.

2. C. குமாரசாமி நாயுடு & சன்ஸ்
புக் செல்லர்
சைனுபஜார்
சென்னை–1.

3. P. K. Naidu
புக் செல்லர்
1, பத்ரையயன் தெரு
சென்னை–1.

4. பாலகுமார் & கோ
புக் செல்லர்
சைனுபஜார்

5. தாமோதரம் & கோ
புக் செல்லர்
சைனுபஜார்
சென்னை–1.

6. R. அய்யாவு செட்டியார்
புக் செல்லர்
சிந்தாதரிப்பேட்டை
சென்னை–2.

7. ராஜன் வித்யா எம்போரியம்
புக் செல்வர்
வேப்பேரி, சென்னை–7.

8. ராஜா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
78, பெரம்பூர் பாரக்ஸ்
வேப்பேரி, சென்னை–7.

9. திருமலை ஸ்டோர்
புக் செல்லர் & ஜெனரல் மர்ச்சண்ட்
தி. நகர், சென்னை–17.

10. P. T. சாமி & கோ
புக் செல்லர்
நுங்கம்பாக்கம்
சென்னை–6.

11. சரஸ்வதி ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
நுங்கம்பாக்கம், சென்னை–6.

செங்கல்பட்டு

1. லட்சுமணசிங்
புக் செல்லர்
குன்னத்தூர்
வயா—பூந்தமல்லி

2. மோகன் புக் டிப்போ
காஞ்சீபுரம்

3. P. T. மாசிலாமணி முதலியார்
புக் செல்லர்
காஞ்சீபுரம்

4. T. K. முனிரத்தினம்
புக் செல்லர்
திருக்கழுக்குன்றம்

5. M. D. அய்யாசாமி
புக் செல்லர்
கருங்குழி.

வடஆற்காடு

1. A. M. ஜெயராமன்
புக் செல்லர்
திருப்பத்தூர்

2. ஸ்டேஷனரி மார்ட்
புக் செல்லர்
குடியாத்தம்

3. K. M. சாமி & சன்ஸ்
புக் செல்லர்
ஆற்காடு

4. K. V. பிரஸ் புக் டிப்போ
வேலூர்

5. K. M. பாச்சா
புக் செல்லர்
வந்தவாசி

6. எவர் கிரீன் புக் ஷாப்
குடியாத்தம்

7. S. K. வெங்கட்ட கிருஷ்ணு
& கோ
புக் செல்லர்
திருப்பத்தூர்

8. V. D. ரத்தன முதலியார்
புக் செல்லர்
குடியாத்தம்

9. A. M. முனிரத்தின
முதலியார்
புக் செல்லர்
ஆம்பூர்

10. K. J. R. சாமி
புக் செல்லர்
போளூர்

11. A. பாக்கிய முதலியார்
புக் செல்லர்
வேலூர்

12. குருகுல கிருஷ்ணு
ஸ்டோர்
41, லாங் பஜார்
வேலூர்.

13. S. ராமசாமி
புக் செல்லர்
ஆம்பூர்.

14. கிருஷ்ணு ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
வாணியம்பாடி.

15. தேவி லுங்கி கம்பெனி
புக் செல்லர்
சம்பத்ராஜம்பேட்டை

16. ஸ்ரீ லட்சுமி புக் டிபோ
ஆரணி.

17. T. V. C. ஷண்முகம்
புக் செல்லர்
திருவண்ணுமலை

18. N. K பாணி & பிரதர்ஸ்
வேலூர்.
புக்செல்லர்

19. B. ராமகண்ணு செட்டி
& சன்ஸ்
புக் செல்லர்ஸ்
திருவத்திபுரம்

20. கோதண்ட செட்டி
புக் செல்லர்
ஆரணி

21. மாதா ஸ்டோர்ஸ்
கஸ்தூரி மார்க்கட்
ஆற்காடு

23. V. M. ராஜமாணிக்கம்
புக் செல்லர்
திருப்பத்தூர்

24. P. தங்கவேல் பிள்ளை
புக் செல்லர்
திருவண்ணுமலை

25. A. G. முகமது சிபக்துல்லா
ஊல்வி

புக் செல்லர்
பஜார் ஆம்பூர்

26. K. M. கேசவ சேர்வை
மர்ச்சண்ட்
மேலாலங் குப்பம்
குடியாத்தம் P.O.

27. P. C. M. வெங்கட்டராம
செட்டி
ஜெனரல் மரச்சண்ட்
போளூர்

28. T. V. C. கண்ணன்
புக்டிப்போ
மண்டபம்
திருவண்ணமலை

29. P. S. சரவணமுதலியார்
புக் செல்லர்
ராணிப்பேட்டை

30. T. V. C. முனிரத்தின
செட்டியார்
புக் செல்லர்
திருவண்ணமலை

தென் ஆற்காடு

1. A. G. ராஜன் ஸ்டோர்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
பண்ருட்டி

2. K. V. ராஜா செட்டியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
வெல்லயன்குப்பம்.

3. V. B. கணேசன்
புக் செல்லர்
விழுப்புரம்

4. T. R. சுந்தரமூர்த்தி
செட்டியார்
மளிகை & புக்ஷாப்
சங்கராபுரம்

5. கமலா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
பஜார் தெரு
விழுப்புரம்

6. S. V. சாரங்கபாணி
ஜெனரல் மர்ச்சண்ட்
விருத்தாசலம்

7. V. K. M. அருணசல
செட்டியார் & கோ
ஜெனரல் மர்ச்சண்ட்
திருப்பாப்புலியூர்

8. C. C. ராமாநுஜ செட்டியார்
& சன்ஸ்
புக் செல்லர்
சிதம்பரம்.

9. P. முனுசாமி நாயுடு
ஜெனரல் மர்ச்சண்ட்
திண்டிவனம்

10. V. கன்னையா
செட்டியார்
புக் செல்லர்
கல்லக்குறிச்சி

11. S. R. வெங்கடராம
செட்டியார்
ஷாப் மர்ச்சண்ட்
விருதாசலம்

12. P. S. ராஜன் & கோ.
புக் செல்லர்
பண்ருட்டி

13. அம்பிகா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
ஆநந்தபுரம்

14. G. சம்பந்த முதலியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
திண்டிவனம்.

15. R. ஜெயராம் நாயுடு
மளிகை
ஆண்டிமடம்

16. குமரன் டிரேடிங் அவுஸ்
46, லாரன்ஸ் ரோடு
திருப்பாப்புலியூர்

17. S. கோவிந்தசாமி செட்டி
ஜெனரல் மர்ச்சண்ட்
குறிஞ்சிபாடி

18. R. தக்ஷிணாமூர்த்தி
ஜெனரல் மர்ச்சண்ட்
குறிஞ்சிபாடி

19. C. N. R. செந்தி
விநாயகம் செட்டியார்
இரும்பு வியாபாரம்
வளவனூர்

20. கேசவலு செட்டியார்
புக் செல்லர்
திண்டிவனம்

21. T. ராஜகோபாலன்
புக் செல்லர்
கிருஷ்ணபுரம்
செஞ்சி—P. O.

22. G. பார்த்தசாரதி
அய்யங்கார்

புக் செல்லர்
19, மேற்கு சந்நதி
சிதம்பரம்

23. பாரதி ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
ஆநந்தபுரம்.

24. K. S. அப்துல் ஜபார்
ராவுத்தர்
புக் செல்லர்
மேல் சித்தாமூர் P. O.
திண்டிவனம் Tk.,

25. N. கண்ணப்ப முதலியார்
புக் செல்லர்
சத்தம்பாடி P. O.
செஞ்சி Tk.

26. C. P. S. புக் ஷாப்
சிதம்பரம்.

27. R. அர்க்காலி
ஜெனரல் மர்ச்சண்ட்
செஞ்சி

தஞ்சை

1. மனோன்மணி விலாஸ்
புக் டிபோ
விஜயபுரம்
திருவாரூர் Tk.

2. இராமலிங்கா புக் டிபோ
விஜயபுரம்
திருவாரூர் Tk.

3. K. கோவிந்தசாமி பிள்ளை
& பிரதர்ஸ்
மளிகை
பந்தணை நல்லூர்
வயா, குத்தாலம்

4. R. ஸ்ரீனிவாச நாயுடு
புக்செல்லர்
மாயூரம்

5. சன்மார்க்க கலா நிலையம்
வள்ளுவர் இல்லம்
ஆக்கூர்

6. P. V. நாதன் & கோ
புக் செல்லர்
கும்பகோணம்

7. பிரகாஷ் டிரேடர்ஸ்
புக் செல்லர்
கும்பகோணம்

8. M. கணபதி
புக் செல்லர்
காசிக்கடை தெரு
திருத்துறைப் பூண்டி

9. ஸ்ரீ நாராயண புக் ஸ்டால்
காந்தி ரோட்
மன்னார்குடி

10. R. ராமாநுஜம் நாயுடு
புக் செல்லர்
மாயூரம்

11. திரு. வள்ளாலர் புக் டிப்போ
த. பழூர்.

12. பாரதமாதா புக் டிப்போ
93 ஏல்லையம்மன்
கோவில் தெரு
தஞ்சை

13. குமரன் ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
மாயூரம்

14. விஸ்வநாத செட்டியார்
ஷாப் மர்ச்சண்ட்
நாகூர் தஞ்சை

திருச்சி

1. முத்து புக் டிப்போ
மைலம் சந்தை
திருச்சி

2. T.A. பச்சையப்ப முதலியார்
புக் செல்லர்
பொன் பரப்பி
Ponparappi

3. T. பெரியசாமி பிள்ளை
ஜெனரல் மர்ச்சண்ட்
பெரம்பலூர்

4. பழனியப்ப பிரதர்ஸ்
புக் செல்லர்
தெப்பக்குளம்
திருச்சி

5. S. B. பாலநாகய்ய செட்டியார்
புக் ஷாப்
கரூர்

6. C. M. நடேசன்
புக் செல்லர்
அரியலூர்

7. பழனி ஆண்டவன்
புக் டிபோ
தெப்பக்குளம்
திருச்சி

8. R. சின்னப்பன்
News paper Merchant
அரியலூர்

9. சென்னப்ப ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
தாத்தய்யங்கார் பேட்டை

10. நாதன் விலாஸ்
புக் டிப்போ
கீழ் பழூர்
வயா அரியலூர்

11. V. ஜெகதீசன்
புக் செல்லர்
பட்டுக் கோட்டை

12. சரஸ்வதி ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
கோனப்பட்டி

13. B. கோவிந்தராவ்
புக் செல்லர்
துறையூர்

மதுரை

1. ராமசாமி
புக் செல்லர்
பழனி

2. V. ராமசாமி செட்டியார்
புக் செல்லர்
லண்டக் கோட்டை

3. ஸ்ரீ மீனாட்சி & கோ
புக் செல்லர்
புது மண்டபம்
மதுரை

4. H. M. முகமது மொகிதீன்
ஷாப்
ஊசியலம்பட்டி

5. S. முத்துசாமி
புக் செல்லர்
போடிநாயகனூர்

6. M. நடன சுந்தரம்
பிரதர்ஸ்
புக் செல்லர்
புது மண்டபம்
மதுரை

7. K. கிருஷ்ணமாச்சாரி
ஷாப்மர்ச்சண்ட்
திலக் கோட்டை

8. P. K. A. குழந்தை வேலு
நாடார்
புக் செல்லர்
திண்டுக்கல்

9. S. V. S. சிவராம லிங்க
நாடார்
புக்ஷாப்
திருமங்கலம்

10. M. தக்ஷிணாமூர்த்தி
& கோ
புக் செல்லர்
புதுமண்டபம்
மதுரை

11. P. L. அருணாசல முதலி
யார் அண்டு சன்ஸ்
எஜுகேஷனல்
பப்ளிஷர்
புது மண்டபம்
மதுரை

12. கணேசன் ஸ்டோர்ஸ்
காந்தி ரோடு
பழனி

13. K. V. அரபாஷா ராவுதர்
அண்டு சன்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
ஒட்டன் சத்திரம்

14. V. ஆறுமுகம் பிள்ளை
ஷாப் மர்ச்சண்ட்
பெரியகுளம்

15. S. K. காளி முத்து
செட்டியார்
ஷாப் மர்ச்சண்ட்
போடிநாயகனூர்

16. K. P. R. சாரங்கபாணி
செட்டியார்
ஷாப் அண்டு ஜனரல்
மர்ச்சண்ட்
பழனி

K. V. நாராயண அய்யர் சன்ஸ்
புக்செல்லர்
மெயின்ரோட்
திண்டுக்கல்

18. அமீதியா ஸ்டோர்ஸ்
ஷாப் மர்ச்சண்ட்
பேரையூர்

19. S. M. சோமய்யா
ஷாப்
சின்னக் கடை வீதி
திருமங்கலம்

20. ஜெனரல் ஸ்டோர்ஸ்
30. பெரிய கடை வீதி
பழனி

21. T. S. குருசாமி நாடார்
ஜெனரல் மர்ச்சண்ட்
கள்ளிகுடி

22. V. முத்து தேவர்
தனலக்ஷ்மி ஸ்டோர்ஸ்
சில்வார் பட்டி

23. K. சிவசுப்பிரமணி
ஷாப் மர்ச்சண்ட்
போடி நாயகனூர்

24. S. P. சூரியநாராயண
பிள்ளை
புக் ஷாப்
மெயின்ரோட்
திண்டுக்கல்

25. S. P. M. தங்கமணி
& பிரதர்ஸ்
ஷாப்
கள்ளி குடி

26. அருணா ஸ்டோர்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
ஊசிலம்பட்டி

27. S. S. இராஜன்
புக்செல்லர்
புதுமண்டபம்
மதுரை

ராமநாதபுரம்

1. T. அமிர்தம்
ஷாப்
கல்லூரணி

2. A. V. வேல் முருக நாடார்
புக் ஷாப்
கள்ளிச் சேரி
துலுக்கப்பட்டி P.O.

3. K. S. பிள்ளை & சன்ஸ்
புக் செல்லர்
ராஜ பாளையம்

4. S. நடராஜ நாடார்
புக் ஷாப்
அருப்புக்கோட்டை

5. K. M. S. சோமசுந்தரம்
செட்டியார்
புக் ஷாப்
ராமநாதபுரம்

6. M. M. சின்னசாமி பிள்ளை
& சன்ஸ்
புக் செல்லர்
ஸ்ரீ வில்லிப்புத்தூர்

7. அருணா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
ராமநாதபுரம்

8. S. T. சாமி & சன்ஸ்
புக் ஷாப்
ராமநாதபுரம்

9. ஸ்ரீ மாரியம்மன்
ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
விருதுநகர்

10. V. பானுசாமி செட்டியார்
புக் ஷாப்
காரைக்குடி

11. T. முத்துசாமி நாடார்
மர்ச்சண்ட்
சிட்டி பஜார்
அருப்புக்கோட்டை

12. ராஜா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்ஸ்
ஸ்ரீ வில்லிப் புத்தூர்

13. M. M. S. ராமசாமி
செட்டியார்
புக் செல்லர்
பரமகுடி

14. M. S. கருப்பைய்ய
நாடார்
புக் செல்லர்
சாத்தூர்

15. ஸ்ரீ கண்ணன் ஸ்டோர்
தியாகிகல் ரோட்
தேவக்கோட்டை

16. ராணி ஸ்டோர்ஸ்
வண்டிக்கார தெரு
ராமநாதபுரம்

17. C. முத்து
ஷாப் மர்ச்சண்ட்
இளையான் குடி

18. பூதக பண்ணை
ஆர்ச்
தேவக்கோட்டை

91. A. R. முத்து பானு செட்டி
புக் செல்லர்
சாலையூர்
இளையான் குடி

20. S. G. ரோசரி
புக் செல்லர்
புதிய குடி
சாயல் குடி P.O.

21. கலா நிலையம்
புக் செல்லர்
கரைக்குடி

22. K. S. ஷாவுல் ஹமீத்
ஜெனரல் மர்ச்சண்ட்
முஸ்லிம் பஜார்
கீழக்கரை

23. O. R. A. ஷேக் தாவுத்
& கோ
புக் செல்லர்
அபிராமம்

24. C. M. M. முகமது
காஸிம்
ஜெனரல் மர்ச்சண்ட்
முதுகுளத்தூர்

25. M. S. அண்ணாமலை
நாடார்
ஜெனரல் மர்ச்சண்ட்
சாத்தூர்

26. S, நடராஜ நாடார்
ஷாப் மர்ச்சண்ட்
அருப்புக்கோட்டை

27. S. C. சங்கம ரெட்டியார்
மளிகை
மெயின் பஜார்
விருது நகர்

28. R. கருப்பய்யா
புக் செல்லர்
பெட்டி கடை
சாயல் குடி P.O.

திருநெல்வேலி

1. ஸ்ரீ கோபாலன் ஸ்டோர்
புக் செல்லர்
சங்கரன்கோயில்

2. U. R. பாபநாசம் பிள்ளை
புக் செல்லர்
வீரவநல்லூர்

3. டவுன் பிரஸ்
புக் செல்லர்
கோவில்பட்டி

4. K. S. முத்து
பாணிஸ் புக் டிப்போ
கள்ளி குளம்

5. M. ஷண்முகம் பிள்ளை
புக் செல்லர்
கோவில்பட்டி

6. ஸ்ரீ கோபாலன் அண்டு கோ
புக் செல்லர்
கோவில்பட்டி

7. A. S. C. சோனமுத்து
நாடார் அண்டு கோ
புக் செல்லர்
பெரியகடை வீதி
கோவில்பட்டி

8. ஸ்ரீ ஷண்பகவள்ளி
புக் ஷாப்
கோவில்பட்டி

9. ஸ்ரீ முருகன் ஜெனரல்
ஸ்டோர்ஸ்
தென்காசி

10. டயோசீஸன் புக் டிப்போ
பாளையங்கோட்டை

திருநெல்வேலி

11. J. A. செலஸ்டயின்
பெர்னன்டோ
புக் செல்லர்
வீரப்பாண்டியன் பட்டணம்

22. நேஷனல் ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
எருவாடி

சேலம்

1. சக்ரபாணி செட்டி
புக் செல்லர்
இராசிபுரம்

2. L.M. நாகமய்யா செட்டியார்
புக் செல்லர்
ஆத்தூர் சேலம்

3. A.K. சந்திரய்ய செட்டியார்
புக் செல்லர்
(Fort) சேலம்

4. பரமசிவம் பிள்ளை அண்டு
சன்ஸ்
புக் செல்லர்
செவ்வாப்பேட்டை

5. M. S .R. பொன்னுசாமி
முதலியார் அண்டு சன்ஸ்
மளிகை
பாப்பாரப்பட்டி

6. ஸ்ரீ சாய் ஜெனரல் ஸ்டோர்
புக் செல்லர்
1–வது அக்ரகாரம்
சேலம் டவுன்

7. D. A. மாணிக்க செட்டி
புக் செல்லர்
தர்மபுரி

8. ராக் அவுஸ்
புக் செல்லர்
நாமக்கல்

9. மவுண்ட் அவுஸ்
புக் செல்லர்
நாமக்கல்

10. G. ராமசந்திர நாயுடு
ஸ்ரீராம விலாஸ் புக்ஷாப்
ஓமலூர்

11. D. A. நந்த கோபால்
புக் ஷாப்
தர்மபுரி

12. M. N. சுப்பிரமணிய
முதலியார்
யார்ன் மர்ச்சண்ட் அண்
புக் செல்லர்
திருச்சங்கோடு

கோயம்புத்தூர்

1. K. O. பேட்டை கவுடர்
புக் செல்லர்
கோயம்புத்தூர்

2. P. R. S. மணியம்
பல்லடம் ரோட்
திருப்பூர்

3. கவிஞர் பதிப்பகம்
241, ராஜா தெரு
கோயம்புத்தூர்

4. C. R. நடராஜன் அண் சன்
கிருஷ்ண விலாஸ் புக் டிப்போ
பெரிய கடை தெரு
கோயம்புத்தூர்

5. M. K. சுப்பிரமணியன்
ஷாப் அண்டு புக் மர்ச்சண்ட்
வால்பாரை

6. ஷண்முகாநந்த புக் டிப்போ
கோபிசெட்டி பாளையம்

7. S. S. பானுசாமி செட்டி
புக்ஸ் அண்டு ஸ்டேஷனரி
மர்ச்சண்ட்
சத்தியமங்கலம்

8. தண்டபாணி ஸ்டோர்ஸ்
ஷாப் அண்டு புக் செல்லர்
தாராபுரம்

9. K. V. N. கவுண்டர்
அண்டு கோ
ஜெனரல் மர்ச்சண்ட்
பெருந்துறை

10. N. பழனிசாமி கவுண்டர்
அண்டு கோ
புக்செல்லர்ஸ் அண் ஸ்டேஷனரி
14/16 பல்லடம் ரோடு
திருப்பூர்

11. U. S. நாகமாணிக்கம்
செட்டியார்
புக் செல்லர் அண்டு ஜெனரல்
மர்ச்சண்ட்
டாலி ரோடு
உடுமலைப்பேட்டை

12. A. L M. பொன்னுசாமி
முதலியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
அந்தியூர்

13. பாலதண்டாயுதம்
செட்டியார்
புக் செல்லர்
32, பஜார் தெரு
பொள்ளாச்சி

14. ஜெயம் அண்டு கோ
புக் செல்லர்
ஈரோடு

15. டைமன் ஜூப்லி
புக்ஸ் & ஸ்டேஷனரி டிப்போ
கோபிச்செட்டிபாளையம்

16. ராஜா புக் ஷாப்
டாலி ரோட்
உடுமலைப்பேட்டை

17. சிவலிங்க விலாஸ்
புக் டிப்போ
ஈரோடு

18. பாலசுப்பிரமணியம்
செட்டியார் அண்டு சன்ஸ்
புக் செல்லர் & ஸ்டேஷனர்ஸ்
பொள்ளாச்சி

19. A. A. குட்டியப்பா
முதலியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
ராஜா தெரு
அந்தியூர்

20. கருப்பண்ண கவுடர்
புக் செல்லர் அண் ஸ்டேஷனரி
ராஜா தெரு
கோயம்புத்தூர்

நீலகிரி

1. அறிவு நூலகம்
புக் செல்லர்
உதகமண்டலம்

2. M. குமாரசாமி அண் சன்ஸ்
புக் செல்லர்
மார்க்கட்
கூனூர்

3. T. M. ஆரோக்கியசாமி
அண் சன்ஸ்
புக் செல்லர்
மார்க்கட்
உதகமண்டலம்

4. T. R. மீரா மொஹிதீன்
புக் செல்லர்
மார்க்கட் கூனூர்

5. S. நாகப்ப செட்டியார்
புக் செல்லர்
மார்க்கட், கூனூர் R. S.

6. I. B. J. நந்தி கவுடர்
& கோ
ஜெனரல் மர்ச்சண்ட்
உதகமண்டலம்

(89-ம் பக்கத் தொடர்ச்சி)

போடுவது பக்திச் செயல்களிலே என்று எண்ணிடும் அளவுக்குப் பிற்கால வைதீகத் தமிழர்கள் குருட்டு நம்பிக்கையை அதன் மீது ஏற்றிக் கொண்டாடி வரலாயினர்.

'உ' என்ற அறிகுறி எதற்கு எழுதுகிறோம், ஏன் எழுதுகிறோம் என்ற உண்மை விளக்கம் தெரியாமல், அதனைப் 'பிள்ளையார் சுழி'யாக மாற்றினதுபோல, மதபக்திகொண்டோர் அவரவர் பக்திக் கேற்ப 'சிவபெருமான் துணை' 'முருகன் துணை', 'கண்ணன் துணை', 'திருமால் துணை' என்று பல் வேறுவிதமாக மாற்றிக் கொள்ளவும் செய்தனர். சிலர் 'பிள்ளையார் சுழி'யையும் போட்டுத், தமக்கு வேண்டிய வேறு சில 'துணை'களையும் போட்டுக்கொண்டனர்.

(மன்றம்)

சென்ற இதழ் தொடர்ச்சி :—

பிள்ளையார் சுழி

(இரா. நெடுஞ்செழியன்)

'உ' என்ற குறியீடு, பிள்ளையார் வருவதற்குப் பன்னெடுங்காலத்திற்கு முன்புதொட்டே, பழந்தமிழ் நாகரிகத்தோடு ஒன்றி நின்றுவந்த பழக்கமாகும் என்று துணிவதற்கு இடமிருக்கிறது.

மிக அண்மைக்காலம் வரையில், தமிழகம், எழுத்தாணி கொண்டு பனையோலையில் எழுதும் நாகரிகத்தைதான் கொண்டிருந்தது. தமிழ் எழுத்துக்கள் எல்லாம் பண்டைக்காலந் தொட்டே வட்டக்கோடுகளாலும், நீட்டக்கோடுகளாலும் எழுதப்பட்டு வருபவையாகும். எழுதப்படும் பனையோலைகளெல்லாமும் எப்பொழுதும் பண்பட்ட பனையோலைகளாக இருப்பதில்லை. சில பனையோலைகள் மிகவாகப் பழுத்து மழையில் நன்கு ஊறிக் கிடந்து, வெய்யிலில் மிகக் காய்ந்துவிடுமேயானல், அப்படிப் பட்ட ஓலைகளில் எழுத முற்பட்டால், அவை ஒடிந்து, நொறுங்கித், தூள்தூளாகிவிடும். சில வேளைகளில் எழுத்தாணி மிகக் கூர்மையாகத் தீட்டப்பட்டிருக்குமேயானல், அதனைக்கொண்டு பனையோலைகளில் எழுதும் போது, பனையோலைகளில் எழுத்துக்களுக்குப் பதிலாகப் பொத்தல்கள் விழுந்துவிடும். இப்படிப் பட்டக் குறைபாடுகளை எழுதுவதற்கு முன் கூட்டியே தெரிந்து கொண்டால், நேரமும் உழைப்பும் வீணுகாமல் இருக்குமே என்று கருதிப், பனையோலையின் பதத்தையும் எழுத்தாணியின் கூர்மையையும் ஆராய்ந்தறிவதற்காக '◯' என்ற ஒருவட்டக்கோட்டையும் (—) என்ற ஓர் நேர்க்கோட்டையும் இழுத்துப் பார்க்கப்பழகிக் கொண்டனர் பண்டைக் காலத் தமிழ் மக்கள். ஒரு வட்டக்கோட்டையும் (◯) ஒரு நேர்க்கோட்டையும் (—) இழுத்துப்பார்க்கும் பயிற்சிதான் 'உ' என்பதாகும். இந்த அறிவுக்கொத்த, இன்றியமையாத பழக்கத்தின் உண்மை விளக்கத்தை அறிந்துகொள்ளாத — அறிந்து கொள்ள முயற்சி செய்யாத பிற்காலத்து மக்கள், 'மத பக்தி'யில் மிதமிஞ்சி மூழ்கிப் போயிருந்த காரணத்தால், அந்த 'உ' என்ற குறியீட்டிற்குத் 'தெய்வீகத்'தைக் கற்பித்து, அதற்குக் கண் காது, மூக்கு, முழி, வாய் வயிறு, தொந்தி துதிக்கை, மூஞ்சூறு வாகனம் கொழுக்கட்டை உணவு எல்லாம் வைத்து, அதனைப் **'பிள்ளையார் சுழி'**—ஆக்கிவிட்டு விட்டனர்.

'உ' என்பது ஓலையையும் ஆணியையும் சரி பார்த்துக் கொள்வதற்கான 'அறிகுறி' என்று எண்ணுமல், அப்படிப்

(88–ம் பக்கம் பார்க்க)

உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு

(For Higher Ele Schools)

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

(Vidwan- V. Subramaniam)

ஆறாம் வகுப்பு	0	12	0	23	19-5-'54
ஏழாம் வகுப்பு	0	14	0	41	19-5-'54

மாதிரிப் பிரதிகளுக்கு 0-14-0 அனுப்பவும்.

புதுமுறை சங்கக் கணிதங்கள்

(V. K. Seshadri, B. A., L. T., & V. S. Leela B. A., B. T.)

ஆறாம் வகுப்பு	1	2	0	15	19-5-'54
ஏழாம் வகுப்பு	1	4	0	15	19-5-'54
எட்டாம் வகுப்பு	1	4	0	16	19-5-'54

மாதிரிப் பிரதிகளுக்கு 2-0-0 அனுப்பவும்.

சமூக நூல்

(T. S. Umapathy, M. A., L. T.)

ஆறாம் வகுப்பு	1	4	0	38	19-5-'54
ஏழாம் வகுப்பு	1	8	0	38	19-5-'54
எட்டாம் வகுப்பு	1	8	0	38	19-5-'54

மாதிரிப் பிரதிகளுக்கு 2-4-0 அனுப்பவும்.

அநுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

ஆறாம் வகுப்பு	0	12	0	41	19-5-'54
ஏழாம் வகுப்பு	0	12	0	41	19-5-'54
எட்டாம் வகுப்பு	0	12	0	41	19-5-'54

மாதிரிப் பிரதிகளுக்கு 1-2-0 அனுப்பவும்.

Edited, Printed and Published by P. Veeraraghavan at the 'Venkatesan Press' 94,95 New St. Mannady, Madras

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	4	0	25	19–5–'54
இரண்டாம் வகுப்பு	0	5	0	25	19–5–'54
மூன்றும் வகுப்பு	0	8	0	25	19–5–'54
நான்காம் வகுப்பு	0	9	0	25	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	10	0	25	19–5–'54

மாதிரிப் பிரதிக்கு 1–2–0 அனுப்பவும்.

கதைப் புத்தகங்கள்

(S. S. அருணகிரிநாதர்)

பாலர் நல்ல கதைகள்					
நான்காம் வகுப்பு	0	5	0	28	19–5–'54
பாலர் கதா போதினி					
ஐந்தாம் வகுப்பு	0	5	0	29	19–5–'54

இந்த இரண்டு புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0–5–0 அனுப்பவும்.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

(M. விவேகானந்தா, B. Sc., L. T..)

மூன்றும் வகுப்பு	0	5	0	...	...
நான்காம் வகுப்பு	0	7	0	18	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	8	0	18	19–5–'54

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் 0–10–0 அனுப்பவும்.

புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B.A.,L.T.)

மூன்றும் வகுப்பு	0	5	0	11	19–5–'54
நான்காம் வகுப்பு	0	7	0	8	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	8	0	8	19–5–'54

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0–10–0 அனுப்பவும்.

Regd No. M. 5018.

புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A.,L.T.,

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மூன்றும் வகுப்பு	0 8 0	14	19–5–'54
நான்காம் வகுப்பு	0 10 0	14	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0 12 0	14	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 0–15–0 அனுப்பவும்.

நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூர்த்தி, B. A , B. T.,
T. S. உமாபதி, M. A., L. T.

மூன்றும் வகுப்பு	0 5 0	11	19–5–'54
நான்காம வகுப்பு	0 7 0	8	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0 9 0	10	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 0–11–0 அனுப்பவும்.

தமிழ் இலக்கணம்

T. S. உமாபதி, M.A.,L.T.

4, 5–வது வகுப்புகளுக்கு (ஜூன் 1955 கெஜட்டில் பார்க்கவும்.) 0 5 0

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 0–2–0 அனுப்பவும்.

சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.,

இரண்டாம் வகுப்பு	0 5 0	13	19–5–'54

V. K. சேஷாத்திரி, B. A., L. T.

மூன்றும் வகுப்பு	0 7 0	12	19–5–'54
நான்காம் வகுப்பு	0 10 0	12	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0 12 0	12	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 1–1–0 அனுப்பவும்.

Mother India English Reader Primer - I 0—5—0

மாதிரிப் பிரதிகளுக்கு 0–2–0 அனுப்பவும்

Printed at the Venkatesan Press, Madras—1.